KALKI
13.4.1969
40 காசு

கல்கி

புத்தாண்டு மலர்





ரெக்ஸ் ~ தரம் ஊரறிந்த உன்னதம்!

இப்போது மற்றும் ஒரு கவர்ச்சி- அதன் விலை நயம்

எங்கள் ஸ்க்வாஷ்கள் மிகமிக நேர்த்தியான பழங்களாகப் பார்த்துப் பறித்து அவற்றிலிருந்து தயாரிக்கப் பட்டவை. பிறகு தூய சீனிப்பாகும் விசேஷமான இதர சரக்குகளும் சேர்க்கப் பட்டவை. எனவே சுவைத்தறியாத புத்துணர்ச்சி தரும் பானமாக உங்களை அடைகிறது —ரெக்ஸ்.




கார்ன் பராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய்–1.

Benson 1911/TM



Criterion-TSR-2144





பொருளடக்கம்

சௌமிய. சித்திரை 1உ :- 1969 ஏப்ரல் 13உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே சம்பவங்களும் கற்பனையே.



மூலமறையினைகிர் மூலமாக்கும் அலங்
கோலக்கலியுகத்தில் கீலகம் முடிந்து
மேலுமோர்வருடம் மேவும் வேளையில்
ஞாலமெங்கும்உயர் சீலம் பொலியவே
காலவெள்ளமதைச் சாலவே கடந்த
கோலமாமுனிசெங் கோல் உயர்கவே !



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 ★ இதழ் 37

புத்தாண்டின் தேவை: புது விழிப்பு

புதிய வருடத்தின் பெயர் ''ஸௌம்மிய'' என்பது. சந்திரனுக்கு ஸோமன் என்று பெயர். சந்திரன் போல் குளிர்ச்சியும், மென்மையும், ஒளியும் பொருந்திய பாங்கே ஸௌம்மியம். வேத காலத்தில் மேற்கூறிய பாங்குகளோடு நல்லறிவு நாட்டமும் கொண்டிருந்த மாணுக்கர்களை 'ஸௌம்யா' என்றே முனிவர்கள் அழைத்தார்கள். புத்தி சக்தியின் உருவான புதனுக்கு ஸௌம்மியன் என்று பெயர். இதயத்தின் அழகுக்கும், அறிவின் அழகுக்கும் ஒருங்கே அடையாளமானது 'ஸௌம்மிய'.

சந்திர மண்டலப் பிரயாணத்துக்கு வல்லரசுகள் முயலும்போது, நமக்குள்ளேயே சந்திரனின் சிறப்பு அம்சங்களை நிரப்பிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதே போல் பிறக்கிறது ஸௌம்மிய வருடம்.

மக்கள் உறக்கம் கொண்டு அமைதி பெறுகிற இரவுக்கு அதிபதி சந்திரன். இந்த ஸௌம்மிய வருடத்திலோ மக்கள் உறக்கத்தையும், சோர்வையும் தள்ளி விட்டுப் புதிய விழிப்புப் பெறுவதற்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டுள்ளது.

தேசத்தில் ஐக்கிய சக்திகள் நலிந்து வருகின்றன; நாச வேலைக்காரர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்று எழுச்சி கொண்டிருக்கிறார்கள்; பொருளாதாரம், பாதுகாப்பு இரண்டுமே தேசத்தின் நிர்வாகம் வேறு கைகளுக்கு மாற வேண்டிய நிலையை உணர்த்துகின்றன.

இந்த நெருக்கடியில் டில்லி சர்க்காருக்கு இல்லாத உறுதியும், தெளிவும், அவசர உணர்வும் மக்களுக்குப் பிறந்தாக வேண்டும்.

தேசத்திலுள்ள பிரச்னைகளைத் தவிர, தமிழகம் தனி விழிப்புடன் கவனிக்க வேண்டிய இரு பிரச்னைகள் உள்ளன.

வானம் பொய்த்ததால் பஞ்சநிலையை ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். டில்லி நமது இன்னலை உணர்ந்து உதவி புரியும் என்று நம்புகிறோம். நமக்குரிய கஷ்ட நிவாரணத்தைப் பெற உறுதியுடன் முயலுவோம்.

நாம் தரும வழியில் நின்று, இறைவனை நம்பி வாழ்க்கை நடத்தினால் இயற்கைச் சக்திகள் நிச்சயம் நமக்கு அநுகூலமாகும் என்ற உணர்வைப் பெறுவோம்.

தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இன்னொரு தனிப் பிரச்னை, ஆட்சிமொழி விவகாரமாகும். தமிழ்நாடு கல்வித் திட்டத்தில் மும்மொழிக் கொள்கையை அகற்றிவிட்டதால் ஆங்கிலத்தைக் காலவரையறையின்றி நீடிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும், **இது மற்ற பல ராஜ்யங்களால் ஏற்கவொண்ணாததாக இருக்கும்** என்றும் யூனியன் உள்துறை மந்திரி தமிழக அரசாங்கத்துக்கு எழுதியிருப்பது நமக்கெல்லாம் எச்சரிக்கையாகும்.

மற்ற ராஜ்யங்களால் 'ஏற்கவொண்ணாமல்' இருப்பதற்குக் காரணம் ஆங்கில நீடிப்பில் இயற்கையாக ஏதோ சிரமங்கள் உள்ளடங்கியிருப்பது அல்ல. அல்லது ஆங்கிலத்தை நீடிப்பதால் சம நீதிக்குப் பங்கம் ஏற்படுவதாகவோ இது காரணமாக அது 'ஏற்கவொண்ணாதது' என்று சொல்வதற்கோ இடம் இல்லை. மற்ற ராஜ்யங்களின் குறுகிய மனப்பான்மை ஒன்றுதான் அவை ஆங்கில நீடிப்பை 'ஏற்கவொண்ணாததாக'க் கருதுவதற்குக் காரணம். சம நீதியையும் நிர்வாகத் திறனையும் பகுத்தறிவுடன் கவனித்தால் நமது ஒரே நிருவாக மொழியாக ஆங்கிலம்தான் காலவரையறையின்றி நீடிக்க வேண்டும் என்பது புரியும். மற்ற ராஜ்யங்களுக்கு ஆங்கிலம் ஏற்கத் தக்கதல்ல எனில், எப்போதும் நம் தலைமேல் ஹிந்தி என்ற கத்தியை மயிரிழையில் கட்டித் தொங்க விடுவது நமக்கு ஒருகாலும் ஏற்கத் தக்கதல்ல. இப்படிக் கூறுவதற்கு வெறும் மன உணர்ச்சி மட்டும் காரணமல்ல. இதுவே பாரபட்சமற்ற சமநீதிக்கும் உகந்தது. ராஜ்யங்களின் எண்ணிக்கையைக் கணக்கிடமல் வாதத்தின் தருமத்தை வைத்தே முடிவு செய்ய வேண்டும். புத்தாண்டில் தமிழ் மக்கள் இந்த அம்சத்தில் புதிய விழிப்புடன் இருப்பார்களாக!



என்ன சேதி?

கம்பன் விழாவில் முதல்வர்

ஆண்டுதோறும் காரைக்குடியில் கம்பர் விழா நடக்கத்தான் செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கம்பர் விழாவில் திரு சா. கணேசன் புதுமை நிகழ்த்திக் கொண்டுதானிருக்கிறார். இந்த ஆண்டு அவர் நிகழ்த்திய புதுமையைப் போல் எந்த ஆண்டும் அமைந்ததில்லை. நமது முதல்வர் திரு மு. கருணாநிதி அவர்களுக்கு கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்க வாய்ப்பளித்ததைத்தான் குறிப்பிடுகிறோம். அதற்கு நாம் திரு சா. கணேசன் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

காரைக்குடி கம்பன் விழாவிலே கம்பனுடைய கவிதா விலாசத்தையும் கம்பனுடைய தமிழ்ச் சொல்லாட்சியையும் வெகுவாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார் முதல்வர் திரு மு. கருணாநிதி. காரைக்குடி கம்பர் விழா கம்பனைப் பாராட்டி ஆராயும் விழா. அந்தச் சூழ்நிலைக்கும் வரன்முறைக்கும் ஏற்ப முதல்வர் பேசியிருப்பது அவருடைய நாவன்மையைக் காட்டுகிறது. ''கதாபாத்திரங்களின் மூலமாகப் பேசப்படுகிற தமிழ் இருக்கிறதே—அந்தக் கதாபாத்திரம் மூலமாகக் கம்பன் வடித்திருக்கிற உவமை இருக்கிறதே—அதன் மூலமாக அவன் தமிழுக்கு ஆற்றியிருக்கின்ற தொண்டு இருக்கிறதே — அவை தமிழ் உள்ளளவும் தமிழ் நாடு உள்ளளவும் பாராட்ட வேண்டிய பெருமை மிகுந்ததாகும் என்பதை நாம் மறுப்பதற்கில்லை'' என்று பேசியிருக்கிறார்.

''கம்ப நாடன் கவிதையிற்போல்
கற்றோர்க்(கு) இதயம் களியாதே!''

என்பது ஆன்றோர் மெய்மொழியன்றோ!

புது வருடத்துக்கு இதைவிட மகிழ்வூட்டும் செய்தி தமிழ் மக்களுக்கு என்ன உண்டு?

ஒரு கௌரவப் பதவி

அகில இந்திய மேயர் கவுன்சில் தலைவராகச் சென்னை மேயர் வேலூர் நாராயணன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்தப் பெரும் கௌரவத்தைத் தி. மு. க உறுப்பினரான மேயருக்கு அகில இந்தியக் கவுன்சில் வழங்கியிருப்பது பாராட்டுக்குரிய விஷயம். தென்னகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இப்பதவியளிப்பது இதுதான் முதல் தடவையாகும். இப்பதவி காலம் இரண்டு ஆண்டு காலம் நீடிக்கும். சென்னை மேயர் பதவி காலமோ ஓர் ஆண்டுதான். ஆகவே சென்னை மேயர் பதவி போனாலும் அகில இந்திய மேயர்களுக்கெல்லாம் மேயராக விளங்கும் வாய்ப்பு இவருக்குத் தொடர்ந்து ஓராண்டு நீடிக்கும்!

ராஜாஜியின் கருத்துக்கள்

நேச நாடுகளின் படைகளை ஒரு மகத்தான ஐக்கிய சேனையாகத் திரட்டியதே இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரதம சேனாதிபதியாக இருந்த ஐஸன்ஹோவரின் மிகப் பெரிய சாதனை. ராஜநீதி அறிந்த ராணுவ வீரராகிய அவர் அமெரிக்கர்கள், பிரிட்டிஷார், பிரெஞ்சுக்காரர்கள், ஆகியோரிடை இருந்த தேசிய வேற்றுமைகளைக் களைந்து, எக்காலத்திலும் கண்டிராத மாபெரும் படையெடுப்பை நிகழ்வித்தார். பதினொரு மாதங்களில் நாஜி ஜெர்மனி அழிந்தது. ஐஸன்ஹோவரின் தலைமையில் நேச நாடுகளின் தரை—விமான—கப்பல் படைகள் வட ஆப்பிரிக்காவிலிருந்த அச்சு நாடுகளின் சக்திகளை முறியடித்தன; ஸிஸிலியை வென்றன; இத்தாலியின் ராணுவ பலத்தை அழித்தன; ஐரோப்பாவைத் தமது கோட்டையாகப் பிரகடனம் செய்து கொண்ட ஹிட்லரின் சாம்ராஜ்யத்தைத் தவிடு பொடியாக்கின. ஐஸன்ஹோவருடைய திட்டங்களின் சிறப்பையும், அவரது படையெடுப்புக்களின் தீரத்தையும் ஜெர்மானிய ராணுவ அதிகாரிகளும் புகழ்ந்தனர். ஆயினும் இந்த ராணுவ வீரர், ''யுத்தம் என்பது ஒரு நாசகரமான விஷயம்'' எனக் கருதி அதை வெறுத்தார். ''என் தொழிலில் (ராணுவத்தில்) உள்ளவர்கள் நிரந்தரமாக வேலைசெய்யாமல் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்'' என்றார்.

★

ராம்கர் ராஜாவின் அப்பீலுக்கு அனுமதி மறுக்கும்போது சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி, ''பிஹார் ராஜ்யம் நிரந்தரமான சிறுபிள்ளையாக இருப்பதாகத் தெரிகிறது'' என்று கூறியிருக்கிறார். பிஹார் மட்டுமல்ல; இந்திய சர்க்காரும் சிறுபிள்ளைத்தனமாகத் தான் நடந்து வருகிறது. ஆங்கிலம் ஏற்கெனவே தொடர்பு மொழியாகி விட்டது என்பதை ஒப்புக் கொள்ளாமல், ஹிந்திப் பிரச்னையை இன்னும் வளர விட்டிருக்கும் இந்திய சர்க்காரின் கொள்கை சிறுபிள்ளைத்தனமின்றி வேறு என்ன?

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஏற்பட்ட பற்றுக்குறை மனப்பான்மையை இன்னும் வளரவிட்டுக் கொண்டு, எல்லாவற்றிலும் ரேஷனை உண்டாக்கியுள்ள கொள்கை சிறுபிள்ளைத்தனமின்றி வேறு என்ன? உற்பத்தியைப் பெருக்க உதவும் உபாயங்களில் கூட 'ரேஷன்' செய்துவிட்டார்கள்; இதனால் சுதந்திரமான தொழிற் போட்டிக்கு இடமில்லாமல் ஏகபோக்கியங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் நிரந்தரமான சிறுபிள்ளைத்தனமன்றி வேறெதுவும் அல்ல.

★

காங்கிரஸின் மயக்குகளுக்கு தி.மு.க. ஆதரவாளர்களான நகர மக்கள் ஆளாகாமலிருக்க வேண்டும் என்பதற்காக தி.மு.க சர்க்காரிடம், எவ்வளவோ சிரமங்களுக்கிடையே உற்பத்தி செய்த மதிப்புள்ள உணவு தானியங்களைக் குறைந்த விலைக்குக் கொடுக்கும் அளவுக்குத் தி. மு. க.விடம் விவசாயிகள் காதல் கொண்டுவிடவில்லை. இவ்வாறு நகர மக்களுக்காக, இயற்கையான சந்தை விலைக்குக் குறைவாக விலை கொடுத்து தானியக் கொள்முதல் செய்வது தி. மு. க. ஆட்சி நிலைத்திருக்க உதவாது. கொள்முதல் கொள்கையை மீண்டும் ஆராய வேண்டும்.

திருச்சி கிராமம் ஒன்றில் விவசாயிகள் 15 மூட்டை தானியம் கொடுத்தபோது, தாசில்தார் கொள்முதலின் முழு இலக்காகிய 65 மூட்டை கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் மீது, அவரை விவசாயிகள் உக்கிரமாக விரட்டியதாகச் செய்தி வந்திருக்கிறது. இது ஒரு திசை காட்டி. ஆத்திரம் கொண்ட விவசாயிகளைப் பீனல் கோடின் கீழ் குற்றம் சாட்டித் தண்டித்து விட்டால் பரிகாரமாகிவிடாது. இதுபோன்ற 'பரிகாரங்'களால் மக்களுக்கும் சர்க்காருக்கும் இடையேயுள்ள பிளவு அதிகமாகும்.

★

மொரார்ஜி — சந்திரசேகர் விவகாரத்தில், ஸ்ரீ சந்திரசேகரைக் கண்டிக்க வேண்டும் என்று

பார்லிமென்டரிக் கட்சியின் நிருவாக பீடம் முடிவு செய்துள்ளது. சடங்குப் பிரகாரம் ஸ்ரீ சந்திரசேகர் கண்டனம் பெற்றாலும் அவர் உண்மையில் கொஞ்சமும் வருத்தப் படவில்லை. காங்கிரஸ் நிருவாக பீடத்தின் பகிரங்கமான கண்டனத்தைச் சந்திர சேகருக்குப் பெற்றுத் தருவதற்கு அதிகமாக ஸ்ரீ மொரார்ஜி தேசாயால் எதுவும் செய்ய இயலவில்லை. ஸ்ரீ மொரார்ஜி இதிலேயே திருப்தி கொண்டு விட்டார்.

ஸ்ரீ சந்திர சேகர் இவ்விஷயத்தில் காட்டுகிற பிடிவாதத்தை வேறெதேனும் உயர்ந்த காரணத்துக்காகக் காட்டினால் பொருத்தமாக இருக்கும் — பல நல்ல காரணங்களுக்கு இப்படிப்பட்ட விட்டுக் கொடுக்காத அபிமானிகள் தேவைப்படுகின்றனர்.

★

கள்ளுக்கடைகளைத் திறக்கும் திசையில் புது சிந்தனை வேண்டும் என்று எழுந்த பேச்சுக்களுக்குத் தமிழக முதலமைச்சர் முற்றுப் புள்ளி வைத்தது நல்ல சமாசாரம். மதுவிலக்கை நீக்க காந்தி நூற்றாண்டு உகந்த சமயமல்ல என்ற அடிப்படையில் முதல்வர் இவ்வாறு கூறியுள்ளார். காந்தி நூற்றாண்டு மட்டுமின்றி, எப்போதுமே மதுவிலக்கை விடுவது சரியல்ல.

கள்ளு, சாராயக் கடைகளை மூடியதால் தமிழ் நாட்டு மக்கள் நிரம்ப நன்மை அடைந்துள்ளனர். இன்றைய தலைமுறை மட்டும் அல்ல; அடுத்த தலைமுறையும் இதனால் தார்மிக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பயனடைந்துள்ளனர்.

சட்டத்தைச் சிலர் ஏய்ப்பதால் ஏற்படும் விரிசல்களை முற்றிலும் அடைக்க முடியவில்லை என்பதற்காக, தீமை என்கிற ஏரியையே உடைத்துவிடச் சொல்வது பகுத்தறிவுக்குப் பொருந்தாது. இந்த நியாயப்படி, சில குற்றங்கள் கண்டுபிடிக்கப்படாமலே இருப்பதால் போலீஸ் ஸ்டேஷன்களை யெல்லாம் எடுத்துவிட வேண்டியதாகும்.

பழைய காலத்தில் நகரங்களிலும் கிராமங்களிலும் மாலை வேளைகளில் என்ன நடந்தது என்று தங்கள் கண்ணால் கண்டவர்கள் தமிழகத்தில் மதுவிலக்கினால் விளைந்துள்ள நற்பயனைப் போற்றுவார்கள்.


★

வரிவிதிப்பின் அடிப்படையை விரிவுபடுத்துவதாகச் சொல்லிக் கொண்டு விவசாய அபிவிருத்திக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள 'பட்ஜெட் யுத்தத்தை' பார்லிமென்ட் வட்டாரங்கள் திட்டவட்டமாகக் கண்டித்துள்ளன. மக்களில் ஏழைகளையும் மத்திய வர்க்கத்தினரையும் பாதிக்கின்ற முறையில் விதிக்கப்பட்டுள்ள வரிகளை ஆட்சேபித்து உறுதியாகக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

வருமானம் போதாதபோது நிலைமையைச் சமாளிக்க ஒரு நிதி மந்திரி என்னதான் செய்வது என்று கேட்கலாம். இந்தத் தர்மசங்கட நிலைக்கு ஒரு சர்க்கார் முகம் கொடுக்குமாறு விடக் கூடாது. பெரிய வருமானம் தேவைப்படுவதற்குக் காரணம் பெருத்த செலவே. அஸ்திவாரத்திலேயே தப்பிதமான கன்ட்ரோல் முறை, திட்ட அமைப்பு, சிப்பந்திப் பெருக்கம், இவற்றோடு ராணுவச் செலவும் உயர்ந்திருக்கிறது. இப்படி அடிப்படையில் தவறான கொள்கைகளை ஒரு சர்க்கார் பிடிவாதமாகப் பின்பற்றும்போது அது நிதி நிலைமையைத் தர்மசங்கடமான நிலைமைக்குத் தான் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

எனவே இன்று சிக்கல் தீர வழி இந்த மந்திரி சபை பதவியிலிருந்து விலகுவதே — அல்லது அது தனது அடிப்படைக் கொள்கைகளை மாற்றிக் கொள்வதே.

தர்மசங்கட நிலைக்குப் பரிகாரம் விவசாயத்தை நாசமாக்கி, ஏழைகளுக்கும் நடுத்தர மக்களுக்கும் ஜீவனத்தைத் தாங்கவொண்ணாத பளுவாக்குவதல்ல. சுய முன்னேற்றத்துக்காக அரசியலைத் தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டத்தின் வறட்டுப் பிடிவாத சர்க்காருக்குப் பதிலாகக் கட்சிப் பற்றற்ற ஓர் அரசாங்கம் அமைய வேண்டும் என்பதற்கு முன்னறிவிப்பே இப்போது ஏற்பட்டுள்ள தர்மசங்கட நிலை.



மகாத்மா மணிமொழி

சூரிய அஸ்தமனம், அல்லது இரவில் தாரகைகளிடையே நிலவும் பிறைச் சந்திரன் இவற்றின் அழகுகள் சத்தியமானவை— இவற்றுக்குப்பின் உள்ள கர்த்தாவை நான் எண்ணுமாறு செய்வதாலேயே இவை சத்தியமானவை. சிருஷ்டியின் மையத்தில் ஒரு மெய்ப் பொருள் இருப்பதனால் அன்றோ இவை அழகாக இருக்கின்றன ? இல்லாவிடில் இவை எப்படி அழகாக இருக்க முடியும்? சூரியாஸ்தமனத்தின் அதிசயத்தையும் சந்திரனுடைய அழகையும் நான் ரசிக்கும் போது என் ஆன்மா சிருஷ்டி கர்த்தனின் வழிபாட்டில் விரிகிறது.

உண்மை அழகு இதயத்தின் தூய்மையிலேயே உள்ளது.



போற்றுதலுக்குரிய முயற்சி



சென்னை,
ஏப்ரல் 2, 1969

திரு ராஜேந்திரன்
துணை ஆசிரியர்
கல்கி
சென்னை - 31

அன்புமிக்க திரு ராஜேந்திரன்,

பெர்க்லி — கல்கி சிறுகதைப் போட்டியைப் பற்றித் தெரிந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இந்தப் போட்டி, நீங்கள் 1967ல் அமெரிக்கா சென்றதன் விளைவாக ஏற்பட்ட ஒன்று என்பதை அறிந்து சந்தோஷப்படுகிறேன்.

இந்தப் போட்டிக்கு இருந்த பேராதரவைப் பார்க்கும்போது மனம் பூரிப்படைகிறது. ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இதில் கலந்து கொண்டார்கள் எனத் தெரியவருகிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் நம்மிரு நாடுகளிடையே பரஸ்பரம் நல்லுணர்வை வளர்க்கப் பெரிதும் பயன்படுகின்றன. சமீப காலமாகப் பெருமளவில் முன்னேற்றம் கண்டுள்ள கலாசாரத் தொடர்புகள் மேலும் வலுப் பெற உதவுகின்றன.

நீங்கள் ஏற்படுத்திய போட்டியில் கலந்து கொண்ட எல்லோருக்கும் எனது பாராட்டுதல்களையும் வெற்றி பெற்றவர்களுக்கு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் போற்றுதலுக்குரிய இந்த முயற்சியை மேற்கொண்டதற்காக உங்களையும் கல்கி ஸ்தாபனத்தையும் வாழ்த்துகிறேன்.

உண்மையுள்ள உங்கள்,

தாமஸ் எம். ரெக்நாகல்
அமெரிக்க கான்ஸலேட் ஜெனரல்

பெர்க்லி தமிழ்ச் சங்கத் தலைவர் திரு ஆர். வி. எஸ். மணி எழுதுகிறார்:

தமிழ் இலக்கிய உலகுக்குப் பணியாற்ற ஒரு வாய்ப்புக் கிடைத்ததில் பெர்க்லி தமிழ்ச் சங்கம் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறது. தமிழ் எழுத்தாளர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆர். வி. எஸ் மணி





பெர்க்லி-கல்கி இலக்கியப் பரிசுத்திட்டம்

பெர்க்லி - கல்கி இலக்கியப் பரிசுத் திட்டத்தின் கீழ் பரிசுக்குரிய சிறுகதைகளைத் தேர்ந்தெடுக்கப் பஞ்சாயத்தார்கள் கூட்டம் கல்கி காரியாலயத்தில் மார்ச் மாதம் 23-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை நடைபெற்றது.

சமூகக் கதைகளில் கீழ்க்கண்ட சிறுகதைகள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

முதல் பரிசு: ரூ. 1000

அவள் என் மனைவி

— இந்திரா பார்த்தசாரதி

இரண்டாம் பரிசு: ரூ. 500

நாங்கள் நடிகைகள்

— ஸ்ரீவேணுகோபாலன்

மூன்றும் பரிசு: ரூ 250

நான் குற்றவாளியே

— எம். எஸ். கல்யாணசுந்தரம்

ஹாஸ்யக் கதைகளில் முதல், இரண்டாவது பரிசுக்குரிய கதைகளாகக் கீழ்க்கண்ட சிறு கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன :

முதல் பரிசு : ரூ. 1000

என் அருமை நைட்டிங்கேல்


— விஜயா பாலகிருஷ்ணன்

இரண்டாம் பரிசு : ரூ. 500

ஹோமியோ - பதி - பதி !

— எஸ். பத்மாவதி

மூன்றாவது பரிசுக்குத் தகுதி பெறும் ஹாஸ்யக் கதை எதுவும் இல்லையாதலால் பஞ்சாயத்தார் மூன்றாவது பரிசான ரூ. 250ஐ மற்றொரு சமூகக் கதைக்குத் தந்துவிடுவதென தீர்மானித்தார்கள். இந்தப் பரிசு **கோமகள்** எழுதிய **பால்மனம்** என்ற கதைக்கு அளிப்பதென முடிவாயிற்று.



[குறிப்பு : சரித்திரக் கதைகள் பஞ்சாயத்தார்களின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் முடிவுகள் வெளியாகும். — ஆசிரியர், கல்கி]

ஸ்ரீ:

தெய்வீகப் புத்தகக் காட்சி அமைப்பு

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

பேரன்புடையீர்,

வணக்கம். திருவருள் துணைகொண்டு நிகழும் சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள், 1-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி முடிய (13-4-69—4-5-69) தினசரி காலை 8-30 முதல் இரவு 8-30 வரை மாம்பலம், ரங்கநாதன் தெருவிலுள்ள எம் அலுவலகக் கட்டிடத்தில்


பற்பல பதிப்பகங்களின் பக்திப் புத்தகங்களைக் கொண்ட

தெய்வீகப் புத்தகக் காட்சி

நடைபெறும். அவ்வமயம் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ விஜயம் செய்து சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

சென்னை-17,
10-4-1969.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
(லிப்கோ பதிப்பகத்தார்)



இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இதுவரை தயாரித்துள்ள மொத்த ரயில் பெட்டிகள் ஆறாயிரத்து ஐந்நூற்றுக்கும் அதிகமானவை. புத்தாண்டில் புதிய புதிய ரகப் பெட்டிகள் செய்ய ஆரம்பித்திருக்கும் எங்கள் நோக்கம் உங்கள் சுகமான, சௌகரியமான பிரயாணமே!

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை
சென்னை - 38

பண்டிட். டி. கோபாலாசார்லுவின்

அருணா

மாதர்களின் ஆரோக்கிய சௌபாக்கியத்திற்கு

1893 ஆண்டிலிருந்து பிரசித்தி பெற்றது

ஆயுர்வேதாஸ்ரமம் (பி) லிமிடெட் . மதராஸ் -17

மாணவர் திறனாய்வு

இலக்கியத்தின் பிரிவுகள் சில பழங் காலந் தொட்டு இருந்து வருபவை. சில இடைக்காலத்திலும், சில அண்மையிலும் எழுந்தவை. அண்மையில் தோன்றிய இலக்கியப் பிரிவுகளுள் சிறந்ததும், செழித்து வளர்ந்ததும், செல்வாக்கு மிக்கதும் சிறுகதையே. உரை நடையின் வகைகளில் ஒன்றாகத் தொல்காப்பியம் கூறும், ''பொருள் மரபில்லா பொய்ம்மொழி'' கதைகளையே குறிப்பிடுகிறது.

சிறுகதை நாளுக்கு நாள் வளர்ந்து, புதிய புதிய வடிவங்களைப் பெற்றுப் பொலிவுற்று வரும் இலக்கியம் ஆதலால் அது குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்கு உட்படவில்லை. சிறுகதை என்பது வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை அல்லது ஓர் உணர்ச்சியை மையமாகக் கொண்டு பின்னப்படுவது. ஏதேனும் ஒன்றை நிலைக்களனாகக் கொண்டு அதன்மீது எழுதப்படுவதே சிறுகதை. கதையின் குறிக்கோளும், பயனும் கூட ஒன்றாகவே இருக்க வேண்டும்.



எஸ். ரங்கநாயகி அவர்கள் தம் ''தெய்வ மணத்''தினை மலர் மணம் கொண்டு விளக்கியுள்ளார். கதையில் வரும் சாமிநாதன் ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்னும் அயரா நம்பிக்கை கொண்டு, ''பாட்டுவித்தால் பாடுகின்றேன்; கூட்டுவித்தால் கூடுகின்றேன்; ஆட்டுவித்தால் ஆடுகின்றேன்'' என அனைத்துக்கும் அவனையே காரணம் கூறுவார். அவரது மனைவியும் மகளும் அவரைப் போலவே நம்பிக்கை உடையவர்கள். சாமிநாதன், தாம் நினைக்காத அளவு செல்வம் பெற்றும், ''அப்பனே, ஆண்டவா! பணத்தைக் காட்டி என்னைச் சோதிக்கிறாய். நானா ஏமாறுவேன்? இந்த அழியும் பொருளில் மயங்கி அழியாச் செல்வமான பக்தியைத் துறந்துவிடுவேனா? உன் நாமமே கலகலத்துக் கொட்டும் தங்கக் காசுகள் என்பது எனக்குத் தெரியும்'' என்றே கூறுகிறார். மேலும் முன்னைவிட இறைவனிடம் அதிக அளவு ஈடுபாடு கொண்டு தம்மை மற்றவர் குருக்கள் என்று அழைப்பதையே விரும்புகிறார்.

சாமிநாதனின் மகள், பானுவின் மனத்தைக் கொள்ளை கொள்ளுகிறான் மூர்த்தி. கடவுள் பணிக்கென்றால் உள்ளதைக் கொடுப்பவன். ஆயினும், கடவுள் உண்டு என்பதை நம்பாதவன். பிறர் துன்பத்தைக் களைவதற்காகத் தன் இன்பத்தையும் துறக்க மறுக்காதவன். அவனது தாய் தந்தையரோ இறையை வணங்கி அவனையே நம்பியவர்கள். அவன் வடிவிலே இறையைக் கண்டதால்தான் பானு அவனிடம் மனத்தைப் பறி கொடுத்தாள் போலும்!

மூர்த்தியை மாற்ற முயன்று தோற்றாள் அவனது தாய். பானு, ''ஆடுகிற மாட்டை ஆடியும், பாடுகிற மாட்டைப் பாடியும் கறக்க''த் தெரிந்தவள். அவள் மூர்த்தியின் வழியிலேயே சென்று அவனை மாற்றுகிறாள். பானுவின் ஒவ்வொரு கூற்றும் உண்மையும் மறுக்க முடியாததும் ஆகும்.

தெய்வத்துக்குச் சிறந்த விளக்கம் தருகிறாள் பானு. அன்பு, நேசம், சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிப்பது,

சென்னை, வைஷ்ணவக் கல்லூரியில் பி. எஸ்ஸி. படிக்கும் மாணவர் திரு குப்புராஜுக்குக் கணக்கு மிகவும் பிடித்தமான விஷயம். கணக்கை முக்கிய பாடமாக எடுத்துக் கொண்டு படித்து வரும் இவர் கேரம் ஆடுவதிலும் கெட்டிக்காரர். தன்னடக்கம் மிகுந்த இவருக்குத் தமிழார்வம் ஊட்டியவர் புரசவாக்கம் எம். ஸி. டி. முத்தையாச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் திரு சண்முகம் பிள்ளை.

எழுத்திலும், பேச்சிலும் ஆர்வம் காட்டுவதிலும் இவரைத் துணிச்சலாக எழுத்துலகில் புகத் தூண்டியது 'கல்கி'யின் மாணவர் திறனாய்வுப் போட்டியே!

சென்னை, பெரியமேட்டு மருந்துக்கடை ஒன்றில் பணி புரியும் இவர் தந்தை ஸ்ரீ ஜெயராமனுக்கு ஒரே மகிழ்ச்சி, 'கல்கி'யின் திறனாய்வுக் கட்டுரை தம் மகனுக்குக் கேரம் ஆட்டத்தைப் போல், கணக்கைப் போல் இப்படி ஒரு வெற்றி தரும் என்று எதிர்பார்க்கவில்லையாம். திரு குப்புராஜ் படிப்போடு இலக்கிய உலகிலும் இடம் பெற வாழ்த்துவோம்.

முதல் பரிசுக் கட்டுரை

பகைவனையும் மன்னிப்பது, பிறர் மனம் நோகச் செய்யாமல் இருத்தல் என்பவற்றைக் கடவுளின் உறுப்புகளாக்கி, மாமிசத்தையும், கொழுப்பையும் நிரப்பாது காட்டுகிறாள். ''மலர்களைக் காணாதபோது, காணாத தெய்வத்தை நம்பாத ஒருவன் அவற்றின் மணத்தை மட்டும் எவ்வாறு நம்பக் கூடும்?'' என்று கேட்கிறாள். ''நம்மிடையே வாழ்ந்த மகாத்மாவை நாம் போற்றுகிறோம். ஆனால் நமக்குப் பிறகு வரும் சந்ததியார் காந்தியை நம்பக் கூடாது, வணங்கக் கூடாது என்பதா?'' என்று கேட்டுக் காணாத தெய்வத்தை ஒருமையுடன் நினைந்து வழிபட் வேண்டும் என்கிறாள்.

''எவனொருவன் சுக துக்கத்தையும், நண்பனையும், விரோதியையும், விருப்பு வெறுப்புக்களையும் மற்றும் இது போன்று ஒன்றுக்கொன்று விரோதமான குணங்களையும் சமமாகப் பாவித்துக் காமக் குரோதங்களை அடக்கி விட்டவனாகிறானோ, அவனே என்னை அடைந்து, என்னில் ஐக்கியமாகின்றான்'' என்ற கீதையின் வாக்கை அழகாக விளக்குகிறார் ஆசிரியர்.

தெய்வ மணம்

சிறப்புச் சிறுகதை



''கடவுள் மணம் நிறைந்த மலர். அழகும், மணமும் நிரம்பி யிருக்கிறது. பக்தர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் மலரின் அழகை மட்டும் பார்த்துக் கொண்டு முக்கியமான அதன் மணத்தை மறந்து காகிதப் பூவை நேசிப்பதாகவே உள்ளனர். சிலர் மலர், மணம் இரண்டையும் காண்பார்கள். அதனால்தான் தெய்வத்தைக் கண்டு தெய்வமாகவும் அவர்களால் இருக்க முடிகிறது. தெய்விகக் குணங்களான மணத்தை மட்டும் நுகரத் தெரிந்தவர்கள் 'தெய்வத்தையும் காண முடியும்'' எனக் கூறுவது போற்றத் தக்கது.


வாசகன் எடுத்த வேகத்தில் முடித்து விடும் வகையில் கதை சொல்லப்பட்டிருக்கிறது. கதையின் நடையில் இனிமையும் எளிமையும் கலந்திருக்கின்றன. 'தெய்வ மணம்' முழுமை பெற்றுச் சிறு கதையின் இலக்கணத்துக்கேற்ப வீண் வருணனைகளுக்கும், தேவையற்ற நிகழ்ச்சிகளுக்கும் இடம்தராமல் சொல் சிக்கனத்தின் மூலம் சுவையைப் பெருக்குகிறது.

நாவலுக்கும் சிறுகதைக்கும் உள்ள வேறுபாட்டை ராஜாஜி அவர்கள் ஒரு நல்ல உதாரணத்தால் விளக்குகிறார். ''புளிய மரம், வேப்ப மரம் ஒரு வகை இனம். கமுகு, தென்னை ஆகியவை மற்றொரு வகை இனம். நாவல் புளி போன்றது. புளி ஓர் அடிமரத்தில் தொடங்கிப் பல கிளைகளாய்க் கிளைத்து ஒவ்வொரு கிளையிலும் எண்ணற்ற கிளைகள் பெற்றுத் திகழ்பவை. சிறுகதை தென்னை போன்றது. தென்னை ஓர் அடிமரத்தில் கிளைகளின்றி ஒருசில இலைகளுடன் நிற்கும்'' என்பதே திரு ராஜாஜியின் உதாரணம்.

''தெய்வ மணமும்'' கீதையின் வாக்கான அடிமரத்தில் தோன்றிக் கிளைகளான பல பாத்திரங்கள் இன்றி, இலைகளான சில பாத்திரங்களுடன் (சுவாமிநாதன், மூர்த்தி, பானு, சொர்ணம்) நிற்கிறது.

தமிழருக்குச் சிறுகதை தந்த முதல்வரின் பாணியில் (வ. வே. சு. ஐயர்) ''தெய்வ மணம்'' மண நிகழ்ச்சிக் குறிப்பை முதலில் பெற்று, தனக்குரிய பாத்திரங்களை அறிமுகப்படுத்துகிறது.

''தெய்வ மணம்'' உண்மையிலேயே தெய்விக மணம் பெற்றுத் திகழ்கிறது.



கப்பலோட்டிய தீரர்கள்

கப்பலோட்டிய தமிழனை நமக்குத் தெரியும். வடக்கேயும் இதே போல் தேசிய உணர்ச்சியுடன் கப்பலோட்டுவதில் முனைந்தவர் ஜம்ஷெட்ஜி டாட்டா. இவ்விருவரது முயற்சிகளும் பிரிட்டிஷ் ஆட்சியில் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. அந்தக் காலத்தில் இந்தியத் துறைமுகங்களுக்குப் பிரிட்டிஷ் கப்பல்கள் மட்டுமே வியாபாரப் பொருள்களுடன் வந்து போய்க் கொண்டிருந்தன. இந்தியக் கப்பல் கம்பெனி தொடங்கப்பட்டால் தங்கள் லாபத்தில் நஷ்டம் ஏற்படுமே என்று பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளுக்குப் பயம் !

இம்மாதிரியான சூழ்நிலையில் நரோத்தம், வால்சந்த் என்ற இருவரும் தேசிய உணர்ச்சியுடன் வியாபார நுணுக்கங்களையும் நன்கு இணைத்துத் தைரியமாக ஸிந்தியா கப்பல் கம்பெனியைத் தொடங்கினர். அவர்களது முதல் கப்பல் ''விசுவாசம்'' என்று பெயர் கொண்டது. (படம்) லண்டனு இன்றைக்குக்குச் சரியாக ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் பயணமாயிற்று. இந்த நாளையே - ஏப்ரல் 5ந் தேதி - நமது தேசிய கப்பல் துறைத் தினமாகவும் கொண்டாடுகிறோம்.

அந்நாட்களில் ஸிந்தியா கம்பெனிக்கு ஏற்பட்ட அல்லல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த நிறுவனத்தைத் தொடக்கத்திலேயே திவாலா நிலைக்குக் கொண்டு வந்து வைத்து விடக் கருதி பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் சூழ்ச்சி செய்தன. இவர்களது செல்வாக்கு காரணமாக ஸிந்தியா கப்பல் மூலம் ஏற்றுமதி செய்ய இங்கிலாந்தில் எந்த வர்த்தக ஸ்தாபனமும் முன்வரவில்லை ! அப்போது நரோத்தமும் வால்சந்தும் தாங்களே ஆயிரம் டன் சிமெண்டும் ஐந்நூறு டன் இரும்பும் வாங்கிக் கப்பலில் ஏற்றி இந்தியாவுக்குக் கொண்டு வந்தார்கள் !

சில ஆங்கிலேய அதிகாரிகள் ஸிந்தியாவின் முயற்சியைக் கடல் கொள்ளை என்று கூட வர்ணிக்கத் துணிந்தார்கள்! வேறு சிலர் ஸிந்தியாவை விலை கொடுத்து வாங்கி பிரிட்டிஷ் கம்பெனியுடன் இணைத்து இருந்த இடம் தெரியாமல் அடித்துவிட முயன்றார்கள்! ஸிந்தியா கப்பலில் ஏற்றுமதியாகும் பொருட்களை இன்ஷியூர் செய்ய மறுத்தன சில இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள். வேறு சில, அதிகமான பிரீமியம் கேட்டன. இதைச் சமாளிக்க ஸிந்தியா நிர்வாகிகள் தாங்களே ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியையும் ஆரம்பித்து வைத்தனர் !

இப்படி எத்தனையோ பல இன்னல்களுக்கு இடையில் தொடங்கப்பட்ட கம்பெனி அதன் நிர்வாகிகள் பங்குதாரர்களின் விடாமுயற்சியாலும் தேசிய உணர்ச்சியாலும் வளர்ந்தது. சுதந்திரம் வந்த பிறகு 1948ல் முதல் இந்தியக் கப்பலை ஸிந்தியா கப்பல் கட்டும் தளம் தயாரித்தது விசாகப் பட்டினத்தில். ''ஜலஉஷா'' என்ற இக்கப்பலைப் பாரதப் பிரதமர் நேருஜி வெள்ளோட்டம் விட்டார். இக்கப்பல் கட்டும் தளம் பின்னால் தேசிய உடைமை யாக்கப்பட்டது.

நேருஜி மட்டுமல்ல, அவர் தந்தையாரும், மகாத்மாகாந்திஜியும் லால்பகதூர் சாஸ்திரியும் மற்றும் பல பெருந் தலைவர்களும் சுதந்திரத்துக்கு முன்பாகவே ஸிந்தியாவின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்தனர். காரணம், ஸிந்தியா ஒரு வியாபார நிறுவனம்தான் என்றாலும் அது தேசிய எழுச்சியின் சின்னமாகவும் விளங்கியதுதான்.

சுதந்திரம் பெற்ற பிறகும் நம் நாட்டில் கப்பல்துறை எதிர்பார்த்த வேகத்தில் வளரவில்லை. மிக நீண்ட கடற்கரையை உடைய பாரதத்தின் உள்நாட்டு வாணிபத்தில் அந்நியக் கப்பல்கள் பங்குபெற விடக் கூடாது என்று 1923லேயே காங்கிரஸ் நிர்மானித்திருந்த போதிலும் 1952ல்தான் இது சட்டபூர்வமாக அமுலுக்கு வந்தது.

அமெரிக்க அரசாங்கம் நமது உணவுப் பற்றாக்குறையை ஈடு செய்யக் கோதுமை போன்ற உணவுப் பொருள்களை அனுப்புகிறதல்லவா ? அதற்கு டாலர்களாகப் பணம் தராமல் ரூபாய்களாகத்தான் கொடுக்கிறோம். இந்த விதமாக அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த உணவுப் பொருள்களைக் கொண்டு வர இந்தியக் கப்பல்கள் தேவையான அளவுக்கு இல்லை. அயல்நாட்டுக் கப்பல்களில் இந்த உணவுப் பொருளை ஏற்றிவருவதற்காகவே கடந்த பதினாறு ஆண்டுகளில் நமக்கு 1200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஆகியிருக்கிறது ! பாரத நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஐம்பது சதவீதமாவது இந்தியக் கப்பல்கள் மூலம் நடக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்த போதிலும் 13 சதவீதமே இன்று இந்தியக் கப்பல்கள் வாயிலாக நடக்கிறது. இதனால் — பிற நாட்டுக் கப்பல்களில் நம் பொருள்களை ஏற்றிச் செல்வதன் மூலம் — எவ்வளவு அந்நியச் செலாவணி நஷ்டமாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதைத் தவிர்க்கும் பணியை பொன்விழாக் கொண்டாடும் ஸிந்தியா கப்பல் நிறுவனம் இன்று செய்து வருகிறது. 5900 டன் ஏற்றக்கூடிய ஒரே கப்பலிலிருந்து நாலு லட்சம் டன் ஏற்றக் கூடிய ஐம்பத்திரண்டு கப்பல்களாக வளர்ந்து.


ராமாயணம்
ராஜாஜி




ராமாயணம்

ராஜாஜி

உயிர் ஒழிந்த உடலை மண்ணில் அடக்கம் செய்யவோ தீயில் தகனம் செய்யவோ வேண்டும். இல்லாவிடில் அழுகிப் போய்ச் சகிக்க முடியாதபடியாகும். அதைப்போலவே பாரத சமுதாயத்தின் **உயிர்** ராமாயணம். ராமாயணத்தை விட்டு விட்டோமானால் நம்முடைய சமுதாயம் உயிரற்ற பிரேதமேயாகும்.

பெற்ற தாயையும், ஊரையும், செல்வத்தையும் விட்டுவிட்டுப் பதினான்கு வருஷங்கள் வனவாசம் செய்த ஸர்வ லக்ஷண லக்ஷ்மீவான் சீதா ராமசந்திரனை என்றும் மறக்காமல் அவனை தெய்வ அவதாரமாக வழிபடுவோமாக.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி





முகவுரை

வால்மீகியும் கம்பரும்

ஆண்டவன் விளையாட்டின் ரகசியத்தை யாரே அறிவார்! நம் செயல்கள் அனைத்தும் அவ்விளையாட்டில் அடங்கிய ஓர் அற்ப அம்சம். வால்மீகி பாடிய ராம சரிதத்தை நம் மக்களுக்கு எளிய பேச்சு நடையில் சொல்லலாம் என்று எண்ணிப் பண்டிதனல்லாத நான் ஆரம்பிக்கிறேன். கம்பர் பாடிய அவையடக்கத்தை வைத்துச் சொல்லுகிறேன்: பெரும் பாற் கடலை ஒரு பூனையானது மெல்ல உருட்டிக் குடித்துவிடலாம் என்று பார்ப்பது போலாகும் நான் வால்மீகி ராமாயணத்தை எளிய முறையில் சரியாக எடுத்துச் சொல்ல முயல்வது. ஆயினும், கடலைத் தாண்டிய ஆஞ்சனேயன், ராம கதையை எந்தவித

மாக யார் சொல்ல முயன்றாலும் உதவுவான்.

பக்தியுடன் ஒருவன் செய்யும் பணியில் பெரியோர்கள் குற்றம் பார்க்க மாட்டார்கள்; உற்சாகப்படுத்தி, பணியைப் பயன்படும்படி செய்வார்கள்.

பிராணிகளுக்கு எலும்பும் சதையும் இருப்பது போல் தாவரங்களுக்கும் உண்டு. சில தாவரங்களுக்கு நம்மைப் போல் உள்ளே எலும்பும் வெளியே சதையும் இருக்கும். வேறு சிலவற்றுக்கு உள்ளே சதையும் வெளியே எலும்பும் அமைந்திருக்கும். மா, பலா, புளி, தேக்கு முதலிய மரங்களின் சதை அவற்றின் பச்சைப் பட்டை. மரத்தின் உயிர்ச் சத்து அந்தப் பட்டையின் வாயிலாகவே செல்கிறது. மரத்தின் உள்ளே நின்று பாரத்தைத் தாங்கும் நடு மரமே அதனுடைய எலும்பாகும். ஆனால், மரத்துக்கு வேண்டிய உயிர்ச் சத்து மரத்தின் பச்சைப் பட்டையில்தான் பாய்ந்து வருகிறது. எலும்பு உள்ளேயும் உயிர்ச் சத்து பச்சைப் பட்டையிலுமாக இந்த வகைத் தாவரங்களின் ஜீவனம் நடைபெறுகிறது.

இதற்கு நேர்மாறாக இருப்பது வாழை, தென்னை, பனை, கமுகு, நெல், புல், சோளம், கரும்பு இவைகளின் அமைப்பு. வெளிப்புறத்தில் எலும்பு, உள்ளே தண்டில் உயிர். பனை, தென்னை, வாழை, கரும்பு இவ்வகைத் தாவரங்களைப் போல் பிராணி வர்க்கத்திலும் ஆமை, சங்கு, சிப்பி, கிளிஞ்சல் முதலிய பிராணி வகைகள் உள்ளே உயிரும் வெளியே ஓடுமாக இருக்கின்றன. கிளிஞ்சல் சங்கு முதலிய பொருள்களை நாம் அந்தப் பிராணிகள் செத்த பின்னரே உபயோகப்படுத்துகிறோம். ஆனால், நீரில் உயிருடன் வாழும் போது ஓட்டிற்குள் உயிரும் சதையும் இருக்கும். நம்முடைய எலும்பு உள்ளே இருப்பது போல் இவற்றின் வெளியோடு அவற்





றின் எலும்பு, உயிரும் உணர்ச்சியும் சதையும் ஓட்டுக்குள் மூடிக் காக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறே நூல்களையும் இரு வகையாக வகுக்கலாம். ஒரு வகைக்கு உயிர் அதன் பொருள், மற்றொரு வகை நூல்களுக்கு அதன் வடிவமே உயிர். விஷயங்களை விளக்கித் தரும் நூல்களான ரசாயனம், வைத்தியம், தேச சரித்திரம், பூகோளம், கணிதம் முதலியவை நூல்களின் பொருளில் உயிர் கொண்ட வகை. பாடல்களும் பெருங் காவியங்களும் கவிஞர் தந்த வடிவழகிலேயே தம் உயிரை வைத்து நிற்கின்றன.

செய்யுளைப் பிரித்து உரை நடையில் எழுதினால், அந்தப் பொழிப்புரையில் உயிர் இருக்காது. கவிஞர் கொடுத்த வடிவத்தைச் சேதித்து விட்டால் உயிர் மாண்டு போகிறது. ஒரு கணித நூலோ அல்லது வைத்திய நூலோ அவ்வாறு அல்ல. மனனம் செய்வதற்காக ஆசிரியர் செய்யுள் வடிவம் தந்திருந்தாலும், பழைய நாட்டுக் கணித நூல்களும் வைத்திய நூல்களும் இவ்வாறே செய்யுள் உருவத்தில் அமைக்கப்பட்டு வந்தன — அவற்றை விரித்து உரை நடையில் எழுதினாலும் பொருளிலே உயிர் கிடப்பதால் அதன் உயிர் நீங்காது.

கம்பர் பாட்டையோ அல்லது பாரதியார் பாட்டையோ உரைநடையில் எழுதினால் உயிரில்லாத உடல் தான் நிற்கும். பொருளுக்குச் சேதமில்லையாயினும், உரை நடையில் மாற்றி எழுதிய பாடல் உயிர் இழந்த பிராணியைப் போல் கிடக்கும். அதனோடு பதவுரையும் 'விசேஷ' உரையும், இலக்கணக் குறிப்பும் எழுதிவிட்டாலோ, அது சவச் சோதனை ஆலயமாகத்தான் பயன்படும். பிரேத சோதனையில் அறிவு வளர்ச்சிக்கு மிக்க பயன் உண்டு. ஆனால், அழகு இல்லை. உரை நடையில் மொழி பெயர்க்கப் பட்ட பாடலில் ஒளியில்லை; உயிரில்லை; பாடலில் தனிப் பயன் இல்லை.

எவ்வாறாயினும் ''யானை இருந்தாலும் ஆயிரம் வெள்ளி, இறந்தாலும் ஆயிரம் வெள்ளி'' என்பது போல் சில நூல்கள் இரு விதத்திலும் பயன் தரும். காவியங்களையும் பாடல்களையும் அந்நியருக்காக மொழிபெயர்ப்பது தற்கால வழக்கத்தில் பதிந்து போயிருக்கிறது. தமிழருங்கூடக் கம்பனையும் பாரதியையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் மிகவும் ஈடுபடுகிறார்கள். சில தமிழர் அவ்விதம் மொழிபெயர்த்ததைப் படித்தும் வருகிறார்கள். மொழிபெயர்த்த ராமாயணத்துக்கும் இறந்து போன யானையைப் போல் கொஞ்சம் விலை உண்டு என்பதைச் சொல்லி விளக்குவதற்காகவே இந்த நீண்ட முன்னுரை.

வால்மீகி பகவான் ராமாயணம் பாடிய காலமும், ஸ்ரீ ராமசந்திரன் அவதரித்து இம்மண்ணுலகில் வாழ்ந்த காலமும் ஒன்றே என்பது புராணம் வாசிப்பவர்களுடைய பரம்பரைக் கொள்கை. உலக அனுபவத்தை வைத்து ஆராய்ந்து யோசித்தால், வால்மீகி ரிஷியானவர் ராமாயணத்தைப் பாடியதற்கு முன்னமேயே,



அதாவது புராதன காலந் தொட்டே, சீதாராம சரித்திரம் மக்களிடை எழுத்து வடிவம் பெறாமலே பல நூற்றாண்டுகள் வாய் வழிக் கதையாக வழங்கி வந்திருப்பதாகத் தோன்றுகிறது. கர்ண பரம்பரையாக, முன்னமேயே இருந்த ராம சரிதத்தை எடுத்துக் கொண்டு அதற்கு வால்மீகி பகவான் நூல் வடிவம் கொடுத்தாற் போல் தோன்றுகிறது. அதனாலேயே கதையில் பல சிக்கல்கள் ஏற்பட்டதென்றும் ஊகிக்கலாம். வாலியைக் கொன்ற முறை — அதில் காணும் நியாயக் குறை. சீதையைக் காட்டுக்கு அனுப்பிய அநீதி, இவை போன்ற இன்னும் பல சிக்கல்கள்.

வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமனுடைய நடவடிக்கைகளை ஈசுவர

அவதாரமாக வைத்து எழுதவில்லை. சில அதிகாரங்களிலும், இங்குமங்கும் சுலோகங்களிலும், தெய்வ அவதார விஷயத்தைச் சொல்லி வந்தாலும், மொத்தத்தில் வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன்; வீர புருஷன்; அபூர்வமான தெய்விக நற்குணங்கள் பெற்றவன். அம்மட்டே; கடவுளாக வேலை செய்யவில்லை.

வால்மீகி முனிவரின் காலத்திலேயே ஸ்ரீ ராமனைப் பற்றிய அவதாரக் கொள்கை ஓரளவு ஜனங்களின் மனத்தில் இருந்து வந்தது. வால்மீகி இராமாயணம் இயற்றிய பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கம்பரும் துளசிதாசரும் ராமாயணம் பாடி



னார்கள். இதற்குள் ஸ்ரீராமன் மகாவிஷ்ணுவின் அவதாரமே என்பது நாட்டிலே நன்றாக ஊர்ஜிதப்பட்டுப் போன கொள்கையாகிவிட்டது. ராமன் என்றாலும் கிருஷ்ணன் என்றாலும் மகாவிஷ்ணுவே; மகாவிஷ்ணு என்றால் ராமனே, கிருஷ்ணனே — இந்த நிலைக்கு ஜனங்களின் கொள்கை வந்து விட்டது. இதற்கு ஏற்பப் பக்தியும் கோயில்களும் வழிபாடும் ஏற்பட்டு ஸ்திரமாகி விட்டன.

மக்களுடைய நம்பிக்கையும் வழிபாடும் இவ்வாறு பரிணமித்துவிட்ட பிறகு, கம்பரோ துளசிதாஸரோ மீண்டும் ராமனை எப்படி வெறும் வீரனாக வைத்துப் பாட இயலும்? அப்படிப் பாட முயன்றாலும் அது வீணாகும். கம்பரும் துளசிதாஸரும் பரிபூரண பக்தர்கள், ஆழ்வார்களே யாவார்கள். அவர்கள் தற்கால சரித்திர ஆராய்ச்சியாளர் அல்லது நெடுங்கதை எழுத்தாளர்களைப் போன்றவர்கள் அல்ல! ராமாவதாரத்தை வால்மீகியைப் போல் வெறும் ஒரு வீர புருஷனைப் பற்றிய கதையாக எழுத முடியாத நிலையிலும், காலத்திலும் கம்பரும் துளசிதாஸரும் பாடினார்கள். ராமனை மானிடப் பிறவியில் அடக்கக் கம்பருடைய பக்தி இடம் தராது. ஆனபடியால் கம்ப ராமாயணத்தில் அடிக்கடி, மிக ரசமான இடங்களில் ராமன் மகாவிஷ்ணுவே, கடவுளே, அனைத்திலும் பரவி நிற்கும் பரம் பொருளே என்று வைத்து மனத்தை உருக்கும் முறையில் அற்புத அழகோடு பாடியிருக்கிறார்.

காலத்துக்கும், சூழ்நிலைக்கும் தக்கவாறு உண்மைக் கவிஞர்கள் பாட முடியுமே யொழிய, வெறும் வறட்டு ஆராய்ச்சிகளைப் பாட்டாகப் பாட மாட்டார்கள்.

வால்மீகி ராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் மற்றொரு பெரும் வித்தியாசம். வால்மீகி பகவான் பாடிய நூல் தமிழ் அகவற்பா முறையில் அமைந்தது என்று சொல்லலாம். கம்பர் பாடியது நிருத்தியத்துக்குத் தகுந்த பாட்டு. ஆங்கிலத்தில் சொல்வோமானால், வால்மீகி ராமாயணம் கம்பீர நாதம் பொருந்திய Blank Verse என்றும், கம்பராமாயணம் ஒரு Lyric என்றும் கூற வேண்டும். கம்பருடைய பாட்டுக்கள் ஒவ்வொன்றும் எதுகையும் மோனையும் சந்தமும் கலந்து, பளிச்சுப் பளிச்சென்று ஆபரணங்களைப் பூண்ட மங்கையின் ஆடலைப்போல் மின்னித் துள்ளி நடனமாடுகின்றது. தெய்விக அவதார விஷயத்தை வைத்து உண்டாகும் உணர்ச்சியுடன் நடனச் சுவையும் கலந்து கம்பருடைய ராமாயணம் பேரழகு அடைந்து விளங்குகிறது. ஆனால், அதைத் தமிழ் மக்கள் மட்டுமே அனுபவிக்க முடியும். அதன் அழகு மற்றவர்களுக்குச் சரியாக விளங்காது. கம்ப ராமாயணத்தை, அந்நிய மொழியில் பெயர்த்து எழுதுவதிலாவது தமிழ் செய்யுள் உருவத்திலிருந்து வசனமாக்குவதிலாவது பெரும் பயன் ஒன்றுமில்லை. வசனமாக எடுத்துச் சொல்லி விளக்கிவிட்டு உடனே சரியான முறையில் பாட்டைப் பாடினால் நல்ல பயன் ஏற்படும். டி. கே. சி. மறைந்தபின் இதைச் சொல்லித்தான் என்ன பயன்?

1. சந்தத்தைக் கண்டார்

ஒரு நாள் காலை வால்மீகி ரிஷியின் ஆசிரமத்துக்கு நாரத முனிவர் வந்தார். வால்மீகி ரிஷி அவரை உபசரித்து வணங்கி, ''சகலமும் தெரிந்த நாரதரே, இந்த உலகத்தில் வீரர்களுக்குள் எல்லா நற்குணங்களும் அறிவும் பெற்ற உத்தம புருஷன் யார்?'' என்று கேட்டார்.

எதற்காக வால்மீகி ரிஷி இதைக் கேட்கிறார் என்று ஞானதிருஷ்டியால் நாரதர் தெரிந்து கொண்டு ''சூரிய வம்சத்தில் பிறந்த ராமன் அயோத்தியில் அரசு புரிந்து வருகிறான். நீர் கேட்கும் உத்தம வீரன் அவன்தான்'' என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு ராம சரித்திரத்தைச் சுருக்கமாக விளக்கிச் சொன்னார். அதைக் கேட்ட வால்மீகி ரிஷி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாரதர் விடைபெற்றுச் சென்ற பிறகும் அதைப் பற்றியே தியானித்துக் கொண்டிருந்தார். பிறகு நதிக் கரைக்குப் போனார்.

குளிப்பதற்காக முனிவர் இடம் பார்த்துக் கொண்டு ஆற்றங்கரையில் உலாவிக் கொண்டிருந்த அந்தச் சமயம் மரக் கிளையில் ஆணும் பெண்ணுமாக விளையாடிக் கொண்டிருந்த இரண்டு கிரௌஞ்ச பட்சிகளுள் ஒன்று எங்கேயோ நின்ற வேடன் எய்த அம்பு பட்டுக் கீழே விழுந்தது. பெண் பறவை, தன் காதலன் இரத்த வெள்ளத்தில் அடிபட்டுக் கீழே விழுந்து புரள்வதைப் பார்த்துக் கதறிக் கதறி அழுதது.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட ரிஷி, ''அடே பாபீ! இப்படிச் செய்தாயே! நீ எவ்வளவு நாள் வாழ்ந்தாலும் இருக்க இடமின்றி அலையக் கடவாய்'' என்று தம்மையு மறியாமல் வேடனைச் சபித்து விட்டார். அடுத்த கணம், 'இப்படி ஏன் செய்தேன்' என்று நினைந்து நினைந்து வருத்தப்பட்டார். 'வேடனை நான் ஏன் சபித்தேன்? எனக்கென்ன உரிமை இதற்கு? கோபாவேசத்துக்கு இடம் தந்து விட்டேனே' என்று துக்கப்பட்டார்.

ரிஷியின் வாயினின்று வெளிப்பட்ட சாப மொழிகள் ஓர் அற்புத நாதத்தோடும் சந்தத்தோடும் அவருடைய காதிலேயே தொனித்தன. அதைக் கண்டு ரிஷியானவர் வியப்பு அடைந்தார். பறவைகளின் துக்கத்தைக் கண்டு தம் உள்ளத்தில் உதித்த கருணையும், அடங்காத மனக் கலக்கமும் சாப உருவம் கொண்டு, தம்மையறியாமல் ஓர் அருமையான பாட்டாக அமைந்து விட்டதைக் கண்டு பேராச்சரியம் கொண்டார். 'இது எனக்கு விளங்காத ஆண்டவன் திருவிளையாடல்' என்று எண்ணித் தியானத்தில் அமர்ந்தார்.

இந்நிலையில் சாக்ஷாத் நான்முகக் கடவுளே பிரத்யட்சமாக வந்து, ''ரிஷி சிரேஷ்டரே, திகைக்காதீர்! ராம சரித்திரத்தை எழுதும் முறையை உமக்குக் காட்டவே இந்த நிகழ்ச்சி நடந்தது. சோகத்திலிருந்து தோன்றிய சுலோகத்தையே வைத்து ரகுநாதரின் கதையைப் பாடி உலகத்துக்கு உதவும் திறமையை



உமக்கு வரமாகத் தந்தேன்'' என்று சொல்லி மறைந்தார்.

அதன் மேல் வேடனைக் கோபித்துச் சொன்ன சாப மொழிகளைத் திரும்பத் திரும்ப ரிஷியும் சீடர்களுமாகப் பாடிப் பாடி அந்தச் செய்யுள் வடிவத்தை மனத்தில் அமைத்துக் கொண்டார்கள். பின்னர் அந்தச் சந்தத்தில் ரிஷியானவர் ராம சரித்திரத்தைப் பூரணமாகப் பாடித் தம்முடைய சீடர்களுக்கும் கற்பித்தார். இதுவே வால்மீகி ராமாயணம் என்னும் புண்ணிய நூலின் அற்புதத் தோற்றுவாய்.

மக்களின் துக்கங்களை ஈசுவரனும் ஈசுவரியும் மானிட ஜாதியில் பிறந்து

தாமே நேரில் அனுபவித்து, தருமத்தை உறுதிப்படுத்திவிட்டு மறைந்த இந்தப் புண்ணிய கதையை வால்மீகி மகரிஷி ஒப்பற்ற மதுரமான முறையில் பாடி உலகத்துக்குத் தந்தார். ''பூமியில் மலைகளும் ஆறுகளும் உள்ளவரையில் இந்த ராமாயணம் மக்களிடை வழங்கும். எல்லாப் பாபங்களினின்றும் விடுதலை தரும்'' என்று நான்முகன் ஆசிர்வதித்துச் சொன்னது பொய்யாகாது.

கோசல தேசமானது கங்கைக்கு வடக்கே சரயுநதி பாய்ந்து செழிப்புற்ற விசாலமான தேசம். அந்த நாட்டின் தலைநகரம் அயோத்தி. மனு என்னும் புகழ் பெற்ற சூரிய குல அரசனால் நிர்மாணிக்கப்பட்ட நகரம். மிக்க அழகும் புகழும் பெற்ற பெரிய நகரம். வால்மீகி வருணித்திருப்பதைப் படித்தால் தற்கால ராஜதானி நகரங்களுக்கு எந்த விதத்திலும் அயோத்தி குறைந்ததாகத் தோன்றவில்லை. அந்த நாட்களிலேயே பாரத தேசத்தில் நகரங்களும் நகரப் பண்பாடும் மிக உன்னத நிலை அடைந்திருந்தன என்று தெரிகிறது.

தசரத சக்கரவர்த்தி இந்த அயோத்தி நகரத்திலிருந்து கொண்டு ராஜ்யத்தை ஆண்டு வந்தான். தசரதன் தேவர்களுக்காக யுத்தம் செய்தவன். மூன்று உலகங்களிலும் புகழ் பெற்ற அரசன். இந்திரன் குபேரன் இவர்களுக்குச் சமானமாக இருந்தான். கோசல நாட்டு ஜனங்கள் மிகச் சந்தோஷமாகவும் யோக்கியமாகவும் வாழ்ந்துவந்தார்கள். எண்ணிறந்த வீரர்களடங்கிய பெருஞ் சேனை ராஜ்யத்தை நன்றாகப் பாதுகாத்து வந்தது. சத்துருக்கள் கிட்ட நெருங்க முடியாத நிலையில் தசரதன் அயோத்தி நகரத்தைப் பாதுகாத்து வந்தான். சேனா பலம், கோட்டை மதிள் சுவர்கள், அகழிகள், எதிரிகளைத் தாக்கும் எந்திர அமைப்பு இவைகளால் காக்கப்பட்ட அந்த நகரம் சத்துருக்களால் யுத்தம் செய்து பிடிக்க முடியாததாக இருந்தது. அந்த நகரத்துக்கு அயோத்தி என்ற பெயர் பொருத்தமாகவே இருந்தது. 'அயோத்தி' என்றால் 'யுத்தத்தால் பிடிக்க முடியாத' என்று பொருள்.

தேவராஜனைப் போல் புகழும் ஐசுவரியமும் பெற்று அரசாண்டு வந்த தசரதனுக்கு மந்திரிகளும் சரியாக அமைந்திருந்தார்கள். அரசனுக்கு யோசனை சொல்வதிலும் இட்ட பணிகளை உடனே நிறைவேற்றுவதிலும் மிக்க சாமர்த்தியம் பெற்ற எட்டு மந்திரிகள் தசரதனுக்குச் சேவை செய்து வந்தார்கள். தர்மோபதேசம் செய்வதற்கும், பூஜை வேள்விச் சடங்குகள் முதலிய காரியங்களை நடத்துவதற்கும் வசிஷ்டர், வாமதேவர் முதலிய ரிஷிகளும், வேறு சிறந்த பிராமணர்களும் அரசன் பக்கத்தில் இருந்து வந்தார்கள்.

ஜனங்களைக் கஷ்டப்படுத்தாமல் சக்திக்குத் தகுந்தவாறு வரிகள் வசூலிக்கப்பட்டன. குற்றவாளிகளின் சக்தி, சூழ்நிலை இவற்றை உத்தேசித்து அபராதங்கள் விதிக்கப்பட்டன. ஆலோசனை சொல்லுவதில் நிபுணர்களும் ராஜ்ய காரியங்களில் சமர்த்தர்களுமான மந்திரிகளாலும் அதிகாரிகளாலும் சூழப்பட்டு ஆட்சி புரிந்த தசரதன் உதய சூரியன் ஜொலிப்பதைப் போல் ஜொலித்தான்.

2. குறை தீர்ந்தது!

ஆண்டுகள் பல நன்றாகக் கழிந்தன. ஆயினும் அரசனுக்கு ஒரு பெருங் குறை. புத்திர பாக்கியம் இல்லாத குறை. ஒரு நாள் — அப்போது வஸந்தருது — அரசனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. 'அசுவமேத யாகமும் புத்திர காமேஷ்டியும் செய்வித்தேனால் ஒருவேளை மக்கட் பேறு பெறுவேனோ' என்று எண்ணினான். குருக்களைக் கேட்டதில் அவர்களும் ரிஷ்யசிருங்க முனிவரைத் தருவித்து அவர் தலைமையில் வேள்வியை நடத்தத் தீர்மானித்தார்கள். தீர்மானித்தபடி சகல ஏற்பாடுகளும் செய்தார்கள். அரசர்களுக்கு அழைப்பு, யாகசாலை நிர்மாணத்துக்கு வேண்டிய காரியங்கள் எல்லாம் மிகத் தீவிரமாக நடைபெற்றன.

அந்தக் காலத்தில் வேள்வி என்றால் சாமான்யமல்ல. யாக மேடைக்குரிய அளவுகள் எடுத்து மிக ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். அதற்கே தனி நிபுணர்கள் உண்டு. அவர்கள் கலந்து நிச்சயித்து உத்தரவிட்டபடி வேலைக்காரர்களைக் கொண்டு எல்லாம் தயாரிக்க வேண்டும். யாக பாத்திரங்கள் செய்யும் நிபுணர்களைத் திரட்டி, அவர்



களுக்கு இன்ன இன்னது செய்யுங்கள் என்று சொல்லி வேலை வாங்க வேண்டும். தச்சர்கள், சிற்பிகள், குளம், கிணறு வெட்டுகிறவர்கள், சித்திரக்காரர்கள் பாடகர்கள், வாத்திய சங்கீதக்காரர்கள் நிருத்தியக் கலைஞர்கள் இன்னும் இம் மாதிரியான பல பேர்களைத் திரட்ட வேண்டும். விருந்தினர்கள் தங்குவதற்கு ஒரு புதிய நகரமே நிருமாணித்து ஆயிரக் கணக்கான ஜனங்களுக்குப் போஜனமளித்து, உபசரித்து, மாடுகள், துணிகள் முதலியன கொடுக்க வேண்டும். ஆட்டம், சங்கீதம், வேடிக்கை முதலியவைகளையும் ஏற்பாடு செய்து, பெருங் கூட்டத்தைத் திருப்தி செய்து அனுப்ப வேண்டும். தற்கால உலகில் ராஜாங்க ஆதரவில் நடத்தப்படும் பெரிய சம்மேளனங்களைப் போலவே அந்தக் காலத்தில் வேள்விகள் நடத்தப் பட்டன.

எல்லாக் காரியங்களும் சரியாகவும் மும்முரமாகவும் நடத்தப்பட்டு, யாகக் குதிரையும் அதனுடன் ஒரு வீரர் படையும் பல நாடுகள் சுற்றி வரும்படி அனுப்பப்பட்டன. ஒரு வருஷம் கழித்து எந்த இடையூறுமில்லாமல் யாகக் குதிரையும், குதிரையை அழைத்துச் சென்ற வீரர்களும் வெற்றிக் கொண்டாட்டத்துடன் நகரத்துக்குத் திரும்பி வந்தார்கள்.

அதன்மேல் யாகத்தை சாஸ்திரப்படி செய்ய ஆரம்பித்தார்கள். அயோத்தியில் இது நடக்க, தேவர்களுக்குள் நடந்த யோசனையை வால்மீகி பின்வருமாறு சொல்கிறார்:

நான்முகக் கடவுளைப் பார்த்துத் தேவர்கள் சொன்னார்கள்: ''பகவானே! உம்முடைய வரத்தைப் பெற்றுக் கொண்டு ராவணன் என்ற அரக்கன் எங்களுக்கெல்லாம் மிகுந்த தொல்லை தந்து வருகிறான். அவனை நாம் அடக்கவோ, ஜெயிக்கவோ, கொல்லவோ முடியவில்லை. உம்முடைய வரத்தினால் அவனுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டு அவனுடைய அகங்காரம் அதிகரித்து துஷ்டனாகப் போய் அவன் எல்லோரையும் அவமதித்தும் கொடுமை செய்தும் வருகிறான். இந்திரனைத் துரத்திவிட்டுத் தேவலோகத்தையே கைப்பற்ற எண்ணுகிறான். அவனைக் கண்ட சூரியனும் வாயுவும் வருணனும் யாவருமே பயப்பட்டு நடுங்குகிறார்கள். அவன் அகங்காரத்தை அடக்கி அவன் கொடுமையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் யோசனை நீர் தான் சொல்ல வேண்டும்.''

இதைக் கேட்ட பிரம்மன், ''இந்த ராவணன் தவம் செய்து வரம் பெற்றிருக்கிறான். வரம் கேட்கும்பொழுது, நல்ல வேளையாக அவனே ஒரு விஷயத்தை விட்டுவிட்டான். தேவ, கந்தருவ, ராக்ஷசர்களால் தனக்கு மரணம் உண்டாகக் கூடாது என்று வரம் பெற்றானே ஒழிய மானிடர்களைப் பற்றிக் கேட்கவில்லை. மனித ஜாதியை மறந்தோ அலட்சியம் செய்தோ விட்டு விட்டான். ஆனபடியால் இதற்கு வழி உண்டு'' என்றான்.


எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. உடனே மகாவிஷ்ணுவைச் சரணமடைந்தார்கள். ''லோக நாதனே! ராவணன் என்ற துஷ்டன் பிரம்மாவினிடம் வரம் பெற்று உலகத்தை இம்சை செய்து வருகிறான். அதைப் பொறுக்க முடியவில்லை. அவன் அமரத்வம் கேட்டுப் பெற்ற வரத்தில் மனிதனால் அவனுக்கு மரணமில்லை என்று சேர்க்கப்படவில்லை. மறந்தோ, அலட்சியம் செய்தோ அவன் அதைக் கேட்கவுமில்லை. பிரம்மனிடமிருந்து பெறவுமில்லை. ஆகையால், தங்களுடைய அருள் எங்களுக்கு வேண்டும். மனித ஜன்மம் எடுத்துத் தாங்கள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்றார்கள்.

நாராயணனும் அப்படியே என்று ஒப்புக் கொண்டு, ''பூவுலகில் புத்திர பாக்கியத்துக்காக யாகம் செய்யும் தசரதருக்கு நான்கு குமாரர்களாக நான் அவதரித்து ராவணனைக் கொன்று உங்களுக்கு விடுதலையும் தருவேன்'' என்றான். அவ்வாறே தசரதனுடைய மூன்று மனைவியரின் வயிற்றில் கர்ப்ப வாசம் செய்யத் திருவுள்ளம் கொண்டான்.

ஃ ஃ ஃ

ரிஷ்ய சிருங்கர் வேள்வித் தீயில் ஆகுதி விட்டார். நெய்யைத் தீ விழுங்கிற்று. தீயிலிருந்து பொங்கி எழுந்தது கொழுங் கனல் போன்ற ஒரு பெரிய உருவம். அதன் பிரகாசம் சூரியனைப் போல் கண்களைக் கூசச் செய்தது.

இரு கைகளாலும் ஒரு திவ்விய தங்கப் பாத்திரத்தை ஏந்தி நின்றது. கம்பீரமான துந்துபி ஸ்வரத்தில் சொல்லிற்று: ''தசரத மகாராஜனே! உன்னுடைய பிரார்த்தனையை ஒப்புக்



கொண்டு தேவர்கள் இந்தப் பாய சத்தை உன் மனைவியர்களுக்கென்று அனுப்பியிருக்கிறார்கள். உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும். இதைப் பெற்றுக் கொண்டு உன் பத்தினிகளுக்குத் தருவாயாக. மங்களம்!'' என்றது.

தசரதனும் அடங்கா மகிழ்ச்சியடைந்து குழந்தையைத் தூக்கி எடுப்பது போல் வெகு பிரியமாகப் பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டான். நெருப்பிலிருந்து கிளம்பிய யாக புருஷனும் மறைந்தான்.

வேள்வி முடிந்த பின் அரசன் பாயச பாத்திரத்தை அப்படியே எடுத்துக்கொண்டு அந்தப்புரம் சென்று தனது மனைவியரிடம் கூறினான்:

''தேவர்களின் பிரசாதம் இதோ கொண்டு வந்திருக்கிறேன். இதை நீங்கள் மூவரும் அருந்திப் புத்திரப் பேறு அடையுங்கள்!'' என்று சொன்னான்.

இந்த மகிழ்ச்சிச் செய்தியைக் கேட்டதுமே அந்தப்புரம் சரத் கால சந்திரகாந்தியின் பொலிவு அடைந்தது. தசரதனுக்கு மூன்று பத்தினிகள். பாத்திரத்தில் உள்ள பாயசத்தில் பாதி கௌசல்யா தேவி அருந்தினாள். சுமித்திரைக்கு அப்படியே தந்து மிகுதியில் ஒரு பாதியை அவள் அருந்தினாள். மிஞ்சிய பாயசத்தில் பாதியைக் கைகேயி அருந்தினாள். பின்னர் எஞ்சி நின்ற பாயசத்தைத் தசரதன் மறுபடியும் சுமித்திரைக்குக் கொடுத்தான்.

பரம ஏழை ஒருவன் பணம் நிறைந்த பானை ஒன்றை—புதைந்து கிடந்ததைத் திடீர் என்று அடைந்து பெற்ற மகிழ்ச்சியைப் போல் தசரதனுடைய மூன்று மனைவிகளும் மகிழ்ந்து மனம் பூரித்தார்கள். எதிர்பார்த்தபடி மூன்று ராஜ பத்தினிகளும் கர்ப்பம் தரித்தார்கள்.

(தொடரும்)

இலக்கியத் திறனாய்வுப் போட்டி

பரிசு பெற்ற கல்லூரி மாணவர்கள் :

முதல் பரிசு :

ஜே. குப்புராஜ், பி. எஸ்ஸி. (கணிதம்), வைஷ்ணவக் கல்லூரி
29, படவேட்டம்மன் கோயில் தெரு, சென்னை-12

திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதை:

தெய்வ மணம்

இரண்டாம் பரிசு :

வி. எஸ். ஸரோஜா, பி. எஸ். ஸி., எம். ஏ. ஆங்கிலம் முதலாண்டு
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 11, மகளிர் விடுதி, அண்ணாமலை நகர்

திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதை:


மின்மினி

மூன்றாம் பரிசு :

வெ. மு. சாசகான் கனி, பி. எஸ்ஸி. (பைனல்)
C/o கல்லூரி முதல்வர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை-2

திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதை:

உயரத்தில் ஒரு கோபுரம்


சொல்லுங்கள்,
பார்ப்போம், நான்
அணியப்போவது என்ன?
Lakmé
TALC
லக்மே டால்கம்
இலேசு. இணைபிரியாதது, எழில்மிக்கது. லக்மே டால்கம்.
அணைந்திடும் நறுமணங்கள் ஐவகை: லேவெண்டர்,
வெட்டிவேர், நிர்வாண், சந்தனம்; மீடியம் மற்றும்
எகானமி சைஸ்களிலே வருபவை. தவிர, பூரிக்கவைக்கும்
மற்றுமொரு புதுமணம்—ஃப்ளோரல் மிஸ்ட்—பெரிய
ஃபேமிலிசைஸில் வருகிறது. எல்லாமே உங்கள்
கைக்கெட்டிய விலைநயம் உடையவை.
Lakmé
ASP/L-42

தீராத விளையாட்டு



கு. அழகிரிசாமி

அத்தியாயம் 1

இரண்டு பேர் சந்தித்தால் அந்த நிமிஷத்திலேயே வெயில் கொடுமையைப் பற்றிப் பேசும் சித்திரை மாதம். வருஷம் தவறாமல் சில மாத காலத்துக்கு இந்தப் பேச்சை மறந்து விடாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக இப்படிப் பேச வேண்டும்? பேசித் தீர்க்கிற பிரச்னையா வெயில்! இப்படிப் பேசுகிற பழக்கம் எங்கிருந்து வந்தது? யாரிடம் கற்றுக் கொண்ட பாடம்?

ரங்கராஜன் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டான். மாடியின் முகப்பு அறையில் அவன் படுத்திருக்கும் கட்டிலுக்கு மேலே உள்ள ஜன்னல் வழியாகக் கேட்ட சில சம்பாஷணைகளே அவனை இந்த ஆராய்ச்சியில் இறங்கச் செய்தன. அப்போது மணி ஒன்று ஒன்றரை இருக்கும். சாப்பிட்டுவிட்டுச் சிரம பரிகாரமாகப் படுத்துக் கொண்டிருந்தான். தூங்க வேண்டும் என்ற நோக்கம் எதுவும் கிடையாது.

மாடியின் நடு ஹாலில் எதிர் எதிராக இரண்டு பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு சுந்தரியும் தங்கமும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''எந்த வருஷத்திலும் வெயில் இவ்வளவு கொடுமையாக இருந்ததில்லை'' என்றாள் சுந்தரி. அதைத் தங்கம் ஒப்புக் கொண்டாள். இதையொட்டிச் சில நிமிஷங்கள் சம்பாஷணை செய்த பிறகு, 'எந்த வருஷத்திலும் வெயில் இவ்வளவு கொடுமையாக இருந்ததில்லை' என்றாள் தங்கம். அதைச் சுந்தரி ஒப்புக் கொண்டாள். ஒரே விஷயத்தை ஏறக்குறைய ஒரே வாக்கிய அமைப்புடன் ஒருத்தி சொல்வதும் மற்றொருத்தி ஆமோதிப்பதுமாக இருந்தார்கள். வெயிலைப் பற்றியே ஒரு நாள் முழுவதும்கூட அலுப்புச் சலிப்பில்லாமல் தொடர்ந்து பேசுவார்கள் போலிருக்கிறதே என்று எண்ணி வியப்புக்குள்ளானான் ரங்கராஜன்.

'பரவாயில்லை! விஷயமில்லாமலே நாள் கணக்கில் பேசக் கூடியவர்கள் இருக்கும்போது, அப்படிப் பேசுவதும் சுலப சாத்தியமாக இருக்கும்போது. இவர்கள் வெயில் என்ற ஒரு விஷயத்தை வைத்துக் கொண்டாவது பேசுகிறார்களே! பொருளற்ற பேச்சில் எத்தனையோ நூற்றாண்டுகளை—ஒருவேளை ஆயிரக் கணக்கான ஆண்டுகளையே — இந்தத் தேசம் கழித்து நன்றாகப் பழக்கப் பட்டிருக்க வேண்டும். இந்த வித்தையைக் கைவரப் பண்ணுவதில் எத்தனையோ தலைமுறைகளைக் கழித்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த இரண்டு பெண்களும் இப்படி ஒரு சாதாரணமான விஷயத்தைப் பற்றி ஓயாமல் பேச முடிந்திருக்குமா? பேச முடிந்தாலும் சலிப்புத் தட்டாமல் இருக்க முடியுமா? இப்போது இரண்டுமே முடிகிறதே!'

ரங்கராஜனுக்கு அங்கே நிச்சிந்தையாகப் படுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. இப்பொழுதே எழுந்து சென்று அவர்கள் சம்பாஷணையில் கலந்து கொள்ளலாமா? ஒரு நிமிஷம் கழித்துப் போகலாமா, என்று யோசித்துக் கொண்டே ஒவ்வொரு நிமிஷத்தையும் கழித்துக் கொண்டிருந்தான்.

''அந்த அரச மரத்தைப் பார். ஓர் இலைகூட அசங்காமல் இருக்கு. வெளியே காத்து என்கிற நாமதேயமே இல்லை. இங்கே ஃபேன் சுத்துதோ பொழைச்சோமோ?'' என்றாள் தங்கம்.

''மதுரையிலே எந்தக் கோடையிலே தான் காத்து அடிச்சிருக்கு? சாயங்காலமா அப்படி ரேஸ்கோர்ஸ் பக்கமாப் போனால், கொஞ்சம் காத்தைப் பார்க்கலாம். அதுவும் ஏனோ தானோன்னுதான் அடிக்கும்'' என்று சுந்தரி சொன்னாள்.

அப்போது தங்கம், ''வெயில் அடிக்கட்டும்; காத்து அடிக்காமல் இருக்கட்டும். ஆனால், உடம்பிலே இப்படிக் கருமருந்து வாடை அடிப்பானேன்? இந்த அதிசயம் வேறே எந்த ஊரிலேயும் கிடையாது. ஒரு தடவை வேர்த்துட்டா, ஜாக்கெட், சேலை எல்லாம் தீப்பெட்டியை மோந்து பார்த்தமாதிரி இருப்பானேன்?'' என்று கேட்டாள்.

''மதுரையைக் கந்தக பூமின்னு சொல்லுவாங்களே, நீ கேட்டதில்லையா தங்கம்?'' என்று உள்ளே இருந்து கொண்டே ஜானகி அம்மாள்—ரங்கராஜனின் தாயார் — சொன்னாள். பிறகு பின்கட்டிலிருந்து ஹாலை நோக்கியும் வந்தாள்.

அம்மாவின் குரல் திடீரென்று கேட்டது ஒரு சாதாரண விஷயம் தான் என்றாலும், சற்றும் எதிர்பாராத ரங்கராஜனுக்கு அது வேறோர் அபிப்பிராயத்தைப் பிறப்பித்து வைத்தது.

'அம்மாவுக்கு வயசாயிட்டது என்கிறதுக்கு இதுவும் ஓர் அடையாளம். இந்தத் திடீர்க் குரல் கொடுக்கிறது முக்கியமான ஒரு முதுமையம்சம். சின்ன வயசுப் பிள்ளைகள் என்ன பேசறாங்க என்கிறதைக் கவனியாத மாதிரி சில கிழங்கள் மூலையிலே உட்கார்ந்திருக்கும். இல்லேன்னா இங்கேயும் அங்கேயுமாப் போகவும் வரவுமா இருக்கும். ஆனா மத்தவங்க பேசறதைப் பத்திப் 'படார்'னு அதுகள் வாயிலிருந்து ஓர்

அபிப்பிராயம் வரும். சில கிழங்கள் பரிகாசமா ஒரு செருமுச் செருமிட்டும் போகும். அந்த முத்தாய்ப்பிலே இருக்கிற ரசமே வேறே. அம்மாவும் அந்த மாதிரிதான் 'கந்தக பூமி'ன்னு ஒரு சொல்லைப் போட்டு அபாரமா முத்தாய்ப்பு வச்சிருக்கிரு! பிரமாதம்!'

ரங்கராஜன் கட்டிலை விட்டு எழுந்து நேரே ஹாலை நோக்கி வந்தான்.

''பூமிதான் கந்தக பூமி. மனுஷாளும் கந்தகமாயிடணுமா என்ன? இருந்தாலும் இந்த மதுரை மகா மோசம்...'' என்று தங்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரங்கராஜன் ஹாலுக்கு வந்து விட்டான்.

ஜானகியம்மாள் அங்கே வெறுந் தரையிலேயே முழங்கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்து விட்டாள்.

அதைப் பார்த்த ரங்கராஜன் உடனே ஓடிப்போய் ஒரு தலையணையை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

''அப்படியே ஒரு ஜமுக்காளத்தையும் எடுத்து வந்திருக்கப்படாதோ?'' என்றாள் தங்கம்.

''வேண்டாம் தங்கம். இந்தச் சிமின்டுத் தரைதான் இந்த நேரத்துக்குச் சரி. ஜில்லுன்னு இருக்கு...'' என்றாள் ஜானகியம்மாள்.

கடிகாரம் ஒரு மணி அடித்தது. அப்போது மணி சரியாக ஒன்றரை.

''பொழுது அடையற வரையிலும் இந்த வேக்காடுதான்...'' என்று தங்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரங்கராஜன் குறுக்கிட்டு, ''தங்கம்! நீயும் சுந்தரியும் வாய் ஓயாமல் 'வெயில் வெயில்'னு பேசறீங்களே! நீங்க என்ன ஊட்டியிலிருந்து வர்றீங்களா? இல்லை. வட துருவத்திலிருந்து வந்து இறங்கியிருக்கிறீங்களா? நீ சாத்தூரிலேருந்து வர்றே! சுந்தரி திருச்சியிலேருந்து வந்திருக்கிரு! அங்கே யெல்லாம் இப்போ வெயிலே கிடையாதோ? நேத்திக்குப் பேப்பரை எடுத்துப் பாரு: மதுரையிலேயும் 103 டிகிரி; திருச்சியிலேயும் 103 டிகிரி. சாத்தூர் டிகிரி என்னன்னு போடலை. கணக்கெடுத்துப் பார்த்திருந்தால் 106னு இருந்திருக்கும்'' என்றான்.

தங்கத்தைத் தவிர எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

''அம்மா! இவ்வளவு நேரமும் இவங்க பேசினதை நீ எப்படிப் பொறுமையாக் கேட்டுக்கிட்டிருந்தே? கத்திக் கத்திப் பருப்புக் கடைஞ்ச மாதிரி ஒரே சமாசாரத்தைப் போட்டுக் கடைஞ்சிக்கிட்டிருக்கிறாங்களே! நம்ப தேசத்துக்கு வெயில் ஒண்ணும் புதுசில்லையே! கொல்லைப்புறத்திலே பூமத்திய ரேகை ஓடறபோது, இதைப் பத்திப் பேசலாமா? இங்கிலீஷ்காரன் பேசலாம்; ரஷ்யாக்காரன் பேசலாம். வேறே எவன் வேணும்னாலும் பேசலாம். நாமும் சேர்ந்து பேசறதா?...''

''பேசிட்டுப் போகுதுகள். காசா? பணமா? பொழுதும் போகணுமே!'' என்று சொன்னாள் ஜானகியம்மாள். கொஞ்சம் மௌனமாக இருந்துவிட்டு இலேசான சிரிப்புடன் ''பொண்களாச்சே! வாயை மூடிக்கிட்டு இருன்னா எப்படி இருப்பாங்க?'' என்று சொல்லி முடித்தாள்.

''ஏன்? ஆண்கள் மட்டும் வாயைத் திறக்காமல் அடக்கமா இருந்துடறாங்களாக்கும்? பார்க்கப் போனால் பெண்கள் தேவலை. வீட்டுக்கு யாரும் வந்தாப் போனாத்தான் பேசுவாங்க. ஆண்களுக்கு வீட்டிலேயும் பேச்சு; வெளியிலேயும் பேச்சு. கோயில்லே குளத்திலே, தெருவிலே, திண்ணையிலே இப்படிக் கண்ட கண்ட இடங்களிலே பேசறது போதாதுன்னு, பொதுக் கூட்டம் வேறே போட்டு நடுச் சாமம்வரையிலும் பேசித் தீர்க்கிறாங்க. பெண்கள் எங்கேயாவது இப்படி லைசென்ஸ் வாங்கிப் பேசியிருக்கிறாங்களோ? பொழுது விடிஞ்சாப் பொழுது போனால் ஆண்கள் பேச்சோ பேச்சுன்னு பேசறாங்களே, இத்தனை பேச்சும் ஒரு உப்புக்கல்லுக்குப் பிரயோசனம் உண்டா? என்ன பேசியும் எவ்வளவு பேசியும் அரிசி விலை இறங்கி விட்டதா? இல்லை, பருப்பு விலை இறங்கிவிட்டதான்னு கேட்கிறேன்...''

''தங்கம்! விலை இறங்கா விட்டாலும் பரவாயில்லை. மொதல்லே அரிசி தாராளமாக் கிடைக்குதான்னு பாரு'' என்றாள் சுந்தரி.

''அரிசி என்ன, இப்போ தண்ணியே தாராளமில்லாமப் போச்சே, அதைச் சொல்லு!'' என்றாள் ஜானகி அம்மாள்.

எல்லோரும் ஒரு மொத்தமாகச் சிரித்தார்கள்.

சிரித்த பிறகும், விஷயத்தை மறக்காமல், ''ஆண்கள் பேசல்லையாம்; பெண்கள்தான் பேசறாங்களாம்!'' என்று ஞாபகமாக ரங்கராஜனை மட்டம் தட்டினாள் தங்கம்.

அவனால் ஒன்றுமே பேச முடியவில்லை.

''ராஜா! பேச்சை அப்படியே விட்டுவிடு. தங்கத்தோட பேசி உன்னாலே ஜயிக்க முடியாது!'' என்றாள் சுந்தரி.

''நான் ஜெயிக்கல்லேன்னு ஒண்ணும் கவலைப்படல்லை, சுந்தரி. என் கவலை வேறே! நான் வேறொரு சமாசாரத்தை நினைச்சுக் கவலைப்படறேன்'' என்று ராஜா இழுத்தான். அவன் பேச்சில் பரிகாசமும் தொனித்தது.

''எதை நினேச்சுக் கவலேப்படறே, ராஜா? தங்கத்தைப் போலே ஒரு வாயாடிக்காரி பெண்டாட்டியா வந்துட்டா என்ன பண்ணுறதுன்னு கவலேப்படறயா?''

''அதைப் பத்தி நான் யோசிக்கவே இல்லே. இப்போ நான் கவலேப்படுறது இந்த வாயாடியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன் இவகிட்டே அகப்பட்டு என்ன பாடுபடப் போருனே என்றதைப் பத்தித்தான்! பாவம்!''

கல்யாணம் என்றதும் தங்கம் சங்கோசத்திஞல் வாயை மூடிக்கொண்டு முகத்தைக் கவிழ்த்துக் கொள்வாள்; இல்லேயென்ருல் எழுந்து ஓடிவிடுவாள் என்று எதிர்பார்த்தான் ரங்கராஜன்.

அவள் அப்படி ஒன்றும் செய்யவில்லே. இருந்த இடத்திலேயே இன்னும் கொஞ்சம் அழுத்தமாக உட்கார்ந்து கொண்டு தலேயையும் அதிகமாக நிமிர்த்திக் கொண்டு, குரலேயும் கொஞ்சம் ஏற்றிக் கைவீசிப் பேசத் தொடங்கி விட்டாள்.

''ராஜா! முதல்லே நீ கல்யாணம் பண்ணிக்கொள். அப்புறம் என் கல்யாணத்தைப் பத்திப் பேசலாம். என்னேச் சொல்றே பாரு. அந்த மாதிரி நீயும் ஒருத்திகிட்ட அகப்பட்டுக்கிட்டுப் படாத பாடு படுறதைப் பார்த்துட்டுத் தான் நான் கல்யாணம் பண்ணிக்கிடு வேன். தெரிஞ்சுதா?''

''சபதம் போடற மாதிரிப் பேசறயே? சினிமாவிலே யாரும் இப்படிப் பேசிக் கேட்டயோ?''

''சபதம்தான்! ஆமாம்...''

''தங்கம், நான் கல்யாணத்துக்குத் தயார். நேத்தே அம்மா சொல்லிட்டா. அம்மா சொல்லியாச்சுன்னு நிச்சய தார்த்தம் பண்ணிட்ட மாதிரிதான். பொண்ணுக்கு இன்னும் கொஞ்சம் வயசாகட்டுமேன்னு பார்த்துக்கிட்டிருக்கிறேன்...''

''அது யாரு அந்தப் பொண்ணு? அம்மா, நீ யாரை நிச்சயம் பண்ணினே?'' என்று தங்கம் ஆவலோடு கேட்டாள்.

''அம்மாவை ஏன் கேட்கிறே? என்னேக் கேளு...''

''சொல்லேன்!''

''நம்ப ரூபியைத்தான் சொல்றேன்.''

''எந்த ரூபி?''

''உள்ளே தொட்டிலிலே தூங்குறாளே, சாட்சாத் அந்த ரூபியைத் தான். நேத்து அவளேத் தூக்கி வச்சிக்கிட்டிருந்தப்போ, அம்மா சொன்ஞளே, 'உன்னேத்தாண்டி உன் மாமன் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கிறுன்! அதஞலேதான் ஒவ்வொரு பொண்ணு வேண்டாம் வேண்டாம்னு சொல்றுன்'னுட்டு. நீ கேட்கல்லேயா? ரூபிக்கு இன்னும் கொஞ்சம் வயசாக வேண்டாமா? என்ன சொல்றே?''

''ஆமாம். இப்போ அவளுக்கு எட்டு மாசம் நிறைஞ்சிட்டுது. இன்னும் ஒரு வயசாவது ஆகணும்தான்!''

மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

ரங்கராஜன் நாற்காலியை விட்டு எழுந்தான்.

''தங்கம்! கொஞ்சம் மெல்லச் சிரிக்கணும். ரூபி தூங்கிக்கிட்டிருக்கிறு! தெரிஞ்சுதா?'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து முகப்பு அறையை நோக்கித் திரும்பிஞன்.

அந்தச் சமயம் பார்த்து அருணுசல முதலியார் உள்ளே வந்தார். சாப்பிட்டுவிட்டு வெளியே போனவர் அரை மணி நேரத்தில் திரும்பி வந்துவிட்டார்.

படுத்திருந்த ஜானகி யம்மாள் எழுந்து நின்ருள்.

வந்ததும் வராததுமாக அருணுசல முதலியார் ஊருக்குத் திரும்ப ஆயத்த மாஞர்.

தங்கம் அவரைப் பார்த்து, ''அப்பா! கொஞ்சம் உட்காருங்கோ'' என்ருள்.

அவரும் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தார்.

''நாளேக்குப் போங்களேன்...''

''ஏன்? நீயும் கூட வரப்போறயா, தங்கம்?''

''இல்லே, இல்லே. இன்னிக்கு இருந்து ஒரு முக்கியமான காரியத்தைப் பத்திப் பேசணும் என்கிறதுக்காகச் சொல்றேன்....''

தங்கம் அப்போது ரங்கராஜனே ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டுச் சிரித்தாள்.

''என்ன முக்கியமான விஷயம்?'' என்று கேட்டார் அருணுசல முதலியார்.

''ராஜாவோட கல்யாணத்தைப் பத்தித்தான். இவனுக்கு இன்னும் வயசு காணுதுன்னு நினேக்கிறீங்களா?''

அவர் சற்றே முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''தங்கம்! உனக்கு ஆயிரம் தடவை சொல்லியாச்சு! இந்த மாதிரி பேசறதை எப்போ நிறுத்தப் போறே?'' என்று அவளேக் கண்டிக்கும் தோரணே யில் கேட்டார்.

''கல்யாணத்தைப் பத்தித்தானே சொன்னேம்ப்பா?''

''கல்யாணத்தைப் பத்தித்தான். அது சரி. 'ராஜா', 'அவன்', 'இவன்' என்று பேசாதே. சின்னக் குழந்தைகளா இருந்த போது பேசின மாதிரி இப்பவும் பேசக்கூடாதுன்னு உனக்கு எத்தனே தடவை சொல்லி யிருக்கேன்? வயசுக்கு மூத்தவன்; அதிலும் ஆறு

வயசு மூத்தவன். இப்படித்தான் மற்ற வங்க வீட்டிலே பேசறுங்களோ? அண்ணு, அண்ணுச்சின்னு மரியாதை யாய்ப் பேச வேண்டாம்?''

''அப்பா! அப்படிச் சொல்லவே வர மாட்டேங்குது. நான் என்ன செய்யட்டும்? அப்படிச் சொன்னுல், யாரோ அந்நிய மனுஷாளேப் பார்த்துச் சொல்கிற மாதிரி இருக்கு!...''

''தப்பு தப்பு! இந்த வழக்கத்தை இன்னிக்கோட விட்டுடு... அது சரி, நான் புறப்படறேன். கல்யாண சமாசாரத்தை நான் மறக்கல்லே. புதன் கிழமை திரும்பவும் வரப் போறேன். ஒரு நாள் தங்கி யிருந்து பேசுறேன். சரி தானே?... ராஜா! பார்த்துக்கோ, உன் கல்யாணத்துலே எங்களுக்கெல்லாம் இல்லாத அக்கறையப்பா உன் தங்கச்சிக்கு!''

''ரெண்டு தங்கச்சிகளுக்குமே!'' என்ருள் சுந்தரி.

''ஆமாமா, உன்னே மறந்துட்டனே! சுந்தரி, உன் அண்ணனுக்கு மட்டு மில்லே, உனக்கும் பிடிச்சிருக்கிற பொண்ணுத்தான் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்போம். ஆனல் நீ ரொம்பக் கடுமையா இருக்கப் படாது, 'அழகில்லே', 'அழகு பத்தாது' 'மூக்கு ஒரு மாதிரியா இருக்கு', 'முகம் ஒரு மாதிரி இருக்கு'ன்னு சொல்லிக் கழிச்சுக்கிட்டே இருந்தால் அப்புறம், உன் அண்ணனுக்குப் பிரம்மன் ஸ்பெஷலாத்தான் ஒரு பெண்ணேப் படைக்கணும். அதுவும் எப்படி? மூக்கு எப்படி இருக்கணும், முழி எப்படி இருக்கணும்னு ஒவ்வொண்ணேயும் உன்னேக் கேட்டுக் கேட்டுப் படைக்கணும்!...''

ரங்கராஜன் அப்போது கரகோஷம் செய்தான். சுந்தரி கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு சிரிப்பை அடக்கினுள்.

அருணுசல முதலியார் தொடர்ந்து பேசினுர்: ''நீ மட்டும் வந்த பெண்களே யெல்லாம் சொட்டை சொல்லாம இருந்திருந்தா இதுக்குள்ளே உங்க அண்ணனுக்குக் கல்யாணமாகிப் பேரன் கூடப் பிறந்திருப்பான்.''

வீடே அதிரும்படி சிரிப்பு முழக்கம் எழுந்தது.

சிரிக்காமல் இருந்தவர் வேருேர் அறைக்குள் தனியே உட்கார்ந்திருந்த நடராஜ முதலியார் ஒருவர்தான். இந்தப் பேச்சு அவர் காதிலும் விழுந்தது. ஆனல் சிரிக்கவில்லே. தம்பியின் ஹாஸ்யத்துக்கு அண்ணன் சிரிப்பது சரியல்ல என்பது மட்டும் காரணமில்லே. அவருக்கு அப்படிச் சிரிக்கும் பழக்கமும் கிடையாது. எந்தச் சந்தோஷத்தையும் முக மலர்ச்சியினுலும், அதனுேடு இணேந்த ஒரு பெருமிதத்தினுலும் இலேசான ஒரு சங்கோசத்தினுலும் வெளிப்படுத்தியே அவருக்குப் பழக்கம்.

அருணுசல முதலியாரின் வெடிகளேக் கேட்டு எட்ட நின்ற ஜானகி அம்மாள் ஒரே ஒரு தடவை மட்டும் சிரித்தாள். அவள் சுபாவமும் கொஞ்சமாகச் சிரிப்பதுதான்.

பிறகு அருணுசல முதலியார் விடை பெற்றுப் புறப்பட்டார். அப்போது நடராஜ முதலியாரும் எழுந்து அங்கு வந்தார்.

''எல்லாரும் இருங்க. போயிட்டு வர்றேன். புதன்கிழமை வருவேன். வரட்டுமா?'

விடைபெற்றுக் கொண்டு மாடியை விட்டு இறங்கிச் சென்ருர். ரங்கராஜன் மட்டும் பின்தொடர்ந்து வாசல்வரைக்கும் வந்து அவரை வழியனுப்பினுன்.

அத்தியாயம் 2

தங்கம் நேற்றுத்தான் அப்பாவோடு சாத்தூரிலிருந்து வந்தாள். சுந்தரியோ ஒரு வாரத்துக்கு முன்பே வந்துவிட்டாள். இன்னும் ஒரு வாரமாவது இருந்து விட்டுத்தான் திருச்சிக்குத் திரும்ப உத்தேசித்திருந்தாள். அது வரையிலும் தானும் மதுரையிலேயே இருக்க வேண்டும் என்பது தங்கத்தின் விருப்பம்.

இரண்டு வெவ்வேறு ஊர்களிலிருந்து இந்த இரு பெண்களும் ஒரே சமயத்தில் மதுரைக்கு வந்து தங்குவதற்கு முக்கியமான ஒரு நோக்கமோ, காரணமோ கிடையாது. சித்திரைத் திருவிழா, தமுக்கம் மைதானத்தில் ஆரம்பமாகி விட்ட பொருட்காட்சி — இந்த இரண்டையும் முன்னிட்டுச் சுந்தரியை அழைத் திருந்தான் ரங்கராஜன். அவள் ரூபியைப் பிரசவித்துக் குழந்தையோடு திருச்சிக்குப் போய் ஐந்தாறு மாதங்களாகிவிட்டன. கைக்குழந்தையை வைத்துக்கொண்டு தன்னந் தனியாகக் கஷ்டப்படுவாள். இரவில் தூங்குவதற்குக் கூட முடியாமல் இருக்கும், மதுரைக்கு வந்து இரண்டு வாரங்களாவது நிம்மதியாக இருந்துவிட்டுப் போகட்டும் என்று நினேத்த ஜானகி அம்மாள் ரங்கராஜனேக் கடிதம் எழுதும்படி சொன்னுள். அவனுடைய கடிதம் கிடைத்த இரண்டொரு நாட்களிலேயே

பதில் கடிதம் போட்டுவிட்டுக் குழந்தையோடு போன வாரம் வந்து சேர்ந்தாள் சுந்தரி. இவள் வந்திருப்பதைத் தெரிவித்துத் தங்கத்தையும் வரவழைத்தார்கள். அவளும் வந்து சேர்ந்தாள்.

சுந்தரிக்கு இரண்டு வருடங்களுக்கு முன் கல்யாணமாயிற்று. அதிலிருந்து அவளுடைய பிறந்த வீட்டில் அவளுடைய ஸ்தானத்தைத் தங்கம் வகிக்கத் தொடங்கி விட்டாள். கணவன் வீட்டுக்குச் சுந்தரியை அனுப்பிய பின் இரண்டு மாதங்கள் வரை தங்கம் மதுரையிலேயே இருந்தாள். அப்புறம் அவள் சாத்தூருக்குப் புறப்பட்டபோதுதான், சுந்தரியின் பிரிவை எல்லோரும் பூரணமாக உணர ஆரம்பித்தார்கள்.

''நீ தங்கத்துக்குத் தங்கமாக இருந்தே. சுந்தரிக்குச் சுந்தரியாக இருந்தே. இப்போ நீயும் புறப்பட்டுட்டே...போயிட்டு வா'' என்று அப்போது விடை கொடுத்தாள் ஜானகியம்மாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நடராஜ முதலியாரால் அங்கே சமாளித்துக் கொண்டு நிற்க முடியவில்லை. பிரிவுத் துயர் அவரையும் தாக்கிவிட்டது என்பதை அவர் உடம்பிலும் முகத்திலும் தோன்றிய சலனங்கள் எடுத்துக் காட்டின.

''இன்னிக்கில்லா விட்டாலும் என்னிக்காவது பொண்கள் பிறந்த வீட்டை விட்டுப் போக வேண்டியவங்கதானே?'' என்றாள் ஜானகி அம்மாள்.

''அடுத்த மாதம் வந்துடணும் தங்கம். நீ வரலேன்னா நானே வந்து கூட்டிக்கிட்டு வந்துடுவேன். தெரிஞ்சுதா?'' என்று சொன்னான் ரங்கராஜன்.

அப்படியே அடுத்த மாதமும் அவள் வந்தாள். ஒரு மாதம் இருந்து விட்டுப் போனாள். தந்தை மாதத்தில் இருபது நாட்களாவது மதுரைக்குக் காரியார்த்தமாக வந்து போகிறவராக இருந்தபடியால் அவள் நினைத்த நேரத்தில் இங்கே வருவதும் திரும்புவதும் சாத்தியமாக இருந்தது. இந்த இரண்டு வருஷ காலத்தில் பாதி நாட்களை அவள் மதுரையில்தான் கழித்தாள் என்று சொல்ல வேண்டும்.

ஏறக்குறைய ஆறு மாத இடைவெளிக்குப் பிறகு இப்போது இரண்டு பெண்களும் இங்கே வந்திருக்கிறார்கள். வீட்டில் சதா பெண் குரல்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. இந்த வறண்ட கோடையிலும் கூட வீட்டின் சூழ்நிலைக்கு ஒரு பசுமையும் குளுமையும் ஊட்டிக் கொண்டிருந்தன அந்தக் குரல்கள். இடையிடையே ரூபியின் மழலைப் பேச்சு வேறு அமிழ்தமாக அனைவர் உள்ளத்துக்கும் கிளுகிளுப்பு உண்டாக்கிக் கொண்டிருந்தது.



மாலை ஐந்து மணி அடித்ததும் ரங்கராஜன் எங்காவது வெளியில் போய் வரலாம் என்று நினைத்தான். பகலின் வெப்பம் அப்போதும் தணியவில்லை. எதிரே தெரியும் விநாயகர் கோவில் அரச மரத்தில்



அப்போதும் ஓர் இலை கூட அசைய வில்லை.

தங்கத்தையும் சுந்தரியையும் அழைத்துக் கொண்டு பொருட்காட்சிக்குப் போகலாமா? ரேஸ்கோர்ஸ் மைதானத்துக்குப் போய்க் காற்றாட உலாவி விட்டு வரலாமா? இல்லையென்றால் கோவிலுக்காவது போகலாமா?

சகோதரிகளையே கேட்டான் ரங்கராஜன். ஆனால் எடுத்த எடுப்பில் முடிவான அபிப்பிராயத்தை யாராலும் சொல்ல முடியவில்லை. பரஸ்பரம் கலந்து ஆலோசித்தார்கள். பரஸ்பரம் மறுத்துப் பேசினார்கள். பேசப் பேச முடிவு என்ன என்பது மேன்மேலும் எட்டவே விலகிச் சென்று கொண்டிருந்தது.

"நாம் பேசி முடிக்கிறதுக்குள்ளே பொருட்காட்சி வாசலைச் சாத்திப்பிடுவான் போலிருக்கே! பேசாமல், கோவிலுக்குப் போய்விட்டு வரலாம். பக்கத்திலே இருக்கு. எங்கே காத்தடிக்காட்டாலும் கோபுர வாசல்லே காத்தடிக்கும். அங்கேயே போகலாம். புறப்படுங்கோ" என்று ரங்கராஜன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "நல்ல யோசனை" என்று உள்ளே இருந்த ஜானகியம்மாள் அங்கே இருந்த வண்ணமே முத்தாய்ப்பு வைத்தாள்.

ரங்கராஜன் அந்தத் திசையை ஒரு முறை எட்டிப் பார்த்துவிட்டுத் தங்கத்தைப் பார்த்துத் திரும்பினான்.

"நாம் பேசறதையெல்லாம் எந்த மூலையிலிருந்தாலும் அம்மா ஒன்று விடாம கேட்டுக்கிட்டே இருப்பா போலிருக்கே! நடுநடுவே திடீர் திடீர் என்று அசரீரி மாதிரி ஒரு குரல் கொடுக்கிறதைப் பார்த்தியா, தங்கம்? வயசாக ஆக இப்படி ஒரு கவனமும் விழிப்பும் தானா வந்துடும் போலிருக்கே!"

ரங்கராஜன் இப்படிச் சொன்னது தங்கத்துக்கு அடியோடு பிடிக்கவில்லை.

"ராஜா! அம்மாவுக்கு அப்படி ஒண்ணும் வயசாயிடல்லே. நீ சும்மா இரு" என்று சொல்லி விட்டு விசுக்கென்று அவள் உள்ளே போய்விட்டாள்.

கோபித்துக்கொண்டு போகிறவளைப் போல் அவள் போனதைச் சுந்தரியும் ஆமோதித்தாள். ரங்கராஜனும் அதைப் புரிந்து கொண்டான்.

ஜானகியம்மாளுக்கு வயதாகிவிட்டது என்று ஒருவர் சொல்வதைக் காதால் கேட்கவே பொறாதவர்கள் சுந்தரியும் தங்கமும். தங்கத்துக்கு அவள் சொந்தத் தாயல்ல. பெரியப்பா மனைவிதான்; பெரியம்மா முறைதான். ஆனாலும் அவளிடம் உயிரையே வைத்திருக்கும் பேரன்பில் சுந்தரியையும் மிஞ்சி நின்றாள் அவள்.

ஒரு தடவை பெரியம்மாவைப் பார்த்து விட்டு, சில மாதங்களுக்குப் பிறகு திரும்பவும் வந்து பார்க்கும் போது, அவளுடைய தலையில் ஒரு நரை கூடியிருந்தாலும், முகத்தில் புதிதாக ஒரு சுருக்கமோ, கோடோ தென்பட்டாலும் அவளுக்கும் சரி, சுந்தரிக்கும் சரி, தாங்க முடியாத ஒரு துயரமாக இருக்கும். அப்படித் தங்கள் ஆசையாலும் ஆத்மாவினாலும் அம்மாவின் அழகை இருவரும் கட்டிக் காத்தார்கள். இது ரங்கராஜனுக்குத் தெரியும்.

சொல்லக் கூடாத வார்த்தையைச் சொல்லி விட்டது போன்ற ஒரு மனக் கஷ்டம் இலேசாக அவன் உள்ளத்தை அழுத்தியது. சற்று மௌனமாக இருந்தான். பிறகு ஒரு தெளிவும் சுதாரிப்பும் பெற்றான்.—'இந்தப் பெண்களுக்கு இரண்டு உண்மைகள் தெரியாது. எவ்வளவு தான் முதுமை எய்தினாலும் அம்மாவின் அழகுக்குப் பங்கம் இழைக்க முடியாது; அவளுடைய புற அழகையெல்லாம் விடப் பல்லாயிரம் மடங்கு அதிகமாக அவளுடைய குணத்தில் அழகு பொங்கி வழிகிறது. இந்த இரண்டும் தெரியாத பேதைப் பெண்கள்!'

சுந்தரியைத் திரும்பிப் பார்த்தான்.


"ஏன் நிற்கிறே சுந்தரி, ரூபியை எடுத்துக்கிட்டு வா. கோவிலுக்குப் போகலாம். அந்தக் கோபக்காரியையும் இழுத்துக்கிட்டு வா!" என்றான்.

அவன் வேடிக்கையாகப் பேசினாலும் சொற்கள் ஆழத்திலிருந்தே வந்தன.

வெளியே புறப்பட அவனும் தன்னைத் தயார் செய்து கொள்ள அப்பால் சென்றான்.

கடைசியில் ஆறு மணிக்குத்தான் மூவரும் — ரூபியோடு நால்வரும் — புறப்பட்டார்கள். அம்மா வேலை இருக்கிறது என்று வீட்டிலேயே இருந்துவிட்டாள்.

அவர்கள் வசித்த அந்தத் தெரு, தெற்கு ஆவணி மூல வீதியில் வந்து சேரும் ஒரு சிறு தெரு. சந்துகளை விட அகலமாக இருப்பதால் அதற்கும் தெரு என்றே பெயர். ஆனால் மொத்த நீளம் அரை பர்லாங்கூட இராது. ஏறக்குறைய ஒவ்வொரு வீட்டிலும் குடியிருக்கும் ஒவ்வொரு முகமுமே ரங்கராஜனுக்குப் பரிச்சயமான முகம்தான். ஆனால் அவன் முகமோ...? அந்தத் தெருவாசிகளின் கவனத்தைக் கவர்ந்த, பலருடைய உள்ளங்களைக் கொள்ளையே கொண்டுவிட்ட முகம். **(தொடரும்)**


லிப்டன் 'ரூபி டஸ்ட் டீ'
இன்பம் தந்திடும் இனியதொரு பானம்!
சுவை செறிந்தது! மணம் மிகுந்தது!
போட்டகணமே கிட்டிடும் தேநீர்!
சிறந்த தேயிலையைப் பருகி ரசிப்பவர் புகழ்வது ''லிப்டன்ஸ் ரூபி டஸ்ட் டீ'யையே!
ஒவ்வொரு ரூபி டஸ்ட் தேயிலைப் பாக்கெட்டும் தருவது அதிகக் கோப்பைத் தேநீர்!
செறிந்த மணம்! கெட்டியான பானம்! நேர்த்தியான சுவை!
பருகுவதிலோர் இன்பம்! விலையிலோ சிக்கனம்!
RUBY DUST
லிப்டன் என்றாலே நல்ல டீ
LIPTON
LRDC-1 TAM


அம்புலிக்கு 1 அப்பால்...
கதை: புஷ்பா படம்: விஜயா
கி.பி.2070-ம் ஆண்டில் ஒரு நாள். பேராசிரியர் சந்திரசேகரின் வாழ்க்கையில் அந்த ஒரு பொன்னாள். பத்திரிகை நிருபர்கள் அன்று அவரை மொய்த்தனர்.
தாங்க்யூ மிஸ்டர்!
காங்கிராஜுலேஷன்ஸ் புரொபசர் சார்! இந்தியாவின் தலைசிறந்த விண்வெளி விஞ்ஞானி என்று அரசாங்கம் விருது கொடுத்துக் கௌரவித்திருப்பது உங்களுக்குப் பெருமையும் தரும்.
ஒரு கேள்வி சார்: நீங்கள் தனித்து நின்றுதான் உங்கள் ஆராய்ச்சிகளை நடத்துகிறீர்களா?
நோ நோ!
உதவியாளர்கள் இல்லாமல் முடியாதே! என் வெற்றியில்-பெருமையில் அவர்களுக்கும் பங்குண்டு. அதிலும் குறிப்பாக, கோபியைச் சொல்ல வேண்டும்.
கோபி... அதாவது கோபாலன்?
அவன் என் வாரிசு போல.. அவனைத் தவிர முரளி, பிரபாகர் என்று இன்னும் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள்.. ஆனால் கோபிதான் என் சாதனைகளுக்கு முக்கியமான பக்க பலம்.
இதைக் கேட்டுப் பிரபாகர் மனத்துக்குள் பொருமினான்.
உம். எப்போதுமே இவர் இப்படித்தான். கோபி, கோபி என்று அவனையே தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகிறார். இருக்கட்டும்; நமக்கும் ஒரு காலம் வராதா!


அன்று மாலை ஆராய்ச்சிக் கூடத்தில் !
என்ன ஜோதி, மணி ஆறடிக்கப் போகிறதே, இன்னும் நீ புறப்பட வில்லையா?
எங்கே புறப்படச் சொல் கிறாய் ரவி?
வழக்கம் போலப் பூங்காவுக்குத் தான். உனக்காக அங்கு ராதிகா - உன் காதலி - காத்துக் கொண்டிருப்பாளே!
உஸ்! இரைந்து பேசாதே! புரொபசர் காதில் விழப் போகிறது!
விழுந்தால் என்ன ஸார்! உன்னை மாப்பிள்ளையாக அடைய அவர் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!
அப்போது ராதிகா அங்கு வந்தாள்.
என்ன இங்கே கல்யாணப் பேச்சு நடக்கிறது? யாருக்குக் கல்யாணம்?
ஹும்! அப்பா காதில் இது விழுந்தால் அப்புறம் என்ன இந்த ஆராய்ச்சிக் கூடப் பக்கமே வரக் கூடாதென்று தடையுத்தரவு போட்டுவிடுவார்! ஆராய்ச்சிதான் அவருக்கு முக்கியம்! அவருக்கு ஏற்ற மாப்பிள்ளைதான் இவரும்!



ஞானஒளி

கே. சுந்தரம்

காட்சி - 1

(பூண்டி அமலோற்பவ மாதா கோவில் பாதிரியாரின் இருப்பிடம். அவருக்கு எழுபது வயது. அமைதியின் திருவுருவமாக பூஜ்ய பாதிரியார் அடைக்கலம் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கிறார்.

எதிரே உள்ள மாதாவின் திருவுருவத்தைப் பார்த்தபடி தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். அவர் சிந்தனையைக் கலைக்கிறது ''சாமீ.....சாமீ.....'' என்ற குரல். திரும்பிப் பார்க்கிறார் பாதிரியார். எதிரே நிற்கிறான் அந்தோனி. ஏழடி உயரம், ஆஜானுபாகுவான முரட்டு உருவம். பயபக்தியுடன் நிற்கிறான்)

பாதிரியார் அடைக்கலம் *(திரும்பிப் பார்த்து)*: ஓ... அந்தோணியா? என்னடா? (ஆவலுடன்) 'டாட்டரை'க் கூட்டிட்டு வந்தியா?

அந்தோணி *(ஆம் என்று தலையசைத்தவன்)* : இப்ப போய் டாக்டரையும் கூட்டிட்டு வந்துடறேன் சாமீ....

பாதிரி : டாக்டரையா? *(மறுத்துத் தலையசைத்து)* உன் மகள் மேரி எங்கேடா? (இருமுகிறார்)

அந்தோணி *(ஆதங்கமாக)* : சாமீ! உங்க உடம்பு ரொம்ப மோசமாயிடுச்சுங்களே. அட, உங்களுக்காக இல்லாட்டியும் எங்களுக்காகவாவது.... வைத்தியம்....

"சாமீ இவளாலே தான்
உங்க லட்சியமும் என் கனவும்
ஒண்ணு நிறைவேறியாகணுங்க"



"குழந்தையா பிறந்ததும் ஞானஸ்நானம் வாங்க சர்ச்சுக்குத்தான் வரோம்..."





பாதிரி (இடைமறித்து) : நோவுக்குத் தாண்டா மருந்து வேண்டும்! குணப் படுத்த முடியும்! சாவுக்கு ஏண்டா மருந் தும் குணமும்! ம்... உதிர வேண்டிய இலே தானே... வாடிப் போன பூதானே.... ம்...! மேரியைக் கூப்பிடு.

(அந்தோணி வாசல்புறம் பார்த்து, "மேரி! மேரி!" என்று அழைக்க, உயர்தரமான உடை அணிந்திருக்கும் பதினாறு வயதும் பெண் உள்ளே வருகிறாள். பாதிரியாருக்கு மரி யாதை செய்து நிற்கிறாள்.)

பாதிரி (தம் இடுங்கிய கண்களால் பார்த்து விட்டு ஆச்சரியத்துடன்): யாரு இது?

மேரி: மேரி, ஃபாதர்!

பாதிரி: மேரியா? ஏதோ தேவதை போன்னு நினேச்சேன். (சிரித்தபடி) சின்னப் பெண்ணு ஸ்கிப்பிங் விளையாடற மேரிதான் என் ஞாபகத்துக்கு வருது!

அந் (அவர் கையைச் சொடக்குப் போட்ட படி): உங்க ஞாபகத்தில் இந்த அந்தோணியே கமர்கட்டு திங்கற அந்தோணியாத்தானே இருக்கேன்!

பாதிரி: டேய், இந்த டிரஸ்ஸிலே உன் பக்கத்தில் நின்னு மேரியை உன் மகள்னே சொல்ல முடியாதுடா! ஏதோ பணக்கார வீட்டுப் பொண்ணு மாதிரி இருக்கா. என்ன பேரி ......?

அந்: சாமி.... அது வந்துங்க... அவங்க காலேஜிலே அழகுப் போட்டி நடத்திச்சாம்.

மேரி: எனக்குத்தான் ஃபாதர் முதல் பரிசு! இந்தப் புடவை கிடைச்சது.

பாதிரி: அப்படியா... நல்லது, நல்லது! அப்போ காலேஜிலே அழகுக்குப் போட்டி அதிகம்னு சொல்லு! பெண்கள் அழகாயிருக் கிறது தப்பில்லே அம்மா! ஆனா அளவுக்கு அதிகமா அழகு பண்ணிக்கிறது குத்தம் தான்! ஆமா! உனக்குக் கல்லூரி லீவு விட்டு எவ்வளவு நாளாச்சு?

அந்: பத்து நாளாச்சுங்க!....

பாதிரி: உன்னை ஞாயிற்றுக்கிழமை அன்னிக்கு 'சர்ச்சு'லே பார்த்தது. 'மாஸ'க்கு வரதோட சரி. கூப்பிட்டாத்தான் என்னைப் பார்க்க வருவே! அப்படித்தானே ?

மேரி: அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே, ஃபாதர் ! பரீட்சை ரிஸல்டைப் பற்றி நினைச்சுக்கிட்டே இருந்ததிலே....

பாதிரி: பாஸ் பண்ணிடுவேல்லே?

மேரி: 'ஃபஸ்ட் கிளாஸ்'லே பாஸ் பண்ணிடுவேன் ஃபாதர் !

பாதிரி: வெரிகுட் ! அதைப் பத்தி விசாரிக்கத்தான் கூப்பிட்டேன். மேலே என்ன செய்யறதா முடிவு பண்ணியிருக்கிறே? படிக்கப் போறியா...? இல்லே, உங்கப்பன் உனக்குக் கல்யாணம் செய்யறதா இருக்கானு ?

அங்: கல்யாணமா? அந்த நினைப்பே இவள் மனசிலே வரப்படாது சாமி! இரவும் பகலும் இவளுக்கு அம்மாவாகவும் இருந்து நான் காப்பாத்தறேனே, எதுக்காக? நாளைக்கு நாலும் 'தகப்பன்'னு பேரெடுக்கணுமே! அட, இவள் ஆணா பொறக்கலே... அது ஒண்ணைத் தவிர வேறே என்ன குறை வைச்சேன்? ஊர் விட்டு ஊர் அனுப்பிப் படிக்க வைச்சேனே எதுக்கு? இவள் என்னைக்காவது ஊரே மூக்கு மேலே விரல் வைக்கிறாப்பலே உயர்வா வரணும் என்கிறதுக்காகத் தானுங்களே ?

பாதிரி (அவனைச் செல்லமாகக் கடிந்து): டே...டே... கத்தாதே ! உன் ஆசையை யாருடா கெடுத்தாங்க? ஏண்டா இவ்வளவு பெரிய சொற்பொழிவு நிகழ்த்தறே ? ம்... (அமைதி இழந்த மன உணர்வுடன்) என்னவோ தெரியலே. என் மனசு யாருக்காகவோ அழுதுக்கிட்டே இருக்கு... ம்...

அங்: சாமீ...!

மேரி: ஃபாதர் !

பாதிரி: ஆமாம், மேரி ! எனக்கு ரொம்ப வேண்டியவங்க யாரோ என் நெஞ்சிலே எட்டி உதைக்கிற மாதிரி ஒரு உணர்வு. வாய் விட்டுச் சொல்லத் தெரியாத ஒரு சஞ்சலமான நிலே....!

மேரி: என்ன ஃபாதர், சொல்லுங்க?

பாதிரி: அது.... ஏதோ இனம் தெரியாத வேதனை.... இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறேன்.


அங்: நான்கூடக் கவனிச்சேன். நீங்களும் காலையிலேயிருந்து ஒரு நாறு தடவை ஜன்னல் வழியா சர்ச்சையே பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டீங்க. அந்த மெழுகுவத்திகிட்டே நின்னு ஜபம் பண்ணிக்கிட்டே இருந்தீங்க !

பாதிரி: எனக்குத் தெரியலே... என் உள் மனத்தில் ஒலிக்கிற ஒரு குரலே என்னால் கட்டுப்படுத்த முடியலே ! ம்... என்ன பேசிக்கிட்டிருந்தோம் ?

மேரி: மேலே என்ன படிக்கப் போறேன்னு கேட்டீங்க.

பாதிரி: எஸ்... மேரி... உன் படிப்புக்கும் எங்க ரெண்டு பேருடைய லட்சியத்துக்கும் தொடர்பு இருக்கணும். பட்டமளிப்பு விழாவின் போது அணியும் கறுப்பு உடையை மாட்டிக்கிட்டுப் போட்டோ எடுத்துக்கவோ, இல்லே உன் பேருக்குப் பின்னுடி பெருமையா உன் பட்டத்தைக் குறிக்கும் எழுத்துக்களைச் சேர்த்துக்கவோ உன்னை நாங்க படிக்க வைக்கலே. மேரி... பட்டமளிப்பு விழாவிலே 'நான் சத்தியம் செய்யறேன், நான் சத்தியம் செய்யறேன்' என்று சொல்லி நீ படிச்ச படிப்புக்குச் சத்தியப் பிரமாணம் எடுக்கறியே, அதைச் செயல்படுத்தணும்!





கணக்கு உபாத்தியாயர்: "உன் கையில் எவ்வளவு விரல்கள் இருக்கின்றன?"

பையன்: "ஐந்து சார்!"

க. உ.: "அதில் நாலு விரல் போச்சுன்னு மீதி எவ்வளவு எழுது பார்க்கலாம்!"

பையன்: "மீச்சம் ஒரு விரலால் எப்படி எழுதுவது சார்?"

க. உ.: "எப்படித்தான் எழுதுவையோ, கணக்கு ரைட், உட்கார்!"

அந்: சாமீ... இவளாலேதான் உங்க லட்சியமும் என் கனவும் ஒண்ணு நிறைவேறியாகணுமுங்க. என்னைக்காவது ஒரு நாள் இந்தப் பூண்டி அமலோற்பவ மாதாவோட சக்தி எல்லாருக்கும் தெரியப் போவுது. அப்ப நம்ப சர்ச்சுலேயே ஒரு பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, என்னை மாதிரி வர ஏழைபாழைங்களுக்கு இப்போ உள்ளதைவிடப் பெரிய ஒரு அறைதை விடுதி எல்லாம் கட்டணும்.

பாதிரி (மகிழ்ந்து): டேய்.... அதாண்டா என் ஆசையும்!

அந்: அதனாலே சீட்டுக் குலுக்கிப் போட்டுத்தான் என் மகளை மேற்கொண்டு படிக்க வைக்கிறதாயிருக்கேன். டாக்டர்.... இல்லாட்டி டீச்சர்... இந்த இரண்டுலே எதுவானாலும் சரி, நம்ப மாதா கோயிலோட சேவைக்கு இவள் தன் வாழ்க்கையைப் பயன்படுத்த முடியுமே!

பாதிரி: உண்மைதான்! உலகத்திலே என்னதான் பணக்காரங்க ஏழைங்கன்னு பாகுபாடு இருந்தாலும் எல்லாரும் சமமா ஒண்ணு சேர்ர இடம் ரெண்டுதானிருக்கு. ஒண்ணு கோயில்! இன்னொண்ணு இடுகாடு!

மேரி: சவ அடக்கம் ஆவதற்கு முன்னால் கூட மாதா கோயிலுக்கு வந்துட்டுத்தான் போகணும்.

பாதிரி: உண்மைதான் மேரி! ஆங்கிலத்திலே ஒரு சின்ன விடுகதை உண்டு. ஆரம்பம்தான் முடிவு: முடிவுதான் ஆரம்பம். நீ நடுவில் இருக்கிறாய்! அது என்ன?

மேரி (யோசித்து): சர்ச்!

பாதிரி: எப்படி?

மேரி: CH ... UR ... CH. CH ஆரம்பம். முடிவு CH. UR இன் இ மிடில். நீ நடுவில் இருக்கிறாய்!

பாதிரி (சிரித்தபடி): நீ கெட்டிக்காரி அம்மா! அதோட உள்ளர்த்தம் என்ன தெரியுமா?

குழந்தையா பிறந்ததும் ஞானஸ்நானம் வாங்க சர்ச்சுக்குத்தான் வர்றோம். ஆயுள் முடிந்ததும் 'எக்ஸ்டர்மினேஷ'னுக்கும் அங்கேதான் வருகிறோம். நடுவிலேயும் அடிக்கடி பிரார்த்தனைக்கு அங்கேதான் வருகிறோம். அதனாலேதான் இந்தக் கிழவனோட ஆசையும் உங்கப்பனுடைய ஆசை மாதிரி இந்த மாதாகோயிலைப் பற்றியதாகவே இருக்கு!

நம்ப மேரி மாதாவோட மகிமையும் அவ இருக்கிற இந்தப் பூண்டியும் ரொம்பப் பிரபலமாகணும். இந்த இடம் புனித இடமா எல்லாருக்கும் நல்லது செய்யணும். இது என்னைக்காவது நிச்சயமா நடக்கும். நான் பிரார்த்தனைக்குப் பயன்படுத்துகிற மெழுகு வர்த்தியின் ஞான ஒளி எனக்கு உறுதியாகச் சொன்ன உண்மையும் இதுதான்.

அந்: சாமீ! நான்கூடத் தினம் என் சக்திக்கும் மீறி அதிகமாகவே உழைக்கிறேனுங்க!

காலையிலே ஒண்டியா கோயில் பூராவும் வெள்ளையடிச்சேன். நம்ம கோயில் பெரிய மணியைப் பளபளன்னு பாலிஷ் போட்டு கிரீஸ் தடவியிருக்கேன். இப்ப அடிக்கறப்ப பிரார்த்தனை முடியற நேரம் "ஆமென்"னு ஒலிக்குதுங்க.

கொல்லைப்புறத்திலே புதர்களையெல்லாம் வெட்டிச் சுத்தம் செஞ்சு, வருகிறவங்க தங்கறதுக்கும், நீங்க வந்தவங்களைப் பார்க்கிறதுக்கும் வசதியா வெட்டி வேர் தட்டி கட்டி ஒரு ஆசிரமம் மாதிரி உறுதியான பந்தல் போட்டிருக்கேன்!... ஹூ... எனக்கு மட்டும் கொஞ்சம் எழுத்து வாசனை இருந்திருந்தா இந்நேரம் நிறையப் பணம் சம்பாதிக்க உங்க கண் முன்னாலேயே உங்க ஆசையை நிறைவேற்றி வைச்சிருப்பேனே...

இந்தா...மேரி...உனக்காகத்தான் சொல்லறேன். மனசிலே பயத்தோடே படிச்சு முன்னுக்கு வரதைப் பாரு! ஆமா...

பாதிரி: டேய், அந்தோணிப் பயலே.... உன் வீம்பு ஒண்ணு போதும்.... பணத்தை விட ரொம்ப முக்கியம் மன உறுதிதான். அது உன்கிட்டே இருக்கே! (மகிழ்ச்சி) அந்த மன உறுதி ஒண்ணு இருந்தாப் போதும். என்னைக்கு வேணாலும் படிக்கக்லாம். டேய்.... உலகத்தைப் புரிஞ்சுக்கடா! உன்னை நீ தன்னாலே புரிஞ்சுக்குவே!....

(மாதா கோயிலிலுள்ள ஒரு பணியாள் வந்து பாதிரியார் அடைக்கலம் காதருகே ஏதோ சொல்லுகிறான்.)

பாதிரி: உம். வரச் சொல்லு.

(லாரன்ஸ் என்ற இளைஞர் உள்ளே வருகிறார். அவர் ஒரு இன்ஸ்பெக்டர். தமது பதவிக்குரிய உடுப்பு அணிந்திருக்கிறார். தம் தொப்பி, பிஸ்டலை எடுத்துத் தனியே வைத்துவிட்டுப் பாதிரியாருக்கு மரியாதை செய்கிறார்.)

பாதிரி: ஆண்டவன் உங்களை ரட்சிக்கட்டும்! உட்காருங்க!

(அந்தோணி பணிவாக ஒரு நாற்காலியைப் போட அதில் லாரன்ஸ் உட்காருகிறார்.)

பாதிரி: *நான்தான் ஃபாதர் அடைக்கலம். உங்களைப் பார்த்ததிலே ரொம்ப மகிழ்ச்சி ! நீங்க வந்த விஷயம் என்னவோ ?*

லாரன்ஸ் *(வியப்புடன்): என்ன ஃபாதர்? என்னே மறந்துட்டீங்களா ?*

பாதிரி: *எனக்கு வயசாயிடுச்சா...சட்டுனு நினைவுபடுத்திக்க முடியலே....*

லாரன்ஸ்: *என்னே உங்களுக்கு அடையாளம் தெரியலேயா ?....*

(லாரன்ஸ் பேசும் போது ஒரு விதமாகத் தம் இரு கரங்களையும் நெஞ்சுக்கெதிரே சுழற்றி ஆட்டிப் பேசுகிறார். அதைக் கொண்டு அவர் இன்னாரென்று அடையாளம் கண்டு பிடித்த அடைக்கலம் பாதிரியார் மிக்க மகிழ்ச்சி அடைகிறார்.)

பாதிரி: *ஓ...! லாரன்ஸ்....! என் மகனே ! லாரன்ஸ்! எப்படி வளர்ந்துட்டே? ம்.....! ஆளே மாறிட்டியே ! சின்னப் பிள்ளையா இருக்கிறப்போ அடங்கவே மாட்டே! இப்போ இந்தப் போலீஸ் உடுப்புக்குள்ளே அடங்கிட்டியே ! சின்ன வயசிலே என் மாதிரியே பேசி நடிச்சுக் காட்டுவியே ஞாபகம் இருக்கா ? அப்போ என்னைக் காவது என் மாதிரியே பாதிரியாராக வரப் போறேன்னு சொல்லுவே ! இப்ப என்னடான்னா, போலீஸ் அதிகாரியா வந்து நிற்கிறே ! எந்த ஊரிலே வேலை பார்க்கிறே? இங்கே என்ன, உன் டியூட்டி விஷயமா வந்தியா ?*

லாரன்ஸ்: *நான் இந்த ஊருக்கே மாற்றலாகி வந்திருக்கிறேன் ஃபாதர் ! இன்னிக்குத்தான் பொறுப்பு ஏற்றுக்கிட்டேன். முதல் காரியமா உங்களைப் பார்க்க வந்தேன்.*

பாதிரி: *நல்லது, நல்லது ! லாரன்ஸ் ! உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா ? ஓ ! என்ன முட்டாள்தனமான கேள்வி கேட்டுட்டேன்? நானே உன் திருமண தினத்தன்று உனக்காக மெழுகுவர்த்தி ஏற்றிப் பிரார்த்தனை பண்ணினேன்.... (சிரித்து) வயசு ஆயிடுச்சல்லே? மறதி! மறதி !*

லாரன்ஸ்: *ஆனால்... என்னால் உங்களை எப்பவுமே மறக்க முடியாது ஃபாதர் !*

பாதிரி: *குழந்தைங்க இருக்கா ?*

லாரன்ஸ்: *ஒரு பையன் மட்டும்தான் ! அவனுக்கு உங்க பேர்தான் வைச்சிருக்கேன் ! எனக்கு அடைக்கலம் கொடுத்தாரே, இந்த அடைக்கலம் பாதிரியார். அந்த ஞாபகமா அதே பேரை என் மகனுக்கு வைச்சிருக்கேன். இப்ப அவனுக்கு அஞ்சு வயசு !*

பாதிரி: *நீ இந்த அனாதை விடுதிக்கு வந்த போது உனக்கு அஞ்சு வயசுதான். இப்போ உன் மகனுக்கு ஐந்து வயசு ! மகனே ! எனக்கு ரொம்ப மகிழ்ச்சி ! நீ ஒரு நல்ல பதவிக்கு வந்தேன்னு அதிலே எனக்குத்தான் பெருமை !*

(லாரன்ஸ் அன்புடன் வழங்கும் ஆரஞ்சுப் பழத்தைப் பெற்றுக் கொள்கிறார் பாதிரியார்.)

என்னெஸ்ஸென் தியேட்டர்ஸ் அளிக்கும்

ஞான ஒளி

தயாரிப்பு : சாம்பு என். எஸ். நடராஜன்
டைரக்ஷன் : மேஜர் சுந்தரராஜன்
கதை வசனம் : 'வியட்நாம் வீடு' கே. சுந்தரம்
நகைச்சுவை : டி. பி. நடராஜன்
கலை -- ரங்கண்ணு
இசை -- ஆர். கோவிந்தராஜ்
நிர்வாகம் -- வி. என். சந்தானம்
புகைப்படங்கள் : கே. விசுவநாதன்

நடிப்பு:

பூஜ்யர் அடைக்கலம் பாதிரி -- கோகுல்நாத்
அந்தோணி,அருணானந்தர்-மேஜர் சுந்தரராஜன்
இன்ஸ்பெக்டர் லாரன்ஸ்-எஸ்.ஆர். வீரராகவன்
மேரி -- வி. வசந்தா
டாக்டர் சரவணன் -- டி. பி. நடராஜன்
நல்லசிவம் -- வி. ராஜகோபால்
வெங்கட் -- ஐ. எஸ். ஆர்.
ராணி -- வி. ஜே. புவனேஸ்வரி
பாதிரியார் -- கே. பி. ஜானகிராமன்
ஜார்ஜ் -- எஸ். ஐயராம்
பாஸ்கர் -- பத்ரி
நோயாளி -- சங்கர் ராஜ்
மாதா கோவில் பணியாள் -- பத்மநாதன்
வேலைக்காரன் -- என். காசிநாதன்
போலீஸ் ரைட்டர் -- ஏ. ராதாகிருஷ்ணன்
கான்ஸ்டபிள் -- பி. எஸ். செல்லப்பா

பாதிரி: *ஆமா.... ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தியா ?*

லாரன்ஸ்: *இன்னும் இல்லே ஃபாதர் ! முதல்லே உங்களைப் பார்த்துட்டுத்தான்....*

அந்தோணி *(பணிவுடன் பாதிரியாரிடம்): சாமி! நான் புறப்படட்டுமா?*

பாதிரி *(சட்டென்று நினைவு வந்தவராக): ஆ.... மறந்துட்டேனே.... லாரன்ஸ்! இவனைத் தெரியுதா உனக்கு?*

(லாரன்ஸ் தெரியவில்லை என்று தலையசைக்கிறான்.)

பாதிரி: *தெரியலே? அவன் குரல்கூடவா புரியலே? இரு.... (அந்தோணியிடம் ஆரஞ்சுப் பழத்தைக் கொடுத்து) உரிடா, பழத்தை !*

(அந்தோணி பழத்தை இடது கையால் உரிக்கிறான்.)

பாதிரி: *இப்பக்கூடவா தெரியலே? இது தான் உனக்கும் எனக்கும் இருக்கிற வித்தியாசம். நீ யாருன்னு உன்னுடைய ஒரே ஒரு இயல்பான செயல் மூலமா பார்த்தவுடனேயே கண்டு பிடிச்சுட்டேனே. ஆனால் நீ... இவன் இடது கையாலே பழத்தை உரிப்ப*

தைப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியலே. உன்னைச் சின்னப் பிள்ளையிலே விளையாடச் சேர்த்துக்காமே, 'போய்ப் படிடா'ன்னு விரட்டுவானே..... அட, இடது கையாலே பம்பரம் விடுவானேப்பா.... அந்தோணி....

(லாரன்ஸ் திகைப்புடன் திரும்பி அந்தோணியைப் பார்க்கிறான்.)

பாதிரி: உன்கூடவே ஒண்ணா வளர்ந்த அனாதை. இறக்கை முளைச்சதும் இந்தக் கூட்டுக்கு வெளியே நீ பறந்து போயிட்டே! எனக்கு இறக்கை உதிர்ந்து போயிட்டதாலே.... எனக்கு ஆகாரம் ஊட்டிக்கிட்டு இங்கேயே இவன் இருக்கான். அவ்வளவுதான் வித்தியாசம் !

லாரன்ஸ்: மன்னிக்கணும், ஃபாதர் ! அந்தோணியா இருக்குமோன்னுதான் நினைச்சேன். ஆனால் இவனுக்கு இடது கண்ணு இல்லையே! அதனாலேதான் சந்தேகமாப் போயிடுச்சு.

பாதிரி: ம்... உனக்குத் தெரியாதில்லே... ஒரு முறை கிறிஸ்துமஸ் தினத்தன்று நான் ஒரு நெருப்பு விபத்திலே மாட்டிக்கிட்டேன். அந்தோணி என்னைக் காப்பாத்திட்டான். ஆனா.... தன் கண்ணைக் காப்பாத்திக்க முடியலே. அசடு..... வெறியன்! வெறி வந்துட்டா என்ன செய்யறோம்னே இவனுக்குத் தெரியாது....! ம்...! இவ யாருன்னு நான் சொல்லல்லியே! இவள்தான் மேரி! அந்தோணியோட இரண்டு கண்ணுமே இவதான். பாவம்... தாயில்லாப் பெண். டேய், அந்தோணி ! இது நம்ப லாரன்ஸ்டா !

(அந்தோணி கைகூப்பி வணங்க, லாரன்ஸ் கைகுலுக்கக் கையை நீட்டுகிறான்.)

பாதிரி: டேய்... நாட்டுப்புறம்.. கையைக் குடுடா. லாரன்ஸ் ! இந்தச் சமூகத்திலே மன்னிப்பே இல்லாத ஒரு பாபம் என்ன தெரியுமா ?

இரண்டு நல்ல நண்பர்கள் மனசு விட்டுப் பழக முடியாதபடி குறுக்கே சுவரா நிக்குதே அந்தஸ்து; அதுதான்! என்னைப் பொறுத்தவரைக்கும் அப்படி நீங்க வித்தியாசப்படவோ, வேறுபடவோ கூடாது. நீங்க ரெண்டு பேரும் என் பிள்ளைகள் !

(இருவர் கைகளையும் பிணைத்துச் சிரிக்கிறார் பூஜ்யர் அடைக்கலம்.)

அந்: அப்ப நான் புறப்படறேன் சாமி....

பாதிரி: ம்...சரி....

அந்தோணி (லாரன்ஸிடம்): வரேங்க.

லாரன்ஸ்: அந்தோணி! இப்பத்தானே ஃபாதர் சொன்னாரு ? அப்புறம் ஏன் வீண் மரியாதை ? ம்... சும்மா "டா" போட்டே கூப்பிடுடா !

அந் : வரேண்டா லாரன்ஸ். ஒரு தடவை நீ நம்ம வீட்டுக்கு வரணும்.

லார : கண்டிப்பா.... இனிமே நாம அடிக்கடி சந்திக்கலாம்.

(அந்தோணி போகிறான்.)

குரல்—1: நமஸ்காரம் ஃபாதர் !

குரல்—2: வணக்கம் இன்ஸ்பெக்டர் !

(குரல்கள் கேட்டுத் திரும்புகிறார் லாரன்ஸ். குடையும் ஜரிகை மாலை அடங்கிய அட்டைப் பெட்டியும் கரங்களில் ஏந்தியபடி இருவர் நுழைகின்றனர்.)

(தொடரும்)

சந்தா நேயர்களுக்கு...



ஒவ்வொரு கல்கி இதழும் குடும்பத்தில் உள்ள நாலைந்து பேர்களால் படிக்கப்படுவதுடன் பக்கத்து வீட்டிலும் எதிர் வீட்டிலும் உள்ளவர்களையும் மகிழ்விக்கிறது.

பல பேர்கள் கல்கியைப் படிக்கும்போது அது நைந்து போகாமல் பத்திரமாகப் பாதுகாக்க உதவும் வகையில் உயர்ரக பிளாஸ்டிக் மேலட்டை ஒன்று தயாரித்திருக்கிறோம். இந்தப் பிளாஸ்டிக் அட்டையை ஓரிதழிலிருந்து அடுத்த கல்கி இதழுக்கு மாற்றிக் கொள்ளலாம். கல்கியின் ஆதரிச தெய்வமான விநாயகப் பெருமானின் சிறு திருஉருவத்தைத் தாங்கி அழகுறப் பொலியும் இம் மேலட்டையைக் கல்கி காரியாலயத்துக்கு ஓராண்டுச் சந்தா ரூபாய் இருபதை அனுப்பி வைப்பவர்கள் இலவசமாகப் பெறலாம்.

இச் சலுகை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கி மே இறுதி வரை நீடிக்கும். இக் கால கெடுவுக்குள் ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவர்களும் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அவர்கள் சந்தா எந்த இதழுடன் முடிகிறதோ அந்த இதழிலிருந்து ஓராண்டுக்குச் சந்தா நீடிக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கல்கி காரியாலயத்துக்கு ஓராண்டுச் சந்தாவான ரூபாய் இருபதை அனுப்பி வைக்கும் நேரடி சந்தாதாரர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை உண்டு. மற்றவர்களுக்கு இந்தப் பரிசுத் திட்டத்தை நீடிக்க இயலாதற்கு வருந்துகிறோம். பிளாஸ்டிக் மேலுறையைத் தனியே விற்பதற்கும் இல்லை.

கல்கி நேயர்கள இந்த அரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என நம்புகிறோம். **மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-31 என்ற விலாசத்துக்குச் சந்தா அனுப்ப வேண்டும்.**

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பூர்வ கதை

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரத்தில் பிரசித்திபெற்ற அருள் மொழி வர்மனின் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி நோய்ப்பட்டுத் தஞ்சை அரண்மனையில் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அருள்மொழி வர்மன் ஈழநாட்டில் சோழப் படைகளுக்குத் தலைமை வகித்துப் போர் நடத்தி வந்தான். சுந்தர சோழரின் மூத்த புதல்வனான ஆதித்த கரிகாலன் காஞ்சியில் இருந்தான். அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று அவனுக்கு முன்னமே இளவரசுப் பட்டம் கட்டியிருந்தது.


சுந்தர சோழரின் பெரிய தந்தை சிவஞான கண்டராதித்தருக்கு மதுராந்தகன் என்று ஒரு குமாரன் இருந்தான். சுந்தர சோழருக்குப் பிறகு மதுராந்தகனே பட்டத்துக்கு வரவேண்டுமென்று சோழ சாம்ராஜ்யத்தில் செல்வாக்குள்ள பிரமுகர்கள் சிலர் கருதி அதற்கான பிரயத்தனமும் தொடங்கியிருந்தார்கள்.

தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர், தஞ்சைக் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர், கடம்பூர் செங்கண்ணன் சம்புவரையர், மழபாடி மழவரையர் முதலிய சிற்றரசர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் மேற்கூறிய பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆதித்த கரிகாலன் காஞ்சியில் பொன் மாளிகை கட்டினான். சுந்தர சோழ சக்கரவர்த்தி காஞ்சிக்கு வந்து அப்பொன் மாளிகையில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று தந்தைக்கு ஓலை அனுப்பினான். இளவரசனின் ஓலையை எடுத்துக் கொண்டு வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் இளம் வீரன் தஞ்சைக்குப் புறப்பட்டான். வழியில் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஓரிரவு தங்கியபோது ஆதித்த கரிகாலனுக்கு எதிரான சதியைப் பற்றித் தெரிந்து கொண்டான். சதியில் ஈடுபட்டிருந்த சம்புவரையரின் குமாரன் கந்தமாறன், வந்தியத்தேவனுடைய பழைய நண்பன்.

கடம்பூருக்கு அருகில் வீர நாராயணபுரத்தில் ஆழ்வார்க்கடியான் நம்பி என்ற வீர வைஷ்ணவனை வல்லவரையன் சந்தித்தான். சம்புவரையர் மாளிகையில் நடந்த சதியாலோசனைக் கூட்டத்தை அந்த வீர வைஷ்ணவன் மதில் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததை வந்தியத்தேவன் பார்த்தான்.

பெரிய பழுவேட்டரையர் முதிய வயதில் நந்தினி என்னும் இளம் பெண்ணை மணம் புரிந்து கொண்டிருந்தார். அவளைப் பற்றி முதலில் ஆழ்வார்க்கடியான் மூலமாக வல்லவரையன் தெரிந்து கொண்டான். தஞ்சைக் கோட்டைக்கருகில் அவளைப் பார்த்தான். அவள் கொடுத்த பழுவூர் முத்திரை மோதிரத்தின் உதவியால் கோட்டைக்குள் புகுந்தான். சுந்தர சோழ சக்கரவர்த்தியைச் சந்தித்து ஆதித்த கரிகாலனின் ஓலையைக் கொடுத்தான். சதியாலோசனையைப் பற்றி அரசரிடம் தெரிவிக்க முயன்றும் முடியவில்லை. சின்னப் பழுவேட்டரையர் அவன் மீது சந்தேகங்கொண்டு காவலில் வைத்தார். தஞ்சைக் கோட்டையிலிருந்து தப்பித்துச் செல்ல வந்தியத்தேவன் முயன்றபோது பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையில் புகுந்தான். அதே சமயத்தில் அந்த நிலவறை வழியாகக் கந்தமாறன், மதுராந்தகனைப் பழுவூர் அரண்மனையில் சேர்த்து விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான். சுரங்க வழியின் காவலன் கந்தமாறனுடைய முதுகில் குத்தியதைக் கண்டு வந்தியத்தேவன் அவனைக் காப்பாற்றிக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்த்தான். ஆனால் கந்தமாறனோ தன்னை முதுகில் குத்தியவன்



தன் நண்பனாகிய வந்தியத் தேவனே என்ற எண்ணத்தில் இருந்தான்.

தஞ்சைக் கோட்டையிலிருந்து வந்தியத் தேவன் குடந்தைக் கருகிலிருந்த பழையாறை நகருக்குச் சென்றான். சோழர்களின் இந்தப் பழைய தலை நகரில் சுந்தர சோழரின் அருமைப் புதல்வியாகிய குந்தவைப் பிராட்டியும், பெரியவரான கண்டராதித்தரின் மனைவியாகிய செம்பியன்மா தேவியும், மற்றும் பல அரண்மனைப் பெண்டிரும் இருந்தனர். ஆதித்த கரிகாலன் குந்தவை தேவிக்கும் ஓர் ஓலை கொடுத்து அனுப்பி அவள் ஏவிய பணியைச் செய்யுமாறு வந்தியத்தேவனுக்குக் கட்டளை யிட்டிருந்தான். வழியில் குடந்தை சோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங் கரையிலும் குந்தவையை வந்தியத்தேவன் சந்தித்து அவளுக்குத் தன் இளம் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தான். சோழ குலத்து இளவரசி அவள்தான் என்று அறிந்து அடங்கா வியப்பு அடைந்தான். அவள் பணித்தால் ஏழு கடலையும் கடந்து சென்று எந்தக் காரியத்தையும் முடித்து வர வந்தியத்தேவன் ஆயத்தமாயிருந்தான். குந்தவை தேவி ஒரே ஒரு கடலைத் தாண்டும்படியே அவனுக்குப் பணித்தாள்! இலங்கையில் இருந்த தன் இளைய சகோதரனாகிய அருள்மொழிவர்மனுக்கு ஓர் ஓலை கொடுத்து அனுப்பினாள். **"பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்"** என்று அந்த ஓலையில் எழுதியிருந்தது.

ஓலையை எடுத்துக் கொண்டு வந்தியத்தேவன் கோடிக்கரையை அடைந்தான். அங்கிருந்து இலங்கைக்குப் படகு செலுத்திக் கொண்டு போக ஆள் யாரும் கிடைக்கவில்லை. கலங்கரை விளக்கின் காவலர் தமது குமாரி பூங்குழலியை அனுப்பி வைத்தார். வந்தியத்தேவனைக் கைப்பற்றுவதற்கென்று வந்த பழுவூர் வீரர்களிடமிருந்து பூங்குழலி அவனைத் தப்புவித்தாள். இரவில் அவனைப் படகில் ஏற்றிக்கொண்டு தானே படகு வலித்துக் கொண்டு சென்றாள். வந்தியத்தேவன் கடலில் விழுந்துவிட்ட போதும் அவனை அவள் தப்புவித்தாள். இதற்கெல்லாம் பிரதியாக ஒன்று அவனிடம் கேட்டாள். இளவரசர் அருள்மொழிவர்மருக்குச் 'சமுத்திர குமாரி'யை நினைவூட்ட வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை. பூங்குழலியின் இன்னொரு பெயர் 'சமுத்திர குமாரி.'

ஆதித்த கரிகாலன் பிள்ளைப் பிராயத்தில் நந்தினிக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திருந்தான். அவனுடைய பெரிய பாட்டியான செம்பியன்மாதேவியின் கட்டளைக்கு இணங்கி நந்தினியை மறக்க முயன்றான். பாண்டியர்களோடு நடந்த இறுதிப் போரில் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனைக் கொல்லப் போன சமயத்தில், நந்தினி குறுக்கிட்டு வீர பாண்டியனுடைய உயிருக்காக மன்றாடினாள். கரிகாலன் அதைப் பொருட்படுத்தாமல் வீர பாண்டியனைக் கொன்று விட்டான். நந்தினியின் இச் செய்கையினால் கலக்கமுற்ற கரிகாலன் உள்ளம் பின்னால் அவள் பெரிய பழுவேட்டரையரை மணந்த செய்தி அறிந்து அதிகக் குழப்பத்தை அடைந்தது. நந்தினியை மறக்க முயன்றும் அவனால் மறக்க முடியவில்லை. ஆதலின் அருள்மொழி வர்மனைத் தருவித்து அவனுக்கு இளவரசுப் பட்டங் கட்டி விட்டுத் தான் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க எண்ணினான். எனவே, தம்பியை அழைத்து வரும் பொருட்டு, பல்லவ குலத்தில் வந்தவனும் தன் இன்னொரு அந்தரங்கத் தோழனுமான பார்த்திபேந்திரனை ஈழத்துக்கு அனுப்பினான்.

பழையாறையில் குந்தவைக்கும் வந்தியத்தேவனுக்கும் நடந்த சம்பாஷணையை ஆழ்வார்க்கடியான் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு அவன் இராமேசுவரம் சென்றான். இராமேசுவரத்தில் சுந்தரசோழரின் மான்ய மந்திரியான அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் அச் சமயம் இருந்தார். ஆழ்வார்க்கடியான் அவரைச் சந்தித்துத் தான் கண்டு கேட்டுத் தெரிந்து கொண்ட விவரங்களை எல்லாம் கூறினான்.

வந்தியத்தேவன் ஓலையுடன் ஈழ நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதிலிருந்து குந்தவைப் பிராட்டிக்குப் பழையாறையில் இருப்புக் கொள்ளவில்லை. தஞ்சையில் தந்தை சுந்தரசோழருக்கு அருகில் தான் இருப்பது அவசியம் என்று கருதிக் கொடும்பாளூர் இளவரசி வானதியுடன் தஞ்சைக்குச் சென்றாள். தஞ்சையில் நவராத்திரிக் கொண்டாட்டம் நடந்தது. ஒரு நாள் இரவு குந்தவையும் மற்ற ராணிகளும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்தபோது வானதி தனியாக அரண்மனையைச் சுற்றி வந்தாள். சுந்தரசோழரின் பரிதாபக் குரல் அந்த நள்ளிரவில் "ஐயோ! உன்னை நான் கொன்றது உண்மைதான்! அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கதறியதைக் கேட்டாள். அவளுக் கெதிரே நந்தினியைப் போன்ற ஒரு பெண் உருவம் நிற்பதையும் கண்டாள். அங்கிருந்து திரும்பிச் செல்கையில் நடைபாதையில் மூர்ச்சையுற்று விழுந்தாள்.

பதினாறாம் அத்தியாயம்

சுந்தரசோழரின் பிரமை

மறு நாள் காலையில் சுந்தரசோழ சக்கரவர்த்தி தம் அருமைக் குமாரியை அழைத்து வரச் செய்தார். ஏவலாளர், தாதிமார், வைத்தியர் அனைவரையும் தூரமாகப் போயிருக்கும்படி கட்டளையிட்டார். குந்தவையைத் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டு அன்புடன் முதுகைத் தடவிக் கொடுத்தார். அவர் சொல்ல விரும்பியதைச் சொல்ல முடியாமல் தத்தளிக்கிறார் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாள்.

"அப்பா! என் பேரில் கோபமா?" என்று கேட்டாள்.

சுந்தர சோழரின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"உன்பேரில் எதற்கு, அம்மா, கோபம்?" என்றார்.

"தங்கள் கட்டளையை மீறித் தஞ்சாவூருக்கு வந்ததற்காகத்தான்!"

"ஆமாம்; என் கட்டளையை மீறி நீ வந்திருக்கக் கூடாது. இந்தத் தஞ்சாவூர் அரண்மனை இளம் பெண்கள் வசிப்பதற்கு ஏற்றதல்ல. இது நேற்று இராத்திரி நடந்த சம்பவத்திலிருந்து உனக்கே தெரிந்திருக்கும்."

"எந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள், அப்பா?"

"அந்தக் கொடும்பாளூர்ப் பெண் மூர்ச்சையடைந்ததைப் பற்றித்தான் சொல்லுகிறேன். அந்தப் பெண்ணுக்கு இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?"

''அவளுக்கு இன்றைக்கு ஒன்றுமே யில்லை, அப்பா! பழையாறையிலும் அடிக்கடி இவள் இப்படிப் பிரக்ஞை இழப்பது உண்டு. கொஞ்ச நேரத்துக் கெல்லாம் சரியாகப் போய்விடும்.''

''அவளை நீ கேட்டாயா, அம்மா? இராத்திரி இந்த அரண்மனையில் அவள் ஏதேனும் கண்டதாகவோ, கேட்டதாகவோ சொல்லவில்லையா?''

குந்தவை சற்று யோசித்து விட்டு, ''ஆம், அப்பா! நாங்கள் எல்லாரும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்த போது அவள் தனியாக மேல்மாடத் துக்குப் போகப் பார்த்தாளாம். அப் போது யாரோ பரிதாபமாகப் புலம்பு வது போலக் கேட்டதாம். அது அவ ளுக்குப் பயத்தை உண்டாக்கியதாகச் சொன்னாள்'' என்றாள்.

''அப்படித்தான் நானும் நினைத் தேன். இப்போதேனும் அறிந்தாயா, குழந்தாய்? இந்த அரண்மனையில் பேய் உலாவுகிறது. நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். போய் விடுங்கள்!'' என்று சுந்தர சோழர் கூறிய போது அவர் உடல் நடுங்குவதையும் அவ ருடைய கண்கள் வெறித்தபடி எங் கேயோ பார்ப்பதையும் குந்தவை கவனித்தாள்.

''அப்பா! அப்படியானால் தாங்கள் மட்டும் இங்கே எதற்காக இருக்க வேண்டும்? அம்மா இங்கே எதற்காக இருக்க வேண்டும்? எல்லாரும் பழை யாறைக்கே போய் விடலாமே? இங்கு வந்ததினால் உங்கள் உடம்பு குணமாகி யிருப்பதாகவும் தெரிய வில்லையே?'' என்றாள்.

சக்கரவர்த்தி துயரம் தோய்ந்த புன்னகை புரிந்து, ''என் உடம்பு இனிமேல் குணமாவது ஏது? அந்த ஆசை எனக்குக் கொஞ்சமும் கிடை யாது!'' என்றார்.

''அப்படி ஏன் நிராசை அடைய வேண்டும், அப்பா! பழையாறை வைத்தியர் தங்கள் உடம்பைக் குணப் படுத்த முடியும் என்று சொல்கிறார்.''

''அவர் சொல்வதை நம்பி நீயும் இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர ஆள் அனுப்பி யிருக்கிறாயாம்! நான் கேள்விப்பட்டேன். மகளே! என்பேரில் உனக்குள்ள பாசத்தை அது காட்டுகிறது!''

''தந்தையிடம் மகள் பாசம் கொண் டிருப்பது தவறா, அப்பா?''

''அதில் தவறு இல்லை. இப்படிப் பட்ட வாஞ்சையுள்ள புதல்வியைப் பெற்றேனே, அது என் பாக்கியம். இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர நீ ஆள் அனுப்பியதிலும் தவ றில்லை. ஆனால் இலங்கையிலிருந்து மூலிகை வந்தாலும் சரி, சாவகத் தீவிலிருந்து வந்தாலும் சரி, தேவ லோகத்திலிருந்து அமுதமே வந்தாலும் சரி, எனக்கு உடம்பு இந்த ஜன்மத்தில் குணமாகப் போவதில்லை....''

''ஐயையோ! அப்படிச் சொல்லா தீர்கள்!'' என்றாள் இளவரசி.

''என் கட்டளையையும் மீறி நீ இங்கு வந்தாயே, அம்மா! அதற்காக உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு நாள் என் மனத்தைத் திறந்து உன் னிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத் தது. சொல்கிறேன், கேள்! உடம்பைப் பற்றிய வியாதியாயிருந்தால் மூலிகை மருந்துகளினால் தீரும். என்னுடைய நோய் உடம்பைப் பற்றியதல்ல; மனக் கவலைக்கு மருந்து ஏது?''

''தந்தையே! மூன்றுலகம் ஆளும் சக்கரவர்த்தியாகிய தங்களுக்கு அப் படி என்ன தீராத மனக் கவலை இருக்க முடியும்?''

''கவிகளுடைய அதிசயோக்தியான கற்பனையை நீயும் சொல்கிறாய், குழந் தாய்! நான் மூன்று உலகம் ஆளும் சக்கரவர்த்தியல்ல; ஒரு உலகம் முழு வதையும் ஆளுகிறவனும் அல்ல. உல கத்தில் ஒரு மூலையில் ஒரு சிறு பகுதி என் இராஜ்யம். இதன் பாரத்தையே என்னால் சுமக்க முடியவில்லை....''

''தாங்கள் ஏன் சுமக்க வேண்டும், அப்பா? இராஜ்ய பாரத்தைச் சுமப்ப தற்குத் தகுந்தவர்கள் இல்லையா? மணி மணியாக இரண்டு புதல்வர்கள் தங்க ளுக்கு இருக்கிறார்கள். இருவரும் இரண்டு சிங்கக் குட்டிகள்; வீராதி வீரர்கள். எப்படிப்பட்ட பாரத்தையும் தாங்கக் கூடியவர்கள்....''

''மகளே! அதை நினைத்தால்தான் எனக்கு நெஞ்சு பகீர் என்கிறது. உன் சகோதரர்கள் இருவரும் இணையில்லா வீரர்கள்தான். உன்னைப் போலவே அவர்களையும் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேன். அவர்களுக்கு இந்த இராஜ்யத்தைக் கொடுத்தால் நன்மை செய்கிறவனாவேனா என்று சந்தேகப் படுகிறேன். இராஜ்யத்துடன் பெரிய தொரு சாபக்கேட்டையும் அவர்க ளிடம் ஒப்புவித்து விட்டுப் போவது நல்லதென்று சொல்வாயா?''

''அப்படி என்ன சாபக்கேடு இருக்க முடியும் இந்த ராஜ்யத்துக்கு? புறவுக் காகச் சதையை அளித்த சிபியும், கன்றுக்குட்டிக்காக மகனை அளித்த மனுநீதிச் சோழரும் நம் குலத்து முன் னோர்கள். கரிகால் வளவரும் பெருநற்




கிள்ளியும் இந்த ராஜ்யத்தை ஆண்டவர்கள். திருமேனியில் தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த வீர விஜயாலய சோழர் இந்தச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். காவேரி நதி தீரத்தில் நூற்றெட்டு ஆலயங்கள் எடுப்பித்த ஆதித்த சோழரும், சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து பொன்னம்பலமாக்கிய பராந்தகரும் இந்த ராஜ்யத்தை விஸ்தரித்தார்கள். அன்பே சிவம் எனக் கண்டு அன்பும் சிவமும் தாமேயாக வீற்றிருந்த கண்டராதித்தர் அரசு புரிந்த தர்ம மகாராஜ்யம் இது. இப்படிப்பட்ட ராஜ்யத்துக்குச் சாபக்கேடு என்ன இருக்க முடியும்? அப்பா! தாங்கள் ஏதோ மனப் பிரமையில் இருக்கிறீர்கள்! இந்தத் தஞ்சாவூர் கோட்டையை விட்டுத் தாங்கள் புறப்பட்டு வந்தால்....''

''நான் இவ்விடம் விட்டுப் புறப்பட்டால் அடுத்தகணம் என்ன ஆகும் என்று உனக்குத் தெரியாது! அழகிய பழையாறையை விட்டு இந்தத் தஞ்சைக் கோட்டையாகிய சிறையில் நான் சந்தோஷத்துக்காக இருக்கிறேன் என்று கருதுகிறாயா? குந்தவை! நான் இங்கே இருப்பதனால் இந்தப் பழம் பெரும் சோழ ராஜ்யம் சின்னபின்னமாகாமல் காப்பாற்றி வருகிறேன். நேற்றிரவு நாடகம் ஆடிக் கொண்டிருந்த போது என்ன நடந்தது என்பதை யோசித்துப் பார்! நிலா மாடத்தின் முகப்பிலிருந்து நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன். நாடகத்தை நடுவில் நிறுத்தி விடலாமா என்று கூடத் தோன்றியது....''

''தந்தையே! இது என்ன? நாடகம் மிக நன்றாக இருந்ததே! சோழ குலப் பெருமையை எண்ணி என் உள்ளம் பூரித்ததே? எதற்காக நிறுத்த விரும்பினீர்கள்? நாடகத்தில் எந்தப் பகுதி தங்களுக்குப் பிடிக்காமலிருந்தது?''

''நாடகம் நன்றாகத்தானிருந்தது, மகளே! அதில் ஒரு குற்றமும் நான் காணவில்லை. நாடகம் பார்த்தவர்களின் நடத்தையைப் பற்றியே சொல்கிறேன். கொடும்பாளூர்க் கட்சியும் பழுவேட்டரையர் கட்சியும் எழுப்பிய போட்டி கோஷங்களை நீ கவனிக்கவில்லையா?'' என்று கேட்டார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

''கவனித்தேன், அப்பா!''



''நான் ஒருவன் இங்கு இருக்கும் போதே இவர்கள் இப்படி நடந்து கொள்ளுகிறார்களே! நான் இல்லா விட்டால் என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்! நான் தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய தட்சணமே இரு கட்சியாருக்குள்ளும் சண்டை மூளும். கிருஷ்ண பரமாத்மாவின் சந்ததிகள் ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டு அழிந்ததுபோல் இவர்களும் அழிவார்கள். இவர்கள் அழியும்போது இந்த மகா சாம்ராஜ்யமும் அழிந்துவிடும்....''

''அப்பா! தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரச் சக்கரவர்த்தி. பழுவேட்டரையர்களும் சரி, கொடும்பாளூர் வேளிரும் சரி, தங்கள் காலால் இட்டதைத் தலையால் செய்யக் கடமைப் பட்டவர்கள். அவர்கள் அத்துமீறி நடந்தால் அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக் கொள்ளுகிறார்கள். தாங்கள் ஏன் கவலைப் பட வேண்டும்?''

''மகளே! சென்ற நூறு வருஷமாக இந்த இரு குலத்தோரும் சோழ சாம்ராஜ்யத்துக்கு இணையில்லா ஊழியம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியின்றிச் சோழ ராஜ்யம் இப்படிப் பல்கிப் பெருகியிருக்க முடியுமா? அவர்கள் அழிந்தால் இராஜ்யத்துக்கும் அது பலவீனந்தானே?''

''அப்பா! அந்த இரு கட்சியில் ஒரு கட்சிக்காரர்கள் தங்களுக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் என்று தெரிந்தால்....?''

சுந்தர சோழர் குந்தவையை வியப்போடு உற்றுப் பார்த்து, ''என்ன மகளே, சொல்கிறாய்? எனக்கு விரோதமான சதியா? யார் செய்கிறார்கள்?'' என்று கேட்டார்.

''அப்பா! தங்களுடைய உண்மையான ஊழியர்களாக நடித்து வருகிறவர்கள் சிலர் தங்களுக்கு எதிராக இரகசியச் சதி செய்கிறார்கள். தங்களுடைய புதல்வர்களுக்குப் பட்டமில்லாமல் செய்துவிட்டு வேறொருவருக்குப் பட்டம் கட்டச் சதி செய்து வருகிறார்கள்....''

''யாருக்கு? யாருக்கு? மகளே! உன் சகோதரர்களுக்குப் பட்டம் இல்லை என்று செய்துவிட்டு வேறு யாருக்குப் பட்டம் கட்டப் பார்க்கிறார்கள்?'' என்று சுந்தர சோழர் சக்கரவர்த்தி பரபரப்புடன் கேட்டார்.

குந்தவை மெல்லிய குரலில், ''சித்தப்பா, மதுராந்தகனுக்கு, அப்பா! நீங்கள் நோய்ப் படுக்கையில் படுத்



INTERPUB/GP 17A TAM

திருக்கையில் இவர்கள் இப்படிப் பயங்கரமான துரோகத்தைச் செய்கிறார்கள்....." என்றாள்.

உடனே சுந்தர சோழர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து, "ஆகா! அவர்களுடைய முயற்சி மட்டும் பலித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றார்.

குந்தவைக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"தந்தையே! இது என்ன, தாங்கள் பெற்ற புதல்வர்களுக்குத் தாங்களே சத்துரு ஆவீர்களா?" என்றாள்.

" இல்லை; என் புதல்வர்களுக்கு நான் சத்துரு இல்லை. அவர்களுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன். இந்தச் சாபக்கேடு உள்ள ராஜ்யம் அவர்களுக்கு வேண்டியதில்லை. மதுராந்தகன் மட்டும் சம்மதித்தால்...."

"சித்தப்பா சம்மதிப்பதற்கு என்ன? திவ்யமாகச் சம்மதிக்கிறார். நாளைக்கே பட்டம் கட்டிக் கொள்ளச் சித்தமாயிருக்கிறார். அம்மாதிரித் தாங்கள் செய்யப் போகிறீர்களா? என் தமையனின் சம்மதம் கேட்க வேண்டாமா?...."

"ஆம்; ஆதித்த கரிகாலனைக் கேட்க வேண்டியதுதான். அவனைக் கேட்டால் மட்டும் போதாது. உன் பெரிய பாட்டி சம்மதிக்க வேண்டும்...."

"பிள்ளைக்குப் பட்டம் கட்டினால் தாயார் வேண்டாம் என்று சொல்வாளா ?"

"ஏன் சொல்ல மாட்டாள்? உன் பெரிய பாட்டியுடன் இத்தனை நாள் பழகியும் அவளை நீ அறிந்து கொள்ளவில்லையா? செம்பியன் மாதேவியின் வற்புறுத்தலினாலேயே நான் அன்று சிம்மாசனம் ஏறினேன். ஆதித்தனுக்கும் இளவரசுப் பட்டம் கட்டினேன். குந்தவை! உன் பெரிய பாட்டிக்கு உன் பேரில் மிக்க அன்பு உண்டு. நீ அவரிடம் நயமாகச் சொல்லி மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதற்குச் சம்மதம் வாங்கி விடு !...."

குந்தவை திகைத்துப் போய்ப் பேசாமல் இருந்தாள்.

"பிறகு காஞ்சிக்குப் போ! அங்கே உன் அண்ணன் ஆதித்த கரிகாலனோடு பேசி 'இந்தச் சாபக்கேடு வாய்ந்த இராஜ்யம் எனக்கு வேண்டாம்' என்று சொல்லும் படிச் செய்து விடு. மதுராந்தகனுக்கே பட்டம் கட்டிவிடுவோம். பிறகு நாம் எல்லாரும் சாபம் நீங்கி நிம்மதியாக இருக்கலாம்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்பா! அடிக்கடி சாபம் என்கிறீர்களே? எந்தச் சாபத்தைச் சொல்கிறீர்கள்?" என்று குந்தவை கேட்டாள்.

" மகளே ! பூர்வ ஜன்மம் என்று சொல்கிறார்களே அதை நீ நம்புகிறாயா? பூர்வ ஜன்மத்தின் நினைவுகள் இந்த ஜன்மத்தில் சில சமயம் வரும் என்கிறார்களே, அதில் உனக்கு நம்பிக்கை உண்டா ?"

"தந்தையே ! அவையெல்லாம் பெரிய விஷயங்கள். எனக்கென்ன தெரியும், அந்த விஷயங்களைப் பற்றி?"

"மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றிச் சொல்கிறார்களே? புத்த பகவான் கடைசி அவதாரத்துக்கு முன்னால் பல அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்கிறார்களே ? அந்த அவதாரங்களைப் பற்றிய பல அழகான கதைகள் சொல்கிறார்களே?"

"கேட்டிருக்கிறேன், அப்பா !"

"கடவுளுக்கும் அவதார புருஷர்களுக்கும் அப்படியென்றால் சாதாரண மனிதர்களுக்கு மட்டும் முற்பிறவிகள் இல்லாமலிருக்குமா ?"

"இருக்கலாம், அப்பா!"

"சில சமயம் எனக்குப் பூர்வ ஜன்ம நினைவுகள் வருகின்றன, மகளே ! அவற்றைக் குறித்து இதுவரையில் யாரிடமும் சொல்லவில்லை. சொன்னால் யாரும் நம்பவும் மாட்டார்கள்; புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். எனக்கு உடல் நோயுடன் சித்தப் பிரமையும் பிடித்திருப்பதாகச் சொல்வார்கள். வைத்தியர்களை அழைத்து வந்து தொந்தரவு கொடுப்பது போதாது என்று மாந்திரிகர்களையும் அழைத்து வரத் தொடங்குவார்கள்...."

"ஆம், தந்தையே! இப்போதே சிலர் அப்படிச் சொல்கிறார்கள். தங்கள் நோய் மருந்துவத்தினால் தீராது; மாந்திரிகர்களை அழைக்க வேண்டும் என்கிறார்கள்...."

" பார்த்தாயா ? நீ அப்படியெல்லாம் நினைக்க மாட்டாயே ? நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் சிரிக்க மாட்டாயே?" என்றார் சக்கரவர்த்தி.

"கேட்க வேண்டுமா, அப்பா ! உங்களுடைய மனம் எவ்வளவு நொந்திருக்கிறது என்று எனக்குத் தெரியாதா ? தங்களைப் பார்த்து நான் சிரிப்பேனா?" என்று குந்தவை கூறினாள். அவளுடைய கண்களில் நீர் மல்கிற்று.

"எனக்குத் தெரியும், மகளே! அதனாலேதான் மற்ற யாரிடமும் சொல்லாததை உன்னிடம் சொல்கிறேன். என்னுடைய பூர்வ ஜன்ம நினைவுகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேள்!" என்றார் சுந்தரசோழர்.

நாலுபுறமும் கடல் சூழ்ந்த ஓர் அழகிய தீவு. அத்தீவில் எங்கெங்கும் பச்சை மரங்கள் மண்டி வளர்ந்திருந்தன. மரங்கள் இல்லாத இடங்களில்

நெருங்கிய புதர்களாயிருந்தன. கடற்கரையோரத்தில் ஒரு புதரில் வாலிபன் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்தான். சற்றுத் தூரத்தில் கடலில் பாய்மரம் விரித்துச் சென்ற கப்பல் ஒன்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அது மறையும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு, ''அப்பா! பிழைத்தோம்!'' என்று பெருமூச்சு விட்டான்.

அந்த வாலிபன் இராஜ குலத்தில் பிறந்தவன். ஆனால் இராஜ்யத்துக்கு உரிமையுள்ளவன் அல்ல; இராஜ்யம் ஆளும் ஆசையும் அவனுக்குக் கிடையாது. அவனுடைய தகப்பனாருக்கு முன்னால் பிறந்த மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். ஆகையால் இராஜ்யம் ஆளுவதைப் பற்றி அவன் கனவிலும் நினைக்கவில்லை; ஆசை கொள்ளவும் இல்லை. கடல் கடந்த நாட்டுக்குப் போருக்குச் சென்ற சைன்யத்தோடு அவனும் போனான். ஒரு சிறிய படையின் தலைமை அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. போரில் அவனுடைய சைன்யம் தோல்வியுற்றது. கணக்கற்றவர்கள் மாண்டார்கள். வாலிபன் தலைமை வகித்த படையிலும் எல்லாரும் மாண்டார்கள். அந்த வாலிபனும் போரில் உயிரை விடத் துணிந்து எவ்வளவோ சாகஸச் செயல்கள் புரிந்தான். ஆனாலும் அவனுக்குச் சாவு நேரவில்லை. தோற்று ஓடிய சைன்யத்தில் உயிரோடு தப்பிப் பிழைத்தவர்கள் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். திரும்பித் தாய் நாடு செல்லுவதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். திரும்பிப் போவதற்கு அந்த வாலிபன் மட்டும் விரும்பவில்லை. தன் கீழிருந்த படை வீரர்கள் அனைவரையும் பறிகொடுத்துவிட்டு அவன் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்கள் மகா வீரர்கள் எனப் புகழ் பெற்றவர்கள். அந்தப் புகழுக்குத் தன்னால் அபகீர்த்தி நேருவதை அவன் விரும்பவில்லை. ஆகையால், கப்பல் போய்க் கொண்டிருந்த போது, சற்றுத் தூரத்தில் அழகிய தீவு ஒன்று தெரிந்த போது, வாலிபன் மற்ற யாரும் அறியாமல் கடலில் மெள்ளக் குதித்தான் நீந்திக் கொண்டே போய்த் தீவில் கரை ஏறினான். கப்பல் கண்ணுக்கு மறையும் வரையில் காத்திருந்தான். பிறகு ஒரு மரத்தின் மேல் ஏறி அதன் அடிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அந்தத் தீவின் அழகு அவன் மனத்தைக் கவர்ந்தது. ஆனால் அத்தீவில் மனித சஞ்சாரமே இல்லை என்று தோன்றியது. அச்சமயம் அது ஒரு குறையென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவனுடைய உற்சாகம் மிகுந்தது. மரக் கிளையில் சாய்ந்து உட்கார்ந்த படி வருங்காலத்தைப் பற்றிப் பகற் கனவுகள் கண்டு கொண்டிருந்தான்.

திடீரென்று மனிதக் குரலில், அதுவும் பெண் குரலில், ஒரு கூச்சல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். இளம் பெண் ஒருத்தி கூச்சலிட்ட வண்ணம் ஓடிக் கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து பயங்கரமான கரடி ஒன்று ஓடியது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கரடி மேலும் மேலும் அந்தப் பெண்ணை நெருங்கிக் கொண்டிருந்தது. இருவருக்கும் இடையே இருந்த தூரம் குறுகிக் கொண்டிருந்தது. வேறு யோசனை ஒன்றும் செய்வதற்கு அப்போது நேரம் இருக்கவில்லை. வாலிபன் மரக் கிளையிலிருந்து பொத்தென்று கீழே குதித்தான். மரத்தில் தான் சாத்தியிருந்த வேலை எடுத்துக் கொண்டு ஓடினான். கரடி அந்தப் பெண்ணை நெருங்கி அதன் பயங்கரமான கால் நகங்களை அவள் கழுத்தில் வைப்பதற்கு இருந்தது. அச்சமயத்தில் குறி பார்த்து வேலை எறிந்தான். வேல் கரடியைத் தாக்கியது. கரடி வீல் என்று ஏழுலகமும் கேட்கும்படியான ஒரு சத்தம் போட்டு விட்டுத் திரும்பியது. பெண் பிழைத்தாள். ஆனால் வாலிபன் அபாயத்துக்குள்ளானான். காயம் பட்ட கரடி அவனை நோக்கிப் பாய்ந்தது. வாலிபனுக்கும் கரடிக்கும் துவந்த யுத்தம் நடந்தது. கடைசியில் அந்த வாலிபனே வெற்றி பெற்றான்.

வெற்றியடைந்த வாலிபனுடைய கண்கள் உடனே நாலாபுறமும் தேடின. எதைத் தேடின என்பது அவனுக்கே முதலில் தெரியவில்லை. அப்புறம் சட்டென்று தெரிந்தது. அவன் கண்கள் தேடிய பெண், சாய்ந்து வளைந்து குறுக்கே வளர்ந்திருந்த ஒரு தென்னை மரத்தின் பின்னால் அதன் பேரில் சாய்ந்து கொண்டு நின்றாள். அவள் கண்களில் வியப்பும் முகத்தில் மகிழ்ச்சியும் குடிகொண்டிருந்தன. அவள் காட்டில் வாழும் பெண். உலகத்து நாகரிக வாழ்க்கையை அறியாதவள் என்று அவளுடைய தோற்றமும் உடையும் தெரிவித்தன. ஆனால் அவளுடைய அழகுக்கு உவமை சொல்ல இந்த உலகத்தில் யாரும் இல்லை என்று சொல்லும்படி இருந்தாள். அந்தப் பெண் அங்கு நின்றிருந்த காட்சி ஒப்பற்ற ஆற்றல்

படைத்த ஓவியக் கலைஞன் ஒருவன் தீட்டிய சித்திரக் காட்சியாகத் தோன்றியது. அவள் உண்மையில் ஒரு பெண்ணாயிருந்தாலும் இந்த உலகத்துப் பெண்ணாயிருக்க முடியாது என்று அந்த வாலிபன் கருதினான். அருகில் நெருங்கினான். ஆனால் அவன் எதிர்பார்த்தது போல் அவள் மாயமாய் மறைந்து போய்விடவில்லை. எதிர்பாராத விதமாக அவள் ஓட்டம் பிடித்து ஓடினாள். சற்று அவளைப் பின்தொடர்ந்து ஓடிப் பார்த்தான். பிறகு நின்றுவிட்டான். அவன் மிகக் களைப்புற்றிருந்தபடியால் மானின் வேகத்துடன் ஓடிய அந்தப் பெண்ணைத் தொடர்ந்து அவனால் ஓடவும் முடியவில்லை. மேலும், ஒரு பெண்ணைத் தொடர்ந்து ஓடுவது அநாகரிகம் என்றும் அவன் எண்ணினான். ''இந்தச் சிறிய தீவிலேதானே இவள் இருக்க வேண்டும்? மறுபடியும் பார்க்காமலா போகிறோம்!'' என்று கருதி நின்று விட்டான். கடற்கரையோரமாகச் சென்று தெள்ளிய மணலில் படுத்துக் கொண்டு களைப்பாறினான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் திரும்பி வந்தாள். தன்னுடன் ஒரு வயோதிகனான மனிதனையும் அழைத்து வந்தாள். வந்தவன் இலங்கைத் தீவில் கடற்கரையோரத்தில் வாழ்ந்து மீன் பிடித்துப் பிழைக்கும் 'கரையார்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவன் என்று தெரிந்தது. அவன் மூலமாக அவ்வாலிபன் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொண்டான். அதாவது அந்தப் பெண் தக்க சமயத்தில் அவனுடைய உயிரைக் காப்பாற்றினாள் என்று அறிந்தான். அவன் மரக் கிளையின்மேல் உட்கார்ந்து கடலையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தபோது கரடி ஒன்று அவன் பின்பக்கமாக வந்து அவனை உற்றுப் பார்த்தது. பிறகு மரத்தின்மேல் ஏறத் தொடங்கியது. இதையெல்லாம் அந்தப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள். கரடியை வேறு திசையில் இழுப்பதற்கும் அந்த வாலிபனை எச்சரிக்கை செய்வதற்கும் அவள் அவ்விதம் கூச்சலிட்டாள். கரடி மரத்தின் மேல் ஏறுவதை விட்டு அவளைத் தொடர்ந்து ஓடத் தொடங்கியது.

இதைக் கேட்டதும் அந்த வாலிபனுக்கு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? தன்னைக் காப்பாற்றிய பெண்ணுக்கு அவன் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். ஆனால் அவளோ ஒரு வார்த்தையும் மறுமொழியாகச் சொல்லவில்லை. அவளிடம் வாலிபன் கூறியதற்கெல்லாம் அவளுடன் வந்த மனிதனே மறுமொழி கூறினான். இது வாலிபனுக்கு முதலில் வியப்பாயிருந்தது. உண்மை இன்னதென்று அறிந்ததும் வியப்பு மறைந்தது. அந்தப் பெண் பேசத் தெரியாத ஊமை. அவளுக்குக் காதும் கேளாது என்று அறிந்து கொண்டதும், அவ்வாலிபனுடைய உள்ளம் கனிந்து உருகியது. அதனால் அந்தப் பெண்ணிடம் அவனுடைய பாசம் பன்மடங்காகியது. பாசம் வளர்ந்து தழைப்பதற்குச் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் துணை செய்தன. காது கேளாததும் பேசத் தெரியாததும் ஒரு குறையாகவே அவ்வாலிபனுக்குத் தோன்றவில்லை. வாயினால் சொல்ல முடியாத அற்புதமான உண்மைகளையும் அந்தரங்க இரகசியங்களையும் அவளுடைய கண்களே தெரியப்படுத்தின. அந்த நயன பாஷைக்கு ஈடான பாஷை இந்த உலகத்தில் வேறு என்ன உண்டு? அது போலவே காது கேளாததற்கு ஈடாக அவளது நாசியின் உணர்ச்சி அதிசயமான சக்தி வாய்ந்ததாக இருந்தது. அடர்ந்த காட்டின் மத்தியில் வெகு தூரத்தில் மறைந்திருக்கும் காட்டு மிருகம் இன்னதென்பதை அவளுடைய முகர்தல் சக்தியைக் கொண்டே அவளால் கண்டு பிடிக்க முடிந்தது. ஆனால் இதெல்லாம் என்னத்திற்கு? இதயங்கள் இரண்டு ஒன்று சேர்ந்து விட்டால் மற்ற புலன்களைப் பற்றி என்ன கவலை? அந்த வாலிபனுக்கு அத்தீவு சொர்க்க பூமியாகவே தோன்றியது. நாட்கள், மாதங்கள், வருஷங்கள் — இவ்விதம் சென்றன. எத்தனை நாள் அல்லது வருஷம் ஆயிற்று என்பதைக் கணக்குப் பார்க்கவே அவன் மறந்து விட்டான்.

வாலிபனுடைய இந்தச் சொர்க்க வாழ்வுக்குத் திடீரென்று ஒரு நாள் முடிவு நேர்ந்தது. கப்பல் ஒன்று அந்தத் தீவின் அருகில் நின்றது. அதிலிருந்து படகிலும் கட்டு மரங்களிலும் பலர் இறங்கி வந்தார்கள். அவர்கள் யார் என்று பார்க்க வாலிபன் அருகில் சென்றான். தன்னைத் தேடிக் கொண்டு தான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிந்தான். அவனுடைய நாட்டில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நடந்து விட்டன. அவனுடைய தந்





கல்லை உடைத்தனன் சிற்பி. அங்கே யெழிற்
கற்சிலை ஒன்று பிறந்தது!
சொல்லை உடைத்தனன் பாவலன். பாட்டினில்
சொல்மல ராகி,சி றந்தது!
அல்லை உடைத்தனன் ஞாயிறு! வையகம்
அனைத்தும் உயிர்ப்பு நிறைந்தது!
எல்லை உடைத்தனன் அண்டைய நாட்டினன்!
எங்கும் அமைதி இறந்தது!

ஆக்கமும் அழிவும்

நா. சீ. வரதராஜன்

தைக்கு மூத்த சகோதரர்கள் இருவர் இறந்துபோய் விட்டார்கள். இன்னொருவருக்குப் புத்திர சந்தானம் இல்லை. ஆகையால், ஒரு பெ ரிய சாம்ராஜ்யம் அவனுக்காகக் காத்திருக்கிறது என்று தெரிந்து கொண்டான். அவனுடைய உள்ளத்தில் ஒரு பெ ய பூசல் ஏற்பட்டது. அந்த அழகிய தீவையும் அதைச் சொர்க்க பூமியாக்கிய ஊமைப் பெண்ணையும் விட்டுப் போக அவனுக்கு மனமில்லை. அதே சமயத்தில் ஊரையும் உற்றார் உறவினரையும் பார்க்கும் ஆசை ஒரு பக்கத்தில் அவனைக் கவர்ந்திழுத்தது. அவன் பிறந்த நாட்டை நாலாபுறமும் அபாயம் சூழ்ந்திருக்கிறதென்றும் அறிந்தான். யுத்த பேரிகைகளின் முழக்கம் மிக மிகத் தொலைவிலிருந்து அவன் காதில் வந்து கேட்டது. இது அவன் முடிவு செய்வதற்குத் துணை செய்தது. ''திரும்பி வருகிறேன்; என் கடமையை நிறைவேற்றி விட்டு வருகிறேன்'' என்று அப் பெண்ணிடம் ஆயிரம் முறை உறுதிமொழி கூறி விட்டுப் புறப்பட்டான். காட்டில் பிறந்து வளர்ந்த அந்த ஊமைப் பெண் நாட்டிலிருந்து வந்திருந்த மனிதர்களுக்கு மத்தியில் வருவதற்கே விரும்பவில்லை. வாலிபன் படகில் ஏறியபோது அவள் சற்றுத் தூரத்தில் அந்தப் பழைய வளைந்த தென்னை மரத்தின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இரு கண்களும் அப்பே து இரண்டு கண்ணீர்க் கடல்களாக வாலிபனுக்குத் தோன்றின. ஆயினும் அவன் தன் மனத்தைக் கல்லாகச் செய்து கொண்டு படகில் ஏறிச் சென்று கப்பலை அடைந்தான்...

ஃ ஃ ஃ

''குந்தவை அந்த வலைஞர் குலப் பெண் அப்படி நின்று பார்த்துக்கொண்டிருந்தாளே, அந்தக் காட்சியின் நினைவு அடிக்கடி என் மனக்கண் முன்தோன்றிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு மறந்தாலும் மறக்க முடியவில்லை. அதைக் காட்டிலும் சோகமான இன்னும் ஒரு காட்சி, நினைத்தாலும் குலை நடுங்கும் காட்சி அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. இரவிலும் பகலிலும் உறங்கும் போதும் விழித்திருக்கையிலும் என்னை வருத்தி வேதனைப் படுத்திக் கொண்டிருக்கிறது. அதையும் சொல்லட்டுமா?'' என்று சுந்தர சோழர் தம் அருமை மகளைப் பார்த்துக் கேட்டார்.

உருக்கத்தினால் தொண்டை அடைத்துத் தழதழத்த குரலில், சுந்தர சோழரின் அருமைக் குமாரி ''சொல்லுங்கள், அப்பா!'' என்றாள். (தொடரும்)

வெர்க்லி-கல்கி இலக்கியப் பரிசுத்திட்டம்

ரூபாய் ஆயிரம் முதல் பரிசு பெற்ற

அவள் என் மனைவி

இந்திரா பார்த்தசாரதி





திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழர் பரம்பரையில் வந்த முத்து 'கிராண்ட்டிரங்க்' ஏறித் தில்லியை வந்தடைந்தான். பல்கலைக் கழகப் பட்டமா பெற்றிருக்கிறான் அவன், வேலை கிடைக்காமல் போக? இரண்டு கைகள் இருந்தன; உறுதி இருந்தது மனத்தில். வந்ததும் வேலை கிடைத்து விட்டது. மத்திய சர்க்கார் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த ஐந்நூறு உத்தியோகஸ்தர்களுடைய வீட்டையும், பாத்திரங்களையும் 'விளக்க' வைப்பதுதான் அந்த வேலை... மாதம் நூற்றிருபது ரூபாய் வந்தது.

சேலத்தில் இடைப்பாடியைச் சேர்ந்த அவனுக்கு ஊரில் பெரிய குடும்பம். அநேகமாகக் கிராமத்துக்குக் கிராமம் குடிசைத் தொழிலாக மாறிவிட்ட கள்ளச் சாராயம் இறக்குதல் என்ற பணியில் ஈடுபட்டிருந்த அவன் தந்தையைப் போலீசுக்கு உரிய சமயத்தில் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் கைது செய்து விட்டார்கள். குஞ்சும் குளுவான்களுமாக ஏழெட்டுத் தம்பி தங்கைகள். முத்து மாதா மாதம் அனுப்பி வந்த எழுபது ரூபாய், தம்பிகள் செய்து வந்த 'எடு பிடி' வேலைகள் ஆகியவை அந்தக் குடும்பத்தைப் பரிபூரணமாகப் பட்டினி கிடக்காமல் காப்பாற்றி வந்தன.

இந்தச் சமயத்தில்தான் முத்து காதல் நோய்க்குள்ளானான். ஒவ்வொருவருடைய வருமானத்தைப் பார்த்தா கணை தொடுக்கிறான் மன்மதன்? தில்லியில் வசந்த பஞ்சமி கொண்டாடினார்கள். மன்மதன் அம்பு எய்தான். அது முத்துவின் மீது போய் விழுந்தது.

முத்து கரோல்பாகில் அஜ்மல்கான் ரோடு வழியாக வந்து கொண்டிருந்தான். நல்ல கூட்டம். நடைபாதையில் யானையைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் போட்டுக் கொண்டு விலை கூறியவாறு இருந்தனர். அப்பொழுது திடீரென்று ஒரு பெண் குரல் கிறீச்சிட்டது. முத்து திரும்பிப் பார்த்தான். அங்கே —

சேலத்தைச் சேர்ந்த பெண்தான். அவள் எதிரே ஒரு பெரிய அல்சேஷன் நாய். அவள் மீது எந்தக் கணத்திலும் பாயலாம் என்ற நிலையில், முஸ்தீபுக்குத் தயாராவது போல் உறுமிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் எதிர்ப் பக்கமாக நின்று கொண்

டிருந்தான். முத்து குறுக்கே வந்துகொண்டிருக்கும் கார்களையும், ஸ்கூட்டர்களையும் பாராமல், உயிரை ஒரு பொருட்டாக மதிக்காது, எதிர்த் திசைக்கு ஓடினான். அந்தப் பெண்ணின் கைகளைப் பற்றி அவளைக் கடை ஓரமாக அணைத்துச் சென்றான்.

''ஏ.... புல்லி...!'' என்ற குரல் கேட்டது. அல்சேஷனின் வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத ஒரு பஞ்சாபிப் பெண் அந்த நாயை அதட்டினாள். அது அவளைப் பின்தொடர்ந்தது.

காப்பாற்றப்பட்ட பெண், முத்துவை நன்றியுடன் நோக்கினாள். அவனும் நோக்கினான்.

தமிழ் இலக்கியத்தில் 'களிறு தரு காமம்', 'புனல் தரு காமம்'... என்றெல்லாம் சொல்வார்கள். இது 'அல்சேஷன் தந்த காமம்' மாயிற்று.

''உம் பேரென்ன?'' என்றான் முத்து.

''ராசம்மா. உம் பேரென்ன?''

''முத்து !''



அப்பொழுதுதான் ராசம்மா முத்து தன்னை இன்னும் அணைத்துக் கொண்டிருக்கிறான் என்று உணர்ந்திருக்க வேண்டும். அவள் அவனிடமிருந்து விலகிக் கொண்டாள்.

''எம்மாம் பெரிய நாயி.....'' என்றாள் ராசம்மா.

''நாயைக் கண்டா கூச்சலா போடுவாங்க? கடிச்சுக் குதறி இருக்குமில்லே...!''

ஒரு பெண்ணின் ஸ்பரிசம், முத்துவுக்கு அதுதான் முதல் அநுபவம். அவன் அவளைத் தலையிலிருந்து கால் வரை ஆராய்ந்தான்.

''பொருத்தமாகத்தான் பேர் வைச்சிருக்காங்க, பெத்தவங்க'' என்றான் முத்து புன்னகையுடன்.

''என்ன சொல்லறே நீ?''

''ராசம்மாங்கற பேரைச் சொல்றேன்...''

''என்ன வம்பு பண்ணறயா?'' அவள் இதைப் பொய்க் கோபத்துடன் சொல்லுகிறாள் என்பதை முத்து உணராமலில்லை.

''சரி வரயா, அந்த ஓரக் கடையிலே டீ குடிப்போம்?'' என்றான் முத்து.

அவள் கொஞ்சம் தயங்கினாள்.

''சும்மா வா, பயம் இருமில்லே?''

அஜ்மல்கான் ரோட்டிலின்றும் கிளைத்த ஒரு சந்திலிருந்த டீக்கடைக்கு இருவரும் சென்றார்கள். கடை வாசலில் போடப்பட்டிருந்த 'ஆடும் பெஞ்சி'யில் இருவரும் உட்கார்ந்தனர்.

''எங்கே இருக்கே நீ ?'' என்று கேட்டான் முத்து.

''பிர்லா மந்திருக்குப் பின்னாலே... நீ?''

''தேவ் நகர். நான் உன்னை இங்கே பார்த்ததேயில்லையே ?''

''இப்பொத்தானே உனக்கு மீசை மொளைச்சிக்கிட்டு இருக்கு?'' என்றாள் ராசம்மா. அவள் சிரித்தாள். பற்கள் வெள்ளை வெளேரென்று இருந்தன.

''பொம்பளைக்கு என்ன திமிரு?'' என்றான் முத்து.

அப்பொழுது டீ வந்தது. இருவரும் வாங்கிக் கொண்டார்கள்.

''உனக்கு எந்த ஊரு?'' என்றான் முத்து.

''உசிலம்பட்டி. உனக்கு?''

''எடப்பாடி !''

ராசம்மா டீயைக் குடித்து விட்டு, புடவைத் தலைப்பினால் வாயைத் துடைத்துக் கொண்டாள்.

''யார் இருக்காங்க உன் கூட ?'' என்று கேட்டான் முத்து.

''அப்பா இருக்காங்க.... அம்மா போன வருஷந்தான் போனாங்க.''

''எங்கே ?''

''ஒரேயடியா...!'' என்று சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்.

''இதென்ன சிரிக்கிறே ?'' என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டான் முத்து.

''முழுவிப் போற மாதிரி கடனை வைச்சுட்டுப் போனாங்கன்னு, அவங்க போனதுக்கு அளவா அழுவாங்க?''

''அவங்களாலே என்ன கடன்?''

முத்து காசைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டான். இருவரும் சந்து வழியே குருத்வாராரோட்டை நோக்கிச்சென்றார்கள்.

''அவங்களுக்கு ஒரே வியாதி: ஊருக்கும் போக மாட்டேன்னு பிடிவாதமா இங்கே கிடந்தாங்க. பைசா தண்ணியாக் கரைஞ்சது தான் மிச்சம்....''

''உங்கப்பாவும் சம்பாதிக்கிறாரில்லே?''

''அவுரா ? அவங்களுக்கும் வந்திடிச்சி....; சைக்கிளிலே சாப்பாடு எடுத்துக்கிட்டுச் சுத்திச் சுத்திக் கயத்துக் கட்டில்லே, இப்பொ ராவோடு ராவா கிடக்கிறாரு.''

''எப்படிச் சமாளிக்கிறே நீ....?''

ராசம்மா சிறிது நேரம் பேசாமலிருந்தாள்.

''நம்ம ஜனங்க யாருமா உனக்கு உதவி செய்யலே ?''

''ஆமாம்.... செய்வாங்க'' என்று பழிப்புடன் கூறிவிட்டு அவள் மேலும் தொடர்ந்தாள். ''இந்த முருகேசன் பயல்லே, எங்கேயோ ஆபீஸ்லே சப்ராசியா இருக்கானே, அவனை இந்த ஊருக்குக் கூட்டிக்கிட்டு வந்ததே எங்கப்பாருதான். அவன் ஒரு கல்யாணம் கட்டிக்கிட்டு, இப்போ என்னை, 'வைப்பா இருக்கியா, பணம் தரே'ங்கிறான். திமிரு பிடிச்ச பய.....''

குருத்வாரா ரோட் வந்ததும் முத்து நின்றான்; அவன் ராசம்மாவின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''இத பாரு... நான் உன்னைக் கட்டிக்கிறேன், என்ன சொல்லறே நீ?'' என்றான் அவன்.

''கட்டிக்கிறது கிடக்கட்டும், உனக்கு என்ன வருது வரும்படி....?''

''நூத்திருபது ரூபா.... இதைத் தவிர, கன்னாட் ப்ளேஸ்லே தெனம் பேப்பர் விக்கலாம்னு இருக்கேன். ஒரு ஐயா அதுக்கு ஏற்பாடு செய்யறேன்னிருக்காரு. அதிலே ஒரு நாளைக்கு ஒரு ரூபா கிடைக்கும்.''

'' உன்னைப் பெத்தவங்க எங்கே இருக்காங்க ?''

''ஊரிலே. அவங்களுக்கு மாசம் எழுபது ரூபா அனுப்பறேன்.''

ராசம்மா சிரித்தாள்.

''எதுக்குச் சிரிக்கிறே ?''

''அம்பது ரூபாயிலே குடித்தனம் நடத்தப் போறயா ? நான் சம்பாதிக்கிறது எங்காப்பாரு வைத்தியத்துக்குத்தான் போவும். அது கிடக்கட்டும், உன்னை நான் எப்படி நம்பறது?''


''எனக்குக் கல்யாணமாகலே... உங்கப்பாரு கூட்டிக்கிட்டு வந்த முருகையன் பய இல்லே நான். என்னை நம்பலாம்....''

''அப்போ ஒண்ணு செய்வியா ?''

''என்ன செய்யணும்னு சொல்லு. இப்பொவே செய்யறேன்.''

''தெனம் நீ சம்பாதிக்கப் போற ஒரு ரூபாயை என்கிட்டே வந்து கொடு. ஒரு வருஷம் இப்படிச் செஞ்சியானு, அப்புறம் உன்னைக் கட்டிக்கிறேன். வட்டிப் பணம் கட்டிக்கிட்டு வரேன் லாலாகிட்டே, தெனம் ஒரு ரூபாய்னு.... அதுக்கு இது சரியா இருக்கும்.''


முத்துவுக்கு ஸ்ரீ வைஷ்ணவப் பெரியார்களுடைய கதை தெரிந்திருக்க நியாயமில்லை. அவ்வாறு தெரிந்திருந்தால், நான் ஒன்றுக்கு ஆயிரம் பாகவதர்கள் வீதம்



"நாட்டு நலனுக்கும்
நமது இருப்புக்கும் நாம்
செய்யக்கூடிய ஒப்பற்ற பணி
என்ன தெரியுமா ?

... நம்மால் இயன்ற அளவுக்குச் சீராக, நன்றாக, குறையின்றி
மேற்கொண்ட ஒரு வேலையைச் செய்து முடிப்பது;
அதை முதல்தரமான பொருளாக ஆக்குவது; அதைப்பற்றி
விளம்பரப்படுத்தத் தம்பட்டம் அடிக்காமல் விடுவது."

—ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் (ஜூனியர்)



மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட்
பம்பாய் - கல்கத்தா - டெல்லி - மதராஸ்

PS/MM/10/65

ஆண்டு முழுவதும் 'ததியாராதனம்' செய்து வர வேண்டுமென்று திருமங்கை மன்னனைப் பணித்த குமுதவல்லி நினைவு வந்திருக்கும்.

'தினம் ஒரு ரூபாயா?...' முத்து திகைத்து நின்றான்.

''தோ பாரு.... தெனம் ஒரு ரூபா வரும்னு சொல்ல முடியுமா ? ஒரு நாளைக்கு இரண்டு ரூபாகூட வரும், ஒரு நாளைக்கு ஒன்றுமே வராது. தெனம் ஒரு ரூபா கொண்டான்னா எங்கேயிருந்து கொடுப்பேன்?''

''அப்போ கல்யாணத்தை மறந்துடு!'' என்று கூறிவிட்டு ராசம்மா வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

''ஏய்.... நிப்பியா, சொல்றதைக் கேட்டுட்டுப் போ....'' என்று சொல்லிக் கொண்டே அவளைப் பின்தொடர்ந்தான் முத்து.

ராசம்மா நின்றாள். ''மறு பேச்சு வேணாம்.... நாய்கிட்டேயிருந்து காப்பாத்தினே, டீ வாங்கிக் கொடுத்தே.... இல்லேங்கலே.... கல்யாணம் கட்டிக்கணும்னா, நான் சொல்றதை நீ செய்தாத்தான் கட்டிப்பேன்....''

''தெனம் ஒரு ரூபாயா வட்டி கட்டிக்கிட்டிருக்கே?.... அந்த லாலா யாரு, சொல்லு?''

''ஏன்? என்ன செய்யப் போறே ?''

''ஏன்யா, இது நியாயமான்னு கேக்கறேன்......''

''நியாயம், அநியாயத்தைப் பத்தி யோசிச்சா அவங்க ஏன்யா வட்டி வாங்கறாங்க? வெறும் பேச்சு வேணாம். நீ சம்மதம்னா சொல்லு. இல்லாட்டி நான் போறேன்.''

முத்து சிறிது நேரம் யோசனை செய்து கொண்டே நின்றான். தன்னால் முடியுமா இது? 'ஒரு பேப்பருக்கு ஒரு பைசான்னு வைச்சா, ஒரு நாளைக்கு நூறு பேப்பர் வித்தாவணும். ஏன் முடியாது? கன்னாட் பிளேஸ் பூரா நாயா அலைஞ்சா வாங்கிக்காமேயா போயிடுவாங்க ?'

''சரி....'' என்றான் முத்து.

வானத்திலிருந்து தேவர்கள் புஷ்பமாரி சொரிவது போல், அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தின் அருகில் இருந்த கட்டடத்தின் மீதிருந்து யாரோ குப்பையைக் கொட்டினார்கள்.

முத்து கோபத்துடன் மேலே பார்த்தான். ''க்யா கர்த்தா ஹை....?''

''மாப் கரோஜி....'' என்றாள் ஒரு வயதான ராஜஸ்தானிய வேலைக்காரி.

''சரி.... அதைவிடு... என்னிலேருந்து பணம் தரே? அதைச் சொல்லு!'' என்றாள் ராசம்மா.

''இன்னிக்கு நாலாம் நாள்லேந்து.... ஒரு நாள், இரண்டு நாள் கொடுக்கவேண்ணா, அதுக்காக....''

''அந்தப் பேச்சு வேணாம். தெனம் கொடுத்தாவணும். முடியாதுன்னா இப்பவே சொல்லிடு.....''

''சரி, போ தாரேன்'' என்று சொல்லிக் கொண்டே மேலே விழுந்திருந்த குப்பைகளைத் தட்டினான் முத்து.

''சரி, வரட்டுமா ?'' என்று கேட்ட ராசம்மாவின் தோள்மீது கையை வைத்தான் முத்து.

''ஏய், என்ன இது? வரம்பு மீறதே?'' என்று அதட்டினாள் ராசம்மா.

''குப்பை அல்லே தட்டினேன். ஏன் காயறே ?'' என்றான் முத்து. இலேசாக அவள் தோளைத் தட்டிக் கொண்டே. அவள் புன்னகை செய்தாள்.

பேப்பர் விற்கத் தொடங்கிய பிறகுதான் இந்தத் தொழிலில் எவ்வளவு போட்டி இருக்கிறது என்று அவனால் உணர முடிந்தது. ஏழு வயதுப் பையன்கள், அழுது கொண்டேயிருக்கும் குழந்தைகளை இடுப்பில் வைத்துக் கொண்டிருக்கும் தாய்மார்கள், அங்கஹீனமானவர்கள் — இவர்கள் யாவரும் பொதுமக்களின் அனுதாபத்தை மூலதனமாகக் கொண்டே எல்லாப் பேப்பர்களையும் விற்றுவிட முடிந்தது. முத்துவால் ஒரு நாளைக்கு முப்பது, அதிகமாகப் போனால், நாற்பது. இதற்கு மேல் விற்க முடியவில்லை. ஆகவே, ராசம்மாவுக்குத் தினம் ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்றால், தான் ஒரு வேளை சாப்பிடுவதை நிறுத்திக் கொண்டு கொடுக்கும்படியாக ஆகிவிட்டது.

ஒரு நாள்.... அவன் அன்று உண்மையாகவே நரியின் முகத்தில் விழித்தான். தேவ் நகரில் அவன் இருந்த குடிசைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு காட்டிலிருந்து அது



வந்திருக்க வேண்டும். மனிதன் முகத்தில் விழிப்பது அதற்குக் கெட்ட சகுனமோ என்னவோ.... அது இவனைக் கண்டதும் ஓடி விட்டது. முத்துவுக்கு ஒரே சந்தோஷம்.

நரியின் முகத்தில் விழித்தது வீண் போகவில்லை. அன்று எல்லாப் பேப்பர்களும் விற்றுப் போய் விட்டன. மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது போலீசார் கண்மூடித்தனமாகச் செய்த தடியடிப் பிரயோகம், முத்துவின் பையில் ஒரு பழைய பர்ஸில் ஒரு ரூபாய்க்கு ஐந்து பைசா நாணயங்களாகக் கலகலத்தன.

முத்துவுக்குக் கன்னாட் பிளேஸைச் சாவகாசமாகச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எப்பொழுதுமே உண்டு. இன்று அது நிறைவேறியது. எல்லாப் பேப்பர்களையும் விற்றாகி விட்டது. ராசம்மாவும் கூட இருந்தால் தேவலை என்று அவனுக்குத் தோன்றிற்று. அவள் பிடிவாதக்காரி. வர மாட்டாள்.

அவன் நண்பன் ராமசாமி, ராசம்மாவின் சிநேகிதம் அவனுக்கு வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். "உன்னைவிடப் பெரியவடா அவ. நம்ம மத்த ஜனங்க அவளைப் பத்தி நல்லாச் சொல்லலே.... அந்தத் தங்கராக தங்கையைக் கட்டிக்க. சொல்றேன், கேளு...." ராமசாமி பொறாமையினால் சொல்கிறான் என்று முடிவு செய்தான் முத்து. "அந்தப் பொண்ணு நாயைப் பார்த்துப் பயந்துக்கிட்டு எப்படி நின்னு! அவளைப் போய்த் தூத்தறுங்களே, பாவிப் பயங்க...."

முத்து பையைத் தொட்டுப் பார்த்தான். பர்ஸ் கனமாக இருந்தது. ராசம்மாவிடம் இன்று பேப்பர் முழுதும் விற்றுவிட்டதென்று சொன்னால், எப்படிச் சந்தோஷப்படுவாள்! "அந்தப் பய மவ பல்லு எப்படி அவ்வளவு வெள்ளையா இருக்கு!"

கன்னாட் பிளேஸ் எப்பொழுதும் போல் மாலை வேளையில் திருவிழாக் கோலம் பூண்டு விளங்கியது. ஜன்பத்தில் ஒரே கூட்டம்.

"இந்தப் பஞ்சாபிக்காரப் பொண்ணுங்க நல்லாத்தான் இருக்காங்க.... ராசம்மா பல்லைச் சொல்லப் போயிட்டேனே.... இவங்க உடம்பு என்ன நிறம்! ஏன் இப்படி மனிச சாதியிலே கறுப்பு ஒருத்தன், வெள்ளை ஒருத்தனிருக்குது?.... இந்த அம்மா எல்லாம் கடையையே விலக்கு வாங்கிக் கைப் பையிலே அடைச்சுக்கப் போறாப்பலே, 'டாக் டாக்'னு போறாங்க. நான் ஒரு ரூபாய்க்காக 'எஞ்சாமி, உஞ்சாமி'ன்னு பாடுபட வேண்டியிருக்கு. ஏன் இந்தப் பொளைப்பு!.... யாரைக் கேக்கறது? என்னைத்தான் கேட்டுக்கணும்.... 'எடப்பாடியிலே ஏழைப் பய குடிசையிலே பொறந்'னு யாரு சொன்னாங்க! அடே! அந்தப் பொண்ணு எத்தினி நல்லா இருக்குது! என் உடம்பைச் செய்யறப்போ எண்ணெயை ஊத்தி முடுக்கி வுட்டிருப்பாங்க. அது, பாலிலே செஞ்ச உடம்பு.... அது காரைத் தொறந்துக்கிட்டு நிக்கிற சொகுசு... அட சீ...! ஏழையா பொறந்துட்டு ஏண்டா ஆகாசத்தை அண்ணாந்து பார்க்கிறே? உன் பையிலே இருக்கிற ஒரு ரூபாயை...."

தன் பையைத் தொட்டுப் பார்த்த முத்துவின் கை அப்படியே செயலற்று நின்றது. பர்ஸ் பறி போய் விட்டது!... பட்டினத்து நாகரிகத்தைக் கட்டணம் செலுத்தாமல் வேடிக்கை பார்க்க முடியுமா?

முத்துவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. எல்லை மீறிய கோபம் வந்தது. யார் மீதுதான் என்று தெரியவில்லை. அவன் கோபத்தை உணராமல், அவரவர்கள் காரில் ஏறிக் கொண்டு சென்றார்கள். அவன் தன் காதல் கப்பத்தை இழந்துவிட்டான் என்ற காரணத்துக்காகக் கன்னாட் பிளேஸில் தலைதெறிக்க ஓடிய கூட்டம், தன் செலவை நிறுத்தி அவனிடம் அநுதாபம் தெரிவிக்கவில்லை. முத்து தனி ஆளாய், அளவற்ற சினத்துடன் நின்றான்.

இப்பொழுது என்ன செய்வது? அவன் ஆத்திரத்தில் 'சிவப்பு சிக்னல்' என்று அறிந்தும், தெருவைக் கடந்து 'ரீகல்' அருகே வந்தான். பெரிய பெரிய ஹோட்டல்களுக்குள், ஜோடி ஜோடியாய்ப் போனார்கள். 'ரீகல்' கொட்டகையில் ஜன சமுத்திரம் பொங்கி வழிந்தது.


ராசம்மாவை எப்படிப் பார்ப்பது? இரண்டு நாட்களாகப் போகவேயில்லை. அவள் மிகவும் கோபமாக இருப்பாள். ஏதாவது பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவன் முதலில் நினைத்தான். அவள் பிடிவாதக்காரி. தான் சொல்லுவதை அவள் நம்ப மாட்டாள். ஒரு ரூபாய் கொண்டு போனாலாவது, ஏன் இரண்டு நாட்களாக வரவில்லை என்பதற்கு ஏதாவது சொல்லி அவளைச் சமாதானப் படுத்தலாம்.

யாரையாவது கேட்கலாமா? ராமசாமியைக் கேட்கலாம். ஆனால் அவன் ராசம்மாவுக்கென்றால் தரமாட்டான். சுப்பிரமணியனைக் கேட்டால் என்ன? அதற்காக லோதி ரோட் வரை போக வேண்டுமே? அதற்குப் பணம்? ராமசாமியிடம் சைக்கிளை இரவல் வாங்கிக் கொண்டு போகலாம். சேச்சே.... ஒரு ரூபாய்க்கா இவ்வளவு பாடு!.... ஒரு ரூபாய்க்கு அல்ல, ராசம்மாவின் முகத்தில் ஏற்படப் போகிற அந்த இளஞ் சிரிப்புக்காக. கன்னாட் பிளேஸில் பார்த்த அந்தப் பெண், என்ன அழகு!.... என்ன அழகு...? அதற்குத்தான் வரி செலுத்திப் பார்த்தாகி விட்டதே! பர்ஸில் பணம் போட்டுக் கொண்டிருக்கவே கூடாது. அது ராசம்மா கொடுத்த பர்ஸ்.... இருதயத்துக்கருகே வைத்துக் கொண்டிருந்தான். பர்ஸ் போய் விட்டது. அப்படியானால்...

அவன் கோல் மார்க்கெட் அருகே வந்து விட்டான். நன்றாக இருட்டி விட்டது.

அப்பொழுது.... கீழே அவன் கண்ணுக்கு ஏதோ தென்பட்டது. குனிந்து எடுத்தான். பர்ஸ்....! ஆனால், அவனுடையதல்ல. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவரும் அவனைக் கவனிக்கவில்லை. இடுப்பில் செருகிக் கொண்டான்.

அவன் முன்னால் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு ஒருவர் சென்றார். அவர் திடீரென்று நின்றார். சட்டைப் பையையும்,


உலகத்து நிலையங்கள் அனைத்தையும்
தெளிவாக இணைப்பதில் என்றுமறியாத சிறப்பு...
மாடல் டிஏ/டியு 0284
ரூ. 303/- எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது.
விற்பனை வரி தனி.
மர்பி இண்டர்நேஷனல்
அதன் இன்பமயமான ஒலியை உங்கள் அருகமைந்த மர்பி வியாபாரியிடம் கேட்டு பரவசமடையுங்கள்.
மர்பி இப்பொழுது அறிமுகப்படுத்துகிறது "இண்டர்நேஷனல்"—உங்கள் இல்லத்திற்கு உகந்த ரேடியோ. • கீர்த்தியான மரக்கேபினெட்டிற்கு எடுப்பான கருமை நிறமுகப்பு மற்றும் அதை அலங்கரிக்கும் கவர்ச்சியான பொன்னெழுத்துக்கள். • தூரமோ, அருகிலோ நீங்கள் விரும்பும் நிலையங்களை எளிதில் இணைக்க 3 பாண்டுகள். • உட்பொருத்தப்பட்ட ஒப்பற்ற ஃபெரைட் அன்டென்னா மிகவும் பலவீனமான நிலையங்களையும் எடுக்கும். • இண்டர்மீடியட் ஃப்ரீக்வென்ஸி ரிஜெக்டர் தெளிவான ஒலிக்கு உத்தரவாதம் அளிக்கிறது.
மர்பி – இல்லத்தை மகிழ்விக்கிறது!
NAS 332



பான்ட் பைகளையும் கலவரத்துடன் அவர் தேட ஆரம்பித்தார்.

முத்து அவரைக் கடந்து சென்றிருக்கலாம். ஆனால் அநுதாபம் தெரிவித்து விட்டாவது போக வேண்டும் என்று, அவன் மனச்சாட்சி சொல்லிற்று.

''க்யா ஹை ஜி ?'' என்றான் முத்து.

அவர் முத்துவை ஏற இறங்கப் பார்த்தார். அவர் நெற்றியில் திருநீறும் குங்குமமும் விளங்கின. மதராஸி என்று அறிந்ததும், பர்ஸைக் கொடுத்துவிடலாமா என்று முத்து ஒரு கணம் யோசித்தான். ஆனால் காதல் குறுகிய இனப் பற்றை வென்றது.

''பர்ஸைக் காணோம்...'' என்றார் அவர், அவன் தமிழன் என்று தெரிந்து கொண்டு.

''பர்ஸா....? அட பாவமே... நல்லா பாருங்க....''

அவருடைய சைக்கிளில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பைகள் தொங்கின. காய் கறிகள், வீட்டுச் சாமான்கள் — எல்லாவற்றையும் வாங்கிய பிறகு அந்தப் பர்ஸில் மீதி என்ன இருக்கப் போகிறது என்று நினைத்தான் முத்து. கொடுத்து விடலாமா? தேடுவதைப் பார்த்தால், எப்படியும் ஒரு ரூபாயாவது இருக்காதா ?

''பர்ஸில் எவ்வளவு இருந்தது ?''

''முப்பது ரூபாய்!'' என்றார் அவர் பரிதாபமாக. முப்பது நாட்களுக்குப் பேப்பர் விற்க வேண்டிய அவசியமில்லை என்று நினைத்தான் முத்து.

அப்பொழுது வேட்டி கட்டிய ஒருவர் அங்கு வந்தார்.

''என்ன ஆச்சு ?'' என்று பரிவுடன் விசாரித்தார்.

''பர்ஸைத் தொலைச்சிட்டாரு '' என்றான் முத்து.

''எனக்கு எதிர்த்த வீடுதான். நான் பார்த்துண்டே இருந்தேன். நீ என்ன குனிஞ்சு எடுத்தே ?'' என்றார் அவர்.

முத்துவுக்கு வியர்த்துக் கொட்டியது. ''நானு...? ஒண்ணுமில்லையே....?''

பர்ஸைத் தொலைத்தவர் அவன் மீது குபீரென்று பாய்ந்தார். அவன் இடுப்பிலிருந்து பர்ஸ் விழுந்தது.

''திருட்டுப் பட்வா! நீயுமா தேடறே...?''

''சரிதான் சார்.... கிடைச்சுடுச்சுல்லே... ஏன் கத்தறீங்க ?''

முத்து மேலே நடக்கத் தொடங்கினான். அவர் அவனைப் போகவொட்டாமல் கையைப் பற்றிக் கொண்டு தடுத்தார்.

''வா, ரீடிங்ரோட் போலீஸ் ஸ்டேஷனுக்கு.''

''எதுக்கு ?''

''எதுக்கா? வாடா, ராஸ்கல்! நீங்களும் வாங்க சார்.''

''இருங்கோ... வீட்டுக்குப் போய்ச் செருப்பு போட்டுண்டு வந்துடறேன்.''

அதற்குள் அங்கு கூட்டம் கூடிவிட்டது. அவனை அடிக்கடி அந்த வட்டாரத்தில் பார்த்திருப்பதாக நாலைந்து பேர் சொன்னார்கள்.

''போலீஸிலே ஒப்படைங்கோ... அது தான் 'பெஸ்ட்' !'' என்றார் வழுக்கைத் தலையாக இருந்த ஒருவர்.



''என் பையன் பரீட்சைக்கு நன்று உருப்போட்டான். பரீட்சை சமயத்தில் தான் படித்தது ஒன்றுகூட மறக்காமல் இருந்தான் !''

''அப்ப ஏன் அவன் பாஸ் செய்யவில்லே?''

''பரீட்சை நடக்கும் தினத்தை மறந்து போய் விட்டான் !''

இரண்டு, மூன்று பேர்கள் முத்துவைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

பர்ஸைத் தொலைத்தவர் வாழ்க்கை ரஸமற்றது. ஆபீஸில் ஃபைல்கள், வீட்டில் நச்சு நச்சென்ற ஒரு மனைவி. குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்துக்கு முன்பே பெற்றெடுத்த ஏழெட்டு வாலி வர்க்கம். இப்பொழுது அவருக்குத் தம் ஆற்றலை அனைவருக்கும் எடுத்துக் காட்ட ஒரு வாய்ப்பு வந்தது. அவருக்குள் ஒளிந்து கொண்டிருந்த கற்பனை காட்டாறுகப் பெருக்கெடுத்து ஓடியது. கண்ணும் காதும் வைத்து, முத்துவைப் பிடித்த தம் சாகஸத்தை அங்கிருந்த அனைவருக்கும் எடுத்துக் கூறத் தொடங்கினார்.

செருப்பை எடுக்கப் போனவர் வரவேயில்லை. பாரதப் பண்பாட்டுக்கேற்பத் 'நமக்கேன் வம்பு?' என்று பேசாமல் இருந்துவிட்டார். போலீஸ் விவகாரத்தில் அவர் மாட்டிக் கொள்ள விரும்ப வில்லை யென்று தெரிந்தது.

''நான் வருகிறேன்'' என்றான் ஓர் இளைஞன்.

''நீங்கள் சாட்சி சொல்ல வேண்டும், இவன் குனிந்து எடுத்ததாக....'' என்றார் பர்ஸைத் தொலைத்தவர்.

''சரி.... ஒரு பர்ஸா, இரண்டு பர்ஸா?'' என்று கேட்டான் அந்த இளைஞன். அவன் துடிப்பைப் பார்த்தால் 'ஆயிரம் பர்ஸ்' என்றுகூடச் சொல்ல அவன் தயாராக இருக்கிறான் என்று தெரிந்தது.

''நானும் சொல்லுகிறேன்....'' என்று இன்னொருவன் வந்தான். பொய்ச் சாட்சி சொல்லுவதற்கு இவ்வளவு போட்டி ஏற்படுமென்று பர்ஸைத் தொலைத்தவர் நினைக்க வில்லை.

''சரி.... எல்லாரும் வாருங்கள்.''

எல்லாருமாக ரீடிங் ரோட் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றார்கள்.

போலீஸ் ஸ்டேஷனில் சப் - இன்ஸ்பெக்டர் இருந்தார். இளைஞர். அவர் ஏழெட்டுப் பேர் வருவதைப் பார்த்ததும், ஏதோ எழுதிக் கொண்டிருந்தவர் நிமிர்ந்து நோக்கினார்.

"எஸ் ?"

பர்ஸைத் தொலைத்தவர் இன்னும்கூட ஓரிரண்டு விவரங்களைச் சேர்த்துத் தம் கேஸைச் சொன்னார்.

அப்பொழுது முத்து ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தான். அவன் அப்படி நிற்பதற்குக் காரணம் இருந்தது.

ராசம்மா அங்கிருந்தாள். அவளருகில் ஒரு வயதான போலீஸ்காரர். சர்தார்ஜி. இன்னொரு பக்கத்தில் ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க, தொந்தியும் தொப்பையுமான ஒரு பஞ்சாபி. அவன் பக்கத்தில் ஒரு போலீஸ்காரர். என்ன விவகாரம்? முத்துவுக்குத் தலையைச் சுற்றியது.

ராசம்மா குனிந்து கொண்டிருந்தவள், பலர் உள்ளே வரக் கண்டதும் நிமிர்ந்து பார்த்தாள். முத்துவை ஏன் இழுத்து வருகிறார்கள் ?....

சப் இன்ஸ்பெக்டர் கேட்டார்: "என்ன இது? பர்ஸ்தான் திரும்பி வந்து விட்டதே, இவனை என்ன செய்ய வேண்டுமென்கிறீர்கள் ?" அவர் குரலில் அலுப்புத் தெரிந்தது.

"முதலில் தெரியாதது போல் நடித்து விட்டுப் பிறகுதான் நான் கைப் பற்றிய போது ஒப்புக் கொண்டான். இது திருட்டுத் தனம் இல்லையா ?"

"என்னப்பா, என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார் சப் - இன்ஸ்பெக்டர், ஹிந்தியில்.

"நான் மறுக்கவில்லை. என் பர்ஸ் காணாமல் போய் விட்டது. கன்னாட் பிளேஸில். அதில் ஒரு ரூபாய்தான் இருந்தது. அந்த ஒரு ரூபாய், இவருடைய முப்பது ரூபாய்க்குச் சமானம். என் துரதிர்ஷ்டம் என் பர்ஸைத் திருடியவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவர் அதிர்ஷ்டம் இவர் பர்ஸைத் தரையிலிருந்து எடுத்தவனை இவர் கண்டு பிடித்து விட்டார். இதைத் தவிர நான் வேறு என்ன சொல்வது?" என்றான் முத்து.

சப் இன்ஸ்பெக்டர் சிரித்தார். "ஃபைன் லாஜிக்...." என்றார் அவர்.

"நீங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் இதற்கு மேலே என்னால் புகார் பண்ண முடியும். நான் 'ஹோம் மினிஸ்டிரி'யில் இருக்கிறேன்....." என்றார் பணத்தைத் தொலைத்தவர்.

"நீங்கள் ராஷ்டிரபதியிடமே சென்று புகார் செய்யுங்கள். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. இவன் பர்ஸை எடுத்தது உண்மை என்கிறேன். உங்களுக்கும் அது திரும்பி வந்து விட்டது. இதில் கேஸ் என்ன இருக்கிறது ?"

"பொய் சொன்னான்."

"நாம் எல்லாரும் பொய் சொல்லாதவர்களா?"

"இங்கு நான் எடுத்ததைப் பார்த்ததாகச் சொல்ல வந்திருப்பவர்கள் அனைவரும் பொய்ச் சாட்சி சொல்ல வந்திருக்கிறார்கள். நான் எடுத்ததை உண்மையாகவே பார்த்தவர் இங்கு வரவில்லை...." என்றான் முத்து.

"க்யா பாத் ஹை ?" என்று ஓர் இளைஞன் முத்துவின் மீது பாய்ந்தான். ஒரு போலீஸ்காரர் அவனைத் தடுத்து நிறுத்தி விட்டார்.

"கெட் தி ஹெல் அவுட் ஆஃப் ஹியர்.... ஆல் ஆஃப் யூ.... நான் இவனை விசாரிக்கிறேன்...." என்று தம் இருப்பிடத்திலிருந்து எழுந்திருந்து கத்தினார் சப் இன்ஸ்பெக்டர்.

எல்லாரும் நழுவி விட்டார்கள்.

முத்து மட்டும் நின்று கொண்டிருந்தான். சப் இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் பேசாமல் இருந்தார்.

"உனக்குத் தமிழ்தானே தாய் பாஷை?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம்....!"

"இந்தப் பெண்ணுக்குத் தமிழைத் தவிர வேறு பாஷை தெரியாதாம். இது ஒரு விபசார கேஸ்.... அந்த லாலாவையும் இவளையும் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பெண்ணைக் கொஞ்சம் விசாரித்துச் சொல்" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

ராசம்மாவுக்குத் தமிழைத் தவிர வேறு பாஷை தெரியாதா ? ஏன் பொய் சொல்லுகிறாள்? அவளுக்கு ஹிந்தி நன்றாகப் பேசத் தெரியும். 'விபசாரக் கேஸ்!' ராமசாமி சொன்னது உண்மைதானா ?

ராசம்மா குனிந்து கொண்டிருந்தாள். அவள் கண்கள் ஈரமாகி இருந்தன.

"ஏதானும் சொல்லணுமா?" என்று கேட்டான் முத்து. அவன் குரல் வறட்சியாக இருந்தது.

அவள் அவனை நிமிர்ந்து நோக்கினாள். பிறகு மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

"நீ ஏன் இரண்டு நாளா வரல்லே?"

"அதைப் பத்தி அப்புறம் பேசிக்கலாம்" என்றான் முத்து.

"நீ வரல்லேங்கிறதனாலேதான் நான் இங்கே வந்து தலை குனிஞ்சு நிக்கும்படியா இருக்கு...."

"என்ன சொல்றே நீ ?"

"லாலாஜி நேத்து வந்து ரகளை பண்ணிட்டான். அவனுக்குக் கொடுக்க வேண்டிய இரண்டு நூறு ரூபாயை உடனே கீழே வைச்சாகணும்னான். உன்னைத் தேடித் தேடிப் பார்த்தேன்.... நீ இனிமே வரமாட்டேன்னான் ராமசாமி. கெட்ட பெயரு சுமத்திட்டு, புண்ணு வந்த கண்ணிலே குத்திப் பார்க்கிற மாதிரி இருக்காங்களே நம்ம ஜனம்? இவங்களை எதுக்காக நம்ம ஜனம்னு சொல்லணும்? யாரோ லாலாகிட்டே போய் நான் யாரோடேயோ ஓடப் போறேன்னு சொல்லியிருக்காங்க. பணத்தை வைச்சாத்தான் ஆச்சுதுன்னு ஒரேயடியாக் கூப்பாடு போட்டான். எனக்கு வேறே வழி தோணலே" என்றாள் ராசம்மா.

அவள் புடவைத் தலைப்பு நனைந்தது.

சப் இன்ஸ்பெக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"யார் இந்தப் பெண் ?" என்று கேட்டார் அவர்.

"அவள் என் மனைவி!" என்றான் முத்து நிதானமாக.

ராசம்மா அவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள்.


பொன்னாங்கண்ணித் தைலம்
அரைக் கீரை விதைத் தைலம்
சந்தனாதித் தைலம்
K·T·R
கோபுர மார்க் பன்னீர்
K.T.R. வாசனாதி திரவியசாலை
விஜயபுரம் ✦ திருவாரூர் ✦ தமிழ்நாடு

சென்னை இராஜ்ய கூட்டுறவு வங்கி லிமிடெட்

271, அங்கப்ப நாயக் தெரு, சென்னை-1

தந்தி விலாசம் : ''அர்பாங்க்''	தொலைபேசி எண் :
தபால் பெட்டி எண் : 226	22766, 22767, 24589

எங்கள் வங்கியில் நீங்கள் போடும் டெபாசிட்டுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும் விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

சேவிங்ஸ் டிபாசிட் : ரூ. 1,000 அதற்கு மேலும் (வருடத்திற்கு)

15 நாட்கள் முதல்	45 நாட்கள் வரை	1.25%
46 நாட்கள் முதல்	90 நாட்கள் வரை	2.50%

பிக்செட் டிபாசிட் : ரூ. 1,00 அதற்கு மேலும்

91 நாட்களும்	அதற்கு மேலும்	6 மாதங்களுக்குள்ளாக	4.50%
6 மாதங்களும்	..	12 ..	5.00%
12 மாதங்களும்	..	2 வருடங்களுக்குள்ளாக	5.75%
2 வருடங்களும்	..	3 ..	6 %
3 வருடங்களும்	..	5 ..	6.25%
5 வருடங்களும்	அதற்கு மேலும்		6.75%

ரெக்கரிங் டிபாசிட் : தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் :

மாதத் தவணை	12	24	36	48	60	72	84
ரூ. 5ம் அதன் மடங்குகளும்	62	128	193.50	273	355	442	535

இதர விபரங்களை வங்கியின் கீழ்க்கண்ட அலுவலகங்களிலிருந்தும் பெறலாம்

கிளை அலுவலகம் பெயர்	முகவரி	தொலைபேசி எண் :
மயிலாப்பூர் :	32-A, லஸ் சர்ச் ரோடு, சென்னை-4	71262
எழும்பூர் :	68, எழும்பூர் ஹைரோடு, சென்னை-8	86510
திருவல்லிக்கேணி :	111, பெரிய தெரு, சென்னை-5	84692
தியாகராயநகர் :	19, பாண்டி பசார், சென்னை-17	442852
காந்தி நகர் :	78, இரண்டாவது மெயின் ரோடு, சென்னை-20	71132
ஷெனாய் நகர் :	8/1, செங்குந்த முதலித் தெரு, சென்னை-30	64834
கெல்லீஸ் :	2, மாதவாக்கம் டாங்க் ரோடு, சென்னை-10	64105
மயிலாப்பூர் டாங்க் :	10, தெற்கு மாட வீதி, சென்னை-4	73158
சாந்தோம் :	79, சாந்தோம் ஹைரோடு, சென்னை-28	74300
கிரீன்வேஸ் ரோடு :	14, கேசவபெருமாள்புரம், சென்னை-28	74215
மவுண்ட் ரோடு :	109, டி.-ஈ. மவுண்ட் ரோடு, சென்னை-18 (காமதேனு கூட்டுறவு பேரங்காடி)	440292
சாஸ்திரி நகர் :	பி. 10, சாஸ்திரி நகர், சென்னை-20	76418

ஆர். கனகசபை, எம். எல். ஏ.
தலைவர்

டி. வர்த்தமானன்
காரியதரிசி

ரயில் நின்றவுடன்...

அபர்ஹூ

10-4-69 முதல்
16-4-69 வரை
ரயில்வே வாரம்



இப்பொழுதெல்லாம் புகைவண்டித் தொடர்களில் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்துவதென்பது அன்றாட நடைமுறையாகி விட்டது. மிகப் பெரும்பாலான ரயில் நிறுத்தப் போராட்டங்களை நடத்துவது மாணவர்கள்தான். ரயில் வண்டி அரை மணி நேரம் தாமதமாக வருகிறதா? பிடித்து இழு சங்கிலியை! மொழிப் போராட்டமா? ஆத்திரத்தை யெல்லாம் ரயில் வண்டியிடம் காட்டு!

சரி, என்ன காரணத்தாலோ, அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்துவிடுகிறார்கள். உடனே என்ன நேர்கிறது? வண்டி ஏன் நின்றுவிடுகிறது?

ரயில் பெட்டிகள் ஒன்றோடு ஒன்றுடனும் இஞ்சினுடனும் கைப்பிடிப் பருமனான நீண்ட குழாய் இணைக்கப்பட்டிருக்கின்றது. பெட்டிகளுடன் இஞ்சினை இணைத்ததும், அந்தக் குழாயையும் இணைப்பார்கள். உரிய விசையைத் தட்டிவிட்டதும் குழாயிலுள்ள காற்று முழுதும் உறிஞ்சப்பட்டு, வெற்றிடமாகி விடுகிறது. இதனால் பெட்டிகளுக்கிடையே இணைப்புச் சக்தி பெரிதும் அதிகமாகும் என்பது அடிப்படை விஞ்ஞானம். பெட்டிகளை இணைக்கும் இரும்பு இணைப்புகள் உடைந்து போனாலும் பெட்டிகள் சிறிது தூரம் சென்றதும் தாமாகவே நின்றுவிடுவது இந்தச் சாதனத்தால் சாத்தியமாகிறது. அதாவது, பெட்டிகள் தனியே கழன்றதும் வெற்றிடக் குழாய் இணைப்பும் பிரிந்து, அங்கே காற்றுப் புகுந்துவிடுவதால் பெட்டியின் பிரேக்குகள் தாமாகவே இயங்கிச் சக்கரங்களை அழுத்தி நிறுத்திவிடுகின்றன. சங்கிலியைப் பிடித்து இழுக்கும்போதும் இதே விளைவுதான் ஏற்படுகிறது. வெற்றிடக் குழாயில் காற்று அனுமதிக்கப்படுவதால் ரயிலின் வேகம் திடீரென்று கட்டுப்படுத்தப் படுகிறது. உடனே அந்தச் சமிக்ஞையைப் புரிந்து கொண்டு, 'கூ...கூ...' என்று ஒலித்துக் கொண்டே வண்டியை நிறுத்திவிடுகிறார் டிரைவர். பின்னர், கார்டு இறங்கி வந்து வண்டி நின்றதற்கான காரணத்தைத் துப்புத் துலக்குவார். 'போதிய காரணமின்றியில் சங்கிலியை உபயோகிப்பவருக்கு ரூ. 250 வரை அபராதமோ, மூன்று மாதச் சிறைவாசமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.'

ஆனால் நூறு மாணவர்கள் சேர்ந்து கொண்டு ஒரு போராட்ட வேகத்தில் வண்டியை நிறுத்தினால்...?

கோடிகாடு என்னுமிடத்திலுள்ள குப்பகர்ளு கல்லூரி மாணவர்களுக்கு ஒரே ஆத்திரம். கல்லூரி முடிந்ததும் அவர்கள் வீடு திரும்புவதற்கு உடனடியாக ரயில் வண்டி எதும் இல்லை. ஏறக்குறைய ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்ததாம். 'ரயில் நேரத்தை மாற்றுவதற்கில்லை' என்று ரயில்வே நிர்வாகம் அவர்கள் கோரிக்கைக்குப் பதில் எழுதிவிட்டதாம்! அதனால் மாணவர்களுக்கு ஆத்திரம் வராதா என்ன?

"இவனுகளுக்கு ஒரு பாடம் கத்துக் கொடுத்துட்டுத்தான் மத்த வேலை..." என்றான், கண்ணப்பன்.

"யெஸ்... ஓ...கே!" என்றான், பரமசிவம்.

"மை டியர் பிரதர், வொட் டு டூ?" என்று வாய் புகையக் கேட்டான் பீட்டர்.

"ஐ நோ... நாளைக்குச் சாயங்காலம் நாம் போகிற வண்டி கோடி காட்டை விட்டுப் புறப்பட்ட அந்த நிமிஷத்துக்கெல்லாம் லபக்! செயினைப் பிடிச்சு இழுத்து, நிறுத்திப்பிடுவோம். அப்பத்தான் அவங்களுக்குப் புத்தி வரும்!... என்ன சொல்றீங்க?"

"செய்துப்புடுவோம்!" என்று நூறு குரல்கள் ஏகோபித்து ஒலித்தன.

மறுநாள்.

ஐந்து, பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்ட பாசஞ்சர் வண்டி, நடு வழியில், ஐந்து இருபதுக்கு நின்றுவிட்டது. கார்டு கந்தசாமி இறங்கினார். "என்னப்பா நிறுத்திப்பிட்டீங்க?"

"இது எங்கள் போராட்டம்!..."

"ரயில்வே நிர்வாகத்துக்குப் பாடம் கற்பிக்கிறோம்!"

கந்தசாமி, தம் வசமிருந்த தொலைபேசிச் சாதனங்களைப் பொருத்தி கண்ட்ரோல் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டார்.

"கோரிக்கையைக் கவனிக்கிறோம் என்று சொல்லிப் பாருங்களேன்" என்று நூறு





மைல்களுக்கு அப்பால், அலுவலகச் சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த அதிகாரி, கந்தசாமிக்கு ஆலோசனை வழங்குகிறார்.

''ஒன்றும் பலிக்கவில்லை, ஸார்!'' என்று கார்டு புலம்புகிறார்.

அலுவலகத்தில் ஏகப் பரபரப்பு. நாளைய தினம் செய்தித் தாளில் இந்த விஷயம் பிரசுரமாகுமே? மேலிடத்திலிருந்து கேள்வி கேட்பார்களே? நிஜமாகவே மாணவர்களிடமிருந்து கோரிக்கை வந்ததா? அது ஏன் நிராகரிக்கப்பட்டது?...

...அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். உடனே ஆகவேண்டியது என்ன?

'டிரிங்... டிரிங்... டிரிங்...'

—''ஹலோ!... கலெக்டர் ஆபீஸ்....?''

''குட்மார்னிங்!... இது, ரயில்வே கண்ட்ரோல் ஆபீஸ். கலெக்டரிடம் ஒரு முக்கியமான தகவலை உடனே தெரிவிக்கவேண்டும்?''

''சொல்லுங்கள், குறித்துக்கொள்கிறேன்.''

... ரயில்வே டிவிஷனல் சூப்பிரண்டிடமிருந்து மாவட்டக் கலெக்டர், மாவட்டப் போலீஸ் அதிகாரி ஆகியவர்களுக்கு:

'கொடிகாடு ஸ்டேஷனிலிருந்து ஐந்து பன்னிரண்டுக்குப் புறப்பட்ட நெ. 009 பாசஞ்சர் வண்டியைக் கும்பகோண கல்லூரி மாணவர்கள் நிறுத்தியிருக்கிறார்கள். இப்போது மணி ஆறேகால். வண்டி இன்னும் நடு செக்ஷனிலேயே நின்று கொண்டிருப்பதால், அந்தப் பாதையில் ஓடும் நெ. 010, 011 வண்டிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பிரயாணிகள் அவதிப்படுகிறார்கள். உடனே கவனிக்கவும்.'

''அவ்வளவுதானே? கலெக்டரிடம் தெரிவித்துவிடுகிறேன்... ஆனால், பாருங்கள் சார்! பையன்களே இன்னும் கொஞ்ச நேரத்தில் வண்டி போக அனுமதித்து விடுவார்கள்!''


''எங்களுக்குத் தெரியும்!... ஆனால் எங்கள் மேலிடத்திலிருந்து நாளைக்கு ஒரு கேள்வி கேட்கக்கூடாது, பாருங்க! — அதற்காகத்தான் இதைத் தெரிவிக்கிறோம்!...கலெக்டரிடம் சொன்னதும் அவர் ஆர்.டி.ஓ.வை அனுப்பி வைப்பார். டி. எஸ்.பி. பத்து போலீஸ்காரருடன் ஓர் இன்ஸ்பெக்டரை ஸ்தலத்துக்கு அனுப்புவார். இவர்களைக் கண்டதும் மாணவர்களுக்கு இன்னும் ருசி பிறந்துவிடும்! வாழ்க, வீழ்க கூச்சல்கள்! இவர்கள் தாஜாவுக்கெல்லாம் மசியாமல், அவர்களுக்கே அலுத்துப் போனதும் ''இன்னிக்குப் போதும் பிரதர்'' என்று சொல்லி வண்டியில் ஏறி உட்கார்ந்து விடுவார்கள்!...''

''கரெக்ட், சார்! நமக்குத் தெரிகிறது. இருந்தாலும் ஆபீஸ் நடைமுறையை அனுசரிக்க வேண்டியிருக்கிறதே!...போலீஸ் சூப்பரிண்டுக்குத் தகவல் கொடுத்துவிட்டீர்களா?''

''ஓ. எஸ். இன்னொரு டெலிபோனில் இன்னொருவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ரைட்டோ...''

'தாங்க் யூ.'

ரயில் வண்டியை மாணவர்கள் நிறுத்துவது என்ற 'நல்ல பழக்கம்' ஆரம்பமான நாட்களில் வண்டிகளின் கார்டுகள் மிகவும் தொல்லைக்குள்ளானார்கள். மாணவர்களுடன் பேசிச் சமாளிக்க வேண்டிய கடமை ஒரு புறம், அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய




பொறுப்பு ஒரு பக்கம்; மாணவர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே தூது சென்று, ராசி பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஒருபுறம்!

ஆனால் ரயில் நிற்பது என்பது அன்றாட நடைமுறையானதும் கார்டுகள் ரொம்பவும் மாறிவிட்டார்கள்.

நெ. 040 வண்டியின் கார்டு கிருஷ்ணசாமி. ரயில் கூத்தங்குடி ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு இரண்டு கிலோமீட்டர் சென்றதும் நிறுத்தப்பட்டது. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் நிறுத்திவிட்டார்கள். காரணம்? தயவுசெய்து அதை மட்டும் கேட்காதீர்கள்.

மாணவர்கள் ரயில்வண்டியை நிறுத்துவதற்குக் காரணம் வேண்டும் என்று எங்கே ஐயா எழுதி வைத்திருக்கிறது? அவர்களுக்கு அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுக்க வேண்டும்போல் இருந்தது; இழுத்தார்கள். அவ்வளவுதான்!

கார்டு கிருஷ்ணசாமி தம் 'வானி'லிருந்து இறங்கினார். எவ்விதப் பரபரப்பும் இல்லாமல் நிழல் விழுந்திருந்த பக்கத்தில் ஒரு மேல் துணை



டைப் பரப்பினார். சீட்டுக் கட்டை எடுத்துக் கலைத்தபடியே, 'யாரையா வரீங்க... மூணு பேர் வாங்க... ஓர் ஆட்டம் போடுவோம்!' என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார். இரண்டு பெட்டிகளுக்கு அப்பால் கூச்சல் போட்டுக் கொண்டிருந்த மாணவர்களில் சிலர் அருகே வந்தார்கள். 'என்ன ஸார், இது? நீங்க பாட்டுக்குச் சீட்டு விளையாட ஆரம்பிச்சிட்டீங்க? எங்க போராட்டத்தைப் பத்தி உங்க ஆபீசுக்குச் சொல்ல வேண்டாமா?'

'தம்பி!... நீங்களெல்லாம் சேர்ந்து முடிவு பண்ணி எப்ப வண்டியை விடச் சொல்கிறீர்களோ, அப்பக் கிளப்புகிறேன். அதுவரையில் நான் நிம்மதியாச் சீட்டாடப் போறேன். போ, போ, பிரதர்... கூச்சல் போடக் கூப்பிடறாங்க, பாரு!...'

தம்பி போய் மற்றவர்களிடம் என்ன சொல்லிற்றோ தெரியவில்லை. ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு மாணவர் கோஷ்டி கிருஷ்ணசாமியிடம் வந்தது. ''வாங்க சார், போகலாம்!...''

மேல் துண்டை உதறிக் கொண்டு எழுந்தார். பிழைக்கத் தெரிந்த காட்டு!

நெ. 045 வண்டி நடு செக்ஷனில் நிறுத்தப்பட்டது. வண்டியின் கார்டு ஜெயராமன், தம் இடத்தில் உட்கார்ந்தபடியே ஒரு நாவலை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். ஒரு மணி நேரம் ஆனதும் சில மாணவர்கள் அவரிடம் வந்து, ''வண்டியைக் கிளப்பலாம், சார்!'' என்றார்கள்.

''நான், மாட்டேன்!...''

''ஏன், சார்?''

''ஆமாம். ஒரு கால் பர்லாங் போனதும் மறுபடியும் நிறுத்திடுவீங்க. அங்கே அரை மணி டிலே. அப்புறம் இன்னொரு கால் பர்லாங்... அட, போங்கப்பா. வண்டியை என் இஷ்டத்துக்குத்தான் கிளப்புவேன்... நாவலில் இன்னும் எண்பத்தோரு பக்கம் பாக்கியிருக்கு!...''

மாணவர்களுக்கு இக்கட்டாகி விட்டது. 'இனிமேல் இந்த வண்டியை நிறுத்தவில்லை' என்று உறுதி கூறிய பின்னர்தான் ஜெயராமன் பச்சைக் கொடியைக் காட்டினார்.

அன்றைய தினம் கல்லூரியில் செலக்ஷன் தேர்வு. அதனால் என்ன? ஒரு பத்து நிமிஷம் ரயிலை நிறுத்துவதால் ஒன்றும் குடிமுழுகி விடாது. எப்படியும் அரை மணி முன்னதாகவே கல்லூரிக்குப் போய்விடலாம்....

நெ. 013 வண்டி மணி ஒன்பது பதினெட்டுக்கு இரண்டு ஸ்டேஷன்களுக்கு இடையே நின்றுவிட்டது. ஒன்பதரை மணிக்கு மாணவர்கள் கார்டு பெட்டியருகே வந்து, 'ரைட், ஸார்!' என்றார்கள். கார்டு அற்புதசாமி கொடி காட்டினார். இஞ்சின் கூவிற்று. ஆனால் வண்டிதான் நகரவில்லை!... அற்புதசாமி டிரைவரிடம் ஓடினார். 'வாக்குவம் டிராப் ஆயிடுச்சு ஸார்' என்று தெரிவித்தார் டிரைவர். கார்டும் டிரைவருமாய் ஒவ்வொரு பெட்டியிலும் ஏறி இறங்கினார்கள். குழாய்களைப் பரிசோதித்தார்கள்.

மணி ஆகிக் கொண்டிருந்தது.

மாணவர்களிடை பயம் பிடித்துக்கொண்டது. தேர்வுக்குத் தாமதமாகப் போனால்? வண்டி லேட் என்று சொல்லித் தப்பிக்க முடியுமா?... ஐயோ!...

கடைசியாகப் பத்தேகால் மணிக்குத்தான் வண்டி புறப்படத் தயாராயிற்று.

வண்டி போய்ச் சேர வேண்டிய ஸ்டேஷனை அடைந்ததும், அற்புதசாமி டிரைவரிடம் வந்து ''ஏன் சார், அந்த ஊர்லே வாக்குவம் டிராப்?'' என்று கேட்டார்.

''டிராப்பாவது, மண்ணாவது?... நான்தான் அப்படிப் பண்ணினேன். எல்லாப் பசங்களும் எக்ஸாமினேஷனுக்கு லேட்டாகத்தான் போகட்டுமே! இவங்களுக்குத்தான் செய்யத் தெரியும்; நமக்குத் தெரியாதோ?''

நெ. 015 வண்டி இடைவழியில் அரை மணி நேரம் நிறுத்தப்பட்டதால் அடுத்த ஜங்ஷனுக்குத் தாமதமாகப் போயிற்று. அந்த ஜங்ஷனிலிருந்து கிழக்கேயும் மேற்கேயும் போக வேண்டிய வண்டிகள் நெ. 015க்காகக் காத்திராமல் உரிய காலத்தில் புறப்பட்டுச் சென்று விட்டன.

மேற்கே போகும் வண்டியில் செல்ல வேண்டிய சுந்தரமூர்த்தி தனியாய்த் தவித்தான். திருச்சிராப்பள்ளியில் நேர்முகத் தேர்வு அவனுக்கு. நாலைந்து ஆண்டுகளாய் என்னென்னவோ வேலைகளைத் தாற்காலிகமாய்ச் செய்து கொண்டிருந்தான். இப்போதுதான் நிரந்தர உத்தியோகம் கிடைக்கும் போல் இருந்தது. இண்டர்வியூவுக்கு உரிய சமயத்தில் போய்ச் சேராவிட்டால் வேலை இவனுக்காகக் காத்திருக்குமா?...

சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த கல்யாணக் கோஷ்டியின் பேச்சு செவியில் விழுந்தது. ''பொடி நடையா நடந்தால் முகூர்த்த நேரத்துக்காவது குளித்துவிட்டு போய்ச் சேரலாம்...''

அதற்கு அடுத்தாற்போல் மூன்று குழந்தைகளும் அவைகளின் பெற்றோர்களும், அப்பால் ஒரு வயோதிகத் தாயும் இளம் பெண்ணும்... அதைத் தாண்டி, நிமிஷங்களை ரூபாயால் அளவிடும் வியாபாரி.... அவரை அடுத்து உயிரைக் காக்கும் டாக்டர்... இன்னும் எத்தனை எத்தனை எத்தனையோ பேர்கள்! ஜங்ஷனில் மெயில் லைன் வண்டி கிடைக்காததால் தவித்துக் கொண்டிருப்பவர்கள்!...

''யுவர் அடென்ஷன், ப்ளீஸ்...''

''ஏதோ அறிவிப்புப் போல் இருக்கிறதே! பிள்ளையாரே, 'அடுத்த வண்டி சரியான நேரத்துக்கு வந்து கொண்டிருக்கிறது' என்ற அறிவிப்பாக இருக்கும்படி அருள்செய்யேன்!''

'நெ. 0173 பாஸெஞ்சர் வண்டி கூத்தாபுரம் ஸ்டேஷனுக்கருகில் மாணவர்களால் நிறுத்தப்பட்டிருப்பதால் கால தாமதமாக வரும் என்று அறிவிக்கப்படுகிறது...'

சுந்தரமூர்த்தியும் அப்பாசாமியும்—ஆமாம், இன்னும் பல மூர்த்திகளும் சாமிகளும்—'ஐயோ!' என்று அலறுகிறார்கள்.

இதோ, ரயில்வே டிவிஷனல் சூப்பிரண்டிடமிருந்து மாவட்டக் கலெக்டருக்கும் போலீஸ் அதிகாரிக்கும் தகவல் போய்க் கொண்டிருக்கிறது! ரயில்வே நிர்வாகம் தன் கடமையைச் செய்யத் தவறியதில்லை!



007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா
26
சென்னை. போட்டதில் கிழிந்த தன் சட்டையை மேலும் கிழித்து மயங்கிக் கிடந்த ராஜுவின் கை கால்களைக் கட்டிப் போட்டான் பாலு.
பாலு இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்ட பார்த்தன் சற்றைக்கெல்லாம் அவனருகில் ஜீப்புடன் இருந்தார்.
அந்தப் பக்கமாகச் சென்ற ஒரு லாரியில்
உன்னைப் பார்த்த பிறகுதான் எனக்கு உயிர் வந்தது. இல்லாது போனால் உன் அம்மாவுக்கு நான் என்ன பதில் சொல்வது?
ஹலோ! போலீஸ்? இது அவசரம்! சென்னையிலிருந்து எஸ்.பி. பார்த்தன் பையன் வந்திருக்கிறேன்....
டேய் பாலு! ரொம்ப அடி பட்டிருக்கா?
பலமான காயம் ஏதுமில்லாமல் தப்பிச்சுட்டேன். வாங்க! சீக்கிரம் ராஜூ இருக்குமிடம் போகலாம்!



ஆ! சீனன் இவன்!
சில நாட்கள் கழித்து......
பாபு! உனக்குப் பரிசு உண்டு. சர்க்கார் ரூ 5000 தருகிறார்கள்.



அது எனக்கு வேண்டாம் சார்! லைசென்ஸ் இல்லாமல் கார் ஓட்டினது, டிக்கெட் இல்லாமல் விமானப் பயணம் செய்தது, லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி பிடித்தது இதெல்லாம் அபராதமாக அதைச் சர்க்காருக்கே கொடுத்து விடுங்கள்!
ராஜு மனசு தங்கம்!
ஆனால் உன் பேரில் வழக்கு ஏதும் இல்லையே ராஜு! அபராதம் கட்ட முடியாதே!
அப்படியானால் அதைப் பிரதமர் நிவாரண நிதிக்குக் கொடுத்து விடுகிறேன். கஷ்ட நிலையில் உள்ள மக்களுக்கு உதவட்டும் பணம்.
ராஜு! உன்னை நினைக்க நினைக்க எனக்குப் பெருமையாக இருக்கு!
கிடக்கிறது தள்ளு! ஒரு ஜாலி ரைட் வரையா, மோட்டார் சைக்கிளில்?
அந்த மோட்டார் சைக்கிளை நான் இனி ஏன் தொடப் போறேன்? அப்பா புது மோட்டார் சைக்கிள் எனக்கு வாங்கித் தந்திருக்கிறார். பார்த்தேன் எனக்கு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்திருக்கிறார்!
அப்படியானால் ஓ.கே! நான் தயார்!
ஐயய்யோ! மறுபடியும் லைசென்ஸ் இல்லாமல்.... அன்னையின் அனுமதி இல்லாமல்...
டேய், ஜாக்கிரதையாகப் போடா!
டாட்டா!
நான் யார் தெரியுமில்லே! 007! இதை மறக்காதீங்க!
முற்றும்.

இண்டியனுயில்

நம்முடையது





இண்டியனுயில், மணிக்கணக்காக ஸ்டவ்வுடன் மாரடிக்க வேண்டிய தொல்லையிலிருந்து எனக்கு விடுதலையளித்தது. இப்பொழுது எனக்கு நகர வாழ்க்கையின் பொழுதுபோக்குகளை அனுபவித்து மகிழ்வதற்கு வேண்டிய நேரம் கிடைக்கிறது. இண்டியனுயில் அளிக்கும் பெட்ரோலியம் வாயுவான இண்டேன் இருப்பதனால் சமையல் வேலை சுத்தமாகவும், சுலபமாகவும் வேகமாகவும் முடிந்து விடுகிறது. பாத்திரங்கள் கரிபிடிப்பதில்லை.

இண்டியனுயில் என்னுடைய வீட்டு வேலையையும் அம்மாவின் வீட்டுக் காரியங்களையும் சுலபமாக ஆக்கிவிட்டது. விளக்கேற்றவும், சமைக்கவும், இண்டியனுயில் தரும் ஜோதி மண்ணெண்ணெய் மிகவும் வசதியாக இருக்கிறது. என் கிராமத்திற்கு மண்ணெண்ணெய் மாட்டு வண்டியில வருகிறது. டாங்க் வாகனங்கள், டாங்க் டிரக்குகள், 3 சக்கர வண்டிகள், ஒட்டகம் மற்றும் கழுதை வண்டிகள், கை வண்டிகள் போன்ற எல்லா விதமான போக்குவரத்துச் சாதனங்கள் மூலமாகவும் மண்ணெண்ணெய் எல்லா கிராமங்களையும் தவறாமல் சென்றடைய இண்டியனுயில் வழி செய்துள்ளது.

இண்டியனுயில் இவ்வளவும் செய்ய முடிவது ஏனென்றால் அது நம்மைச் சேர்ந்தது.

INDIANOIL

இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்

IOC 7218.F.TAM



பஞ்சாப் படுகொலை!

பஞ்சாப் கவர்னர் ஓட்வியர். ஓ'டயர் சுட்டது சரி என்று சர்டிபிகேட் கொடுத்தவர்.

பிரிட்டிஷாரோடு சமரஸமாகப் பேசியே நாட்டுக்குச் சுதந்திரம் பெற்று விடலாம் என்று நினைத்த தலைவர்கள் பலர் இருந்தனர். ஏன்! காந்திஜியே பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைத்திருந்தவர்தான். இவர்கள் அவ்வளவு பேர்களையும் திடீரென்று உலுக்கி எடுத்தது ஒரு சம்பவம். அது தான் பஞ்சாப் படுகொலை. இது நடந்து இந்த ஏப்ரல் 13ம் நாள் ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன.

1919 ஏப்ரல் 13ந் தேதி மாலை நான்கு மணி. அமிருதசரஸில் ஜாலியன் வாலாபாக் என்ற மைதானத்தில் 20,000 பேர் கூடியிருக்கின்றனர். காந்திஜியைக் கைது செய்ததைக் கண்டிக்கவே இந்தக் கூட்டம். இந்த மாபெரும் மைதானம் ஒரே வாசலைத்தான் கொண்டது. ஜெனரல் ஓ'டயர் என்ற ராணுவ அதிகாரி நூறு சிப்பாய்களை உள்ளே இட்டுச் சென்று மக்களைச் சுட்டான். இதனால் நானூறு பேருக்கு மேல் மரணம் அடைந்தனர். சுமார் இரண்டாயிரம் பேர் படுகாயமடைந்தனர். ''துப்பாக்கிகளில் தோட்டாக்கள் தீர்ந்து விட்டன. இல்லையேல் ஜனங்களை இன்னும் சுட்டு வீழ்த்தியிருப்பேன்'' என்று கொக்கரித்தான் ஓ'டயர்.


அப்போது பஞ்சாப் கவர்னராக இருந்த மைக்கேல் ஓட்வியர், ஓ'டயரைப் பாராட்டி, ''நீங்கள் செய்தது மிகவும் சரி'' என்று தந்தி அனுப்பினார்.

இவ்வளவு மிருகத்தனமாகத் தாங்கள் நடந்து கொண்டதனால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிந்துவிடும் என்று வெள்ளையர்களே பயந்தார்கள். 1919ல் காங்கிரஸ் மகா சபை அமிருதசரஸில் நடைபெறவிருந்ததைத் தடுக்க கவர்னர் ஓட்வியர் உத்தரவு பிறப்பித்தார். பிரபல காங்கிரஸ் தலைவர்களான டாக்டர் கிச்சிலு, சத்தியபால் இருவரையும் போன இடம் தெரியாமல் அப்புறப் படுத்த உத்தரவிடப்பட்டது. இந்தச் சமயத்தில் காந்திஜி கைது செய்யப்பட்டார் என்ற செய்தியும் வந்தது. மக்கள் கொதித்து எழுந்தனர். அடக்குமுறை தாண்டவமாடியது.

இந்தச் செய்திகள் எல்லாம் வெளி நாடுகளில் ஜூலை மாதம் வரையில் தெரியவேயில்லை. டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை ஒன்றைத் தவிர வெள்ளைக்காரர்களால் நடத்தப்பட்ட எல்லாப் பத்திரிகைகளுமே இந்த ஜாலியன்வாலா பாக் கொடுமையைக் கண்டிக்கவில்லை.

வித்தல்பாய் படேலும், மாதவராவும், என். ஸி. கெல்லரும் இக்கொடுமையைப் பிரிட்டிஷாருக்கு எடுத்துரைத்து நியாயம் கேட்க லண்டனுக்குப் பயணமாயினர்.





THE BOMBAY CHRONICLE, FRIDAY, APRIL 11, 1919.

MR. GANDHI ARRESTED!

ORDER NOT TO ENTER THE PUNJAB OR DELHI!

TAKEN TO UNKNOWN DESTINATION!

HIS MESSAGE TO HIS COUNTRYMEN.

SERIOUS DISTURBANCES REPORTED IN LAHORE, AMRITSAR AND AHMEDABAD.

தீனபந்து ஆண்ட்ரூஸ் பஞ்சாப் சென்று நிலைமையை நேரில் தெரிந்து கொள்ள விரும்பினார். ஆனால் வழியில் கைது செய்யப்பட்டார். பம்பாய் கிரானிகள் பத்திரிகாசிரியர் பி. ஜி. ஹார்னிமன் இதைக் கண்டித்து எழுதிய குற்றத்துக்காகத் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டார்.

இந்த அக்கிரமங்களைக் கண்டித்து வைஸ்ராய் நிர்வாக சபையிலிருந்து சர் ஸி. சங்கரன் நாயர் ராஜிநாமா செய்தார். கவியரசர் ரவீந்திரநாத தாகூர் பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த 'சர்' கௌரவப் பட்டங்களை உதறி யெறிந்தார். மோதிலால் நேரு தம் மிதவாதக் கொள்கையை விட்டு விட்டுப் போராட்டத்தில் குதித்தார்.

காங்கிரஸ் ஒரு தனி விசாரணைக் கமிட்டியை நியமித்தது. இதில் மோதிலால், மாளவியா, ஆண்ட்ரூஸ், புருஷோத்தம்தாஸ் தாண்டன், ஜவாஹர், காந்திஜி ஆகியவர்கள் இடம் பெற்றனர். அதிகார தோரணையில் ஹண்டர் என்பவரின் தலைமையில் ஒரு விசாரணைக் கமிட்டியும் நியமிக்கப்பட்டது. இதனுடன் ஒத்துழைக்கக் காங்கிரஸ் தீர்மானித்தது. ஆனால் அதிகார வர்க்கத்தின் அநியாயப் போக்கு காரணமாக விலகிக் கொண்டது. லெனின் இந்திய மக்களுக்குத் தம் அனுதாபத்தைத் தெரிவித்த கடிதம் அமிருதபஜார் பத்திரிகையில் வெளியானது.

லண்டனில், ராவணன் சபையில் ஒரு விபீஷணன் இருந்தது போல் சில நியாயம் தெரிந்த பெரியவர்கள் இருக்கவே செய்தனர். ஆஸ்கவித், எட்வின் மாண்டேகு, பர்ககென் ஹெட் ஆகியவர்கள் ஓ'டயரின் நடத்தையை வன்மையாகக் கண்டித்தனர். உள்நாட்டு மந்திரியாக இருந்த சர்ச்சில் ''இங்கிலீஷ்காரன் நடந்து கொள்ளும் முறை இதுவல்ல'' (Unenglish) என்று குறிப்பிட்டார். ஓ'டயர் திருப்பி அழைக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

பிரிட்டிஷ் நிர்வாகம் நியமித்த ஹண்டர் கமிட்டியின் விசாரணை விவரங்கள் ஐந்து தொகுதிகள் கொண்ட புத்தகங்களாக வெளிவந்தன. ஆனால் ஆறுவது தொகுதி (இரகசிய விஷயங்கள் கொண்டது) இன்னும் வெளியிடப்படவில்லை.

நேரு தலைமையில் ஒரு குழு ஜாலியன் வாலா பாக்கில் ஞாபகச் சின்னம் எழுப்ப அமைக்கப்பட்டது. அமிருதசரஸில் மூன்று ஆண்டுகளாகக் கட்டப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் 1961 ஏப்ரல் 13ந் தேதி திறந்து வைக்கப்பட்டது.

—தொகுப்பு : நஜன்



நினைவுச் சின்னம்.

'துப்பாக்கிகளில் ரவைகள் தீர்ந்து போய்விட்டன. இல்லை என்றால் மக்களை இன்னும் சுட்டுத்தள்ளி யிருப்பேன்' என்று கொக்கரித்த ஜெனரல் ஓ'டயர் இவர்தான்!



மகாபாரதம்

ராஜாஜி

புலையனையும் அவன் குடி தண்ணீர்ப் பையையும் நாய்களையும் பார்த்து உதங்கர் மிக்க அருவருப்படைந்து, "வேண்டாம்!" என்றார்.

கண்ணனை மனத்தில் எண்ணி, "இதுவா உன் வரம்?" என்று நொந்து கொண்டார். புலையன் ஜலத்தைப் பெற்றுக் கொள்ளும்படி தோற்பையைக் காட்டி உதங்கரைப் பலமுறை வற்புறுத்தினான். அவர் கோபம் வர வர அதிகரித்து மறுத்து விட்டார். அதன் மேல் புலையன் நாய்களுடன் மறைந்தான்.

புலையன் இவ்வாறு அந்தர்த்தானமானதைக் கண்டு உதங்கர் யோசிக்கலானார். "இது யார்? இது புலையனல்ல. பரீட்சையாகவே இருக்க வேண்டும். பிழை செய்தேன். என்னுடைய ஞானம் என்ன பயன் தந்தது? புலையன் கொடுக்க வந்த ஜலத்தை நான் ஏன் மறுத்தேன்?" என்று வருந்தினார்.

கொஞ்ச நேரம் கழித்துச் சங்கும் சக்கரமும் ஏந்திக் கொண்டு பகவான் மாதவன் உதங்கர் முன் நின்றார்.

"புருஷோத்தமா! நீ என்னை இவ்வாறு பரீட்சை செய்யலாமா? புலையனுடைய தோற் பையில் உள்ள அசுத்த ஜலத்தையா பிராமணனாகிய எனக்குக் கொடுக்கச் சொல்வது? இது தருமமா?" என்று உதங்கர் வருத்தத்துடன் பகவானைக் கேட்டார்.

ஜனார்த்தனன் சிரித்து, "ஓய், உதங்கரே! உமக்காக நான் இந்திரனிடம் சொல்லி அமிர்தத்தை எடுத்துப் போகச் சொன்னேன். அவன் 'மானிடனுக்குச் சாகா மருந்து கொடுக்க இயலாது. வேறு ஏதேனும் செய்யலாமே?' என்றான். நான் அவனை வற்புறுத்தினதில் அவன் ஒப்புக்கொண்டு, 'சரி அப்படியே செய்கிறேன்; ஜலரூபமாக அமிர்தத்தை எடுத்துச் சென்று உதங்கருக்குத் தருவேன். ஆனால் நான் சண்டாள வேஷத்தில் போவேன்.





ஒப்புக் கொண்டால் சரி!' என்றான். நீர் ஞானியாயிற்றே. புலையனுடைய வேஷத்தைக் கண்டு வெறுக்க மாட்டீர் என்று நான் நம்பி அவ்வாறே செய்யச் சொன்னேன். நீர் இவ்விதம் நடந்து கொண்டதால் நான் தோற்றேன்!'' என்றான்.

அமிர்தத்தை இழந்த உதங்கர் வெட்கத்தில் ஆழ்ந்தார்.

102. படி மாவு

யுத்தம் முடிந்தபின் முடிசூட்டப்பட்ட யுதிஷ்டிரன் ஓர் அசுவமேத யாகம் செய்தான். பாரத நாட்டு மன்னர்களெல்லாம் வந்து கூடியிருந்தார்கள். யாகம் வெகு சிறப்பாக நடந்தது. எட்டுத் திசைகளிலும் பறை அறையச் செய்து அழைக்கப்பட்டு வந்திருந்த பிராமணர்களும் ஏழைகளும் திக்கற்றவர்களும் தானங்கள் பெற்றார்கள். சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி எல்லா விதத்திலும் சிறப்பாக யாகம் நடத்தப்பட்டது.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ஒரு கீரிப் பிள்ளை திடீர் என்று யாக சாலைக்குள் பிரவேசித்துச் சபை நடுவில் தைரியமாக எல்லாரையும் பார்த்து, பெரிய சிரிப்புச் சிரித்தது. மனிதனைப் போல் ஒரு பிராணி சிரிப்பதைப் பார்த்து, 'இதென்ன? நம்முடைய யாகத்தைக் கெடுக்க வந்த பேயோ பிசாசோ?' என்று யாக காரியங்களை முடித்து விட்டு உட்கார்ந்திருந்த ரித்துவிக்குகள் திடுக்கிட்டார்கள்.

கீரிப் பிள்ளையின் உடம்பு ஒரு பக்கம் முழுவதும் பொன் மயமாகப் பிரகாசித்தது. நாலு தேசங்களிலிருந்து வந்து சபையில் கூடியிருந்த அரசர்களையும் படித்த பிராமணர்களையும் நோக்கி, அந்த அற்புதக் கீரிப்பிள்ளை பேச ஆரம்பித்தது:

''மன்னர்களே! உங்களுடைய யாகம் ரொம்பச் சிறப்பாக நடந்ததாக நீங்கள் எண்ணுகிறீர்கள். ஒரு காலத்தில் குருக்ஷேத்திரத்தில் வசித்து வந்த ஓர் ஏழைப் பிராமணர் ஒரு படி மாவு தானம் செய்தார். அவர் செய்த அந்தத் தானத்திற்கு உங்கள் அசுவமேதமும் அதில் செய்யப்பட்ட எல்லாத் தானங்களும் சேர்த்துச் சமமாகாது. உங்கள் யாகத்தைப் பற்றி ஏன் வீண் பெருமைப்படுகிறீர்கள்?'' என்று சொல்லிற்று.

இவ்வாறு கீரிப்பிள்ளை சொன்னதைக் கேட்டுச் சபையோர்கள் வியப்படைந்தார்கள். யாகம் செய்த பிராமணர்கள் அந்தக் கீரியண்டை போய், ''சாதுக்கள் கூடியிருக்கும் யாகத்திற்கு நீ எங்கிருந்து வந்தாய்? நீ யார்? ஏன் எங்களுடைய யாகத்தை இவ்வாறு நிந்திக்கிறாய்? சாஸ்திரம் தவறாமல் சகல சாமக்கிரியைகளும் சேர்த்துக் கிரமமாக நடத்தப்பட்ட இந்தப் பெரிய அசுவமேத யாகத்தை நீ குறை கூறுவது சரியல்ல. யாகத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் தக்க முறையில் பூஜிக்கப்பட்டார்கள். எல்லோரும் திருப்தி அடையுமளவு தானங்கள் கொடுக்கப்பட்டன. மந்திரங்களும் ஓதப்பட்டு அவிசுகளும் அக்கினியில் விடப்பட்டன. நான்கு வருணத்தார்களும் சந்தோஷமடைந்திருக்கிறார்கள். நீ ஏன் இவ்விதம் சொல்லுகிறாய்? எங்களுக்கு விஷயம் விளங்க வேண்டும்'' என்று சொன்னார்கள்.

இதைக் கேட்டு அந்தக் கீரி மறுபடியும் சிரித்துச் சொன்னதாவது :

''பிராமணர்களே! நான் சொன்ன வார்த்தை பொய்யல்ல. உங்கள் பேரிலாவது யுதிஷ்டிர மகாராஜன் பேரிலாவது எனக்கு அசூயை இல்லை. மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்ட இந்த யாகம் உண்மையில் நான் பார்த்த ஏழைப் பிராமணரின் தானத்துக்குச் சமமாகாது. குருக்ஷேத்திரத்தில் வசித்த அந்தப் பிராமணர்தான் சிறந்த கொடையாளியானார். அதன் பயனாக அவர் உடனே பத்தினி, மகன், மருமகள் எல்லோருடனும் சுவர்க்கம் ஏறிச் சென்றார். நான் பார்த்த நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

'' உங்கள் யுத்தம் நடப்பதற்குமுன் குருக்ஷேத்திரத்தில் ஒரு பிராமணர் உஞ்சவிருத்தி ஜீவனம் நடத்தி வந்தார். அதாவது கீழே உதிர்ந்து கிடக்கும் தானியத்தைப் பொறுக்கி அவரும் அவர் மனைவி, மகன், மருமகள் ஆகிய நால்வரும் தினசரி ஆகாரத்தை அடைந்து வந்தார்கள். ஒவ்வொரு நாளும் பகலின் ஆறாவது பாகத்தில், அதாவது பிற்பகல் ஒன்றரை மணிக்கு மேல் ஒரு வேளை உணவு எல்லோருமாகக்கூட உட்கார்ந்து சாப்பிடுவார்கள். ஒவ்வொரு நாள் போதிய தானியம் கிடைக்காது. அப்படி நேர்ந்தால் உபவாசமிருந்து அடுத்த நாள் ஆறாவது காலத்தில்தான் சாப்பிடுவார்கள். ஒரு நாள் கிடைத்ததை மறு நாள் வைத்துக் கொள்ள மாட்டார்கள். இது அவருடைய விரதமாக இருந்து வந்தது.

''இவ்வாறு விரத வாழ்க்கை இவர்கள் நடத்தி வந்த போது ஒரு காலத்தில் மழையில்லாமல் நாட்டில் கடும் பஞ்சம் நேரிட்டது. எங்கும் ஜனங்கள் உணவின்றிக் கஷ்டப்பட்டார்கள். மழையில்லாமல் விவசாயம் விளைவு எதுவுமில்லாமல் சாப்பாட்டிற்கு வேண்டிய தானியம் வயல்களில் சிந்திக் கிடக்கவில்லை. பல நாட்கள் அவர் குடும்பமும் பட்டினியாக இருக்க நேரிட்டது. ஒரு நாள் வெயிலிலும் பசியிலும் அலைந்து கஷ்டப்பட்டு ஒரு படி சோளம் சம்பாதித்து வீடு வந்து சேர்ந்தார்கள். இந்த ஒரு படி சோளத்தை மாவாக அரைத்து ஜபம் முதலியன விதிப்படி செய்து மாவை நாலு சம பாகமாகப் பிரித்துக் கொண்டு பகவானை நினைத்து மகிழ்ச்சியுடன் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

''அந்தச் சமயத்தில் ஒரு பிராமணர் பசியோடு அங்கு வந்து சேர்ந்தார். அதிதி ஒருவர் வந்தாரே என்று எழுந்து, அவரை நமஸ்கரித்து உபசரித்து உட்காரச் சொன்னார்கள். களங்கமற்ற பரிசுத்த மனப்பான்மை படைத்த அந்தப் பிராமணருக்கும் அவருடைய மனைவி மகன் மருமகளுக்கும் அதிதியை உபசரிக்கப் பெற்றோமே என்று மகிழ்ச்சி பொங்கிற்று. வந்தவரைப் பார்த்து, 'பிராமண சிரேஷ்டரே, நான் ஏழை. இதை நீர் பெற்றுக் கொள்ள வேண்டும். உமக்கு மங்களம் ஆகுக' என்று சொல்லிப் பிராமணர் தம்முடைய பங்கு காற்படி மாவை அவருக்குக் கொடுக்க, அதிதியானவர் அந்த மாவைப் புசித்தார்.

''ஆனால் அவருக்குப் பசி தீரவில்லை. கொடுத்த மாவைச் சாப்பிட்டுவிட்டுத் திருப்தியடையாத பசிப் பார்வையுடன் பார்த்தார். என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்தவரை, மனைவி பார்த்துச் சொன்னாள் :

'' 'என்னுடைய பாகத்தையும் இவருக்குக் கொடும். இவர் திருப்தியடைந்தால் எனக்குப் போதும்.'

''இவ்வாறு சொல்லித் தன் பங்கு மாவையும் புருஷனிடம் கொடுத்து அதிதிக்குக் கொடுக்கச் சொன்னாள்.

'' 'பதிவிரதையே! விலங்கு புழு பூச்சிகளுங்கூடத் தம் இனத்தில் பெண்களைக் கவனத்துடன் போஷிக்கின்றன. நீ சொல்வது சரியல்ல. உன்னால் பணிவிடை செய்யப்பட்டு இல்லறம் நடத்தும் நான் உன்னை ரட்சிக்காமல் பசியால் தவிக்க விட்டால் எனக்கு என்ன நலன் உண்டாகும்? அன்புக்குரியவளே! எலும்பும் தோலுமாகப் பசியில் நீ வாடிக் கொண்டிருக்க, உன்னைப் பட்டினி போட்டு நான் அதிதி பூஜை செய்வதில் என்ன பயன் உண்டாகும்?' என்று பிராமணர் மனைவி சொன்னதை மறுத்தார்.

'' 'பிராமணரே! தருமமும் பொருளும் எல்லா புருஷார்த்தமும் நம் இருவருக்கும் பொதுவல்லவா? கிருபை செய்து என்னுடைய கால் பங்கு மாவையும் பெற்றுக் கொண்டு அதிதிக்குக் கொடுப்பீராக. என்னைப் போலவே நீரும் பசியால் பீடிக்கப்பட்டு வருகிறீர். நான் சொன்னதை மறுக்க வேண்டாம்' என்று வற்புறுத்தினாள்.

''பிறகு அவரும் ஒப்புக் கொண்டு அந்த மாவையும் அதிதிக்குக் கொடுத்தார். அவர் அதைப் பெற்றுக் கொண்டு புசித்தார். ஆனால் இன்னும் பசி தீராமலே இருந்தார். உஞ்சவிருத்திப் பிராமணர் மிகுந்த மனக் கவலைப்பட்டார்.

''இதைப் பார்த்துக் கொண்டிருந்த பிராமணருடைய மகன், 'தகப்பனாரே! என் பங்கையும் அதிதிக்குக் கொடுத்துத் திருப்தி செய்யும்' என்றான்.

''தகப்பன் இதைக் கேட்டு வருத்தமுற்று, 'குழந்தாய், வயது முதிர்ந்தவர்கள் பசியைப் பொறுத்துக் கொள்ள முடியும். பாலர்களுடைய பசி தீவிரமானது. உன்னுடைய பங்கை வாங்கிக் கொள்ள எனக்கு மனம் வரவில்லை' என்றார்.

''குமாரன் கேட்கவில்லை. 'வயது முதிர்ந்த பிதாவைக் காப்பாற்றுவது புத்திரனுடைய கடமை. பிதா வேறு, புத்திரன் வேறு அல்ல. பிதாவே புத்திரனாக உண்டாகின்றானல்லவா? என் பங்கு மாவு உம்முடையதே. நான் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு பசி தீராத அதிதியைத் திருப்தி செய்யவும்' என்று வேண்டிக் கொண்டான்.

'' 'குழந்தாய், சீலத்திலும் இந்திரிய அடக்கத்திலும் எல்லா விதத்திலும் நான் உன்னைக் கண்டு பெருமைப் படத்தக்கவனாக இருக்கிறாய். உனக்கு எல்லா நலனும் ஆகுக. உன்னுடைய மாவைப் பெற்றுக் கொள்கிறேன்' என்று சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு அதையும் அதிதிக்குக் கொடுத்தார்.

''அதிதி மூன்றாவது பாகத்தையும் பெற்றுக் கொண்டு அதையும் சாப்பிட்டார். இன்னும் திருப்தியாகாமல் இருந்தார். உஞ்சவிருத்திப் பிராமணர்

வெட்கப்பட்டார். என்ன செய்வது என்று தெரியாமல் ஏங்கி நிற்கும் மாமனாரைப் பார்த்துப் பக்கத்திலிருந்த மருமகள், 'சுவாமி! என் பங்கையும் சந்தோஷமாகவே கொடுக்கிறேன். ஒப்புக்கொண்டு அதை அதிதிக்குக் கொடுக்க வேண்டும். உம்முடைய ஆசீர்வாதத்தால் எனக்கு அக்ஷயமான நலன் உண்டாகுக' என்று சொன்னாள்.

''இதைக் கேட்டு மாமனார், 'ஒழுக்கம் தவறாதவளே! நிறம் மாறி இளைத்துப் போயிருக்கும் உன்னைப் பசியால் பீடிக்க விட்டு விட்டு உன்னுடைய பங்கு மாவையும் நான் வாங்கி அதிதிக்குக் கொடுத்தால் நான் தருமத்தை அழிப்பவனாவேன். சிறுமியாகிய நீ பசியால் தவிப்பதை நான் எவ்வாறு பார்த்துச் சகிப்பேன்?' என்று மறுதளித்தார்.

''அவள் விடவில்லை. 'சுவாமி! நீர் எனக்குப் பிரபுவின் பிரபு, குருவின் குரு. தெய்வத்தின் தெய்வம். என் மாவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தச் சரீரம் குருநாதனின் பணிவிடைக்காகத்தானே இருக்கிறது? நீர் என்னை நல்ல கதியடையச் செய்ய வேண்டும். என்னுடைய மாவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று பலவாறாக வற்புறுத்தினாள்.

''பிராமணர், 'பெண்ணே, பதிவிரதையே! நீ எல்லா பாக்கியமும் அடைவாயாக!' என்று ஆசீர்வதித்து அவளுடைய மாவையும் பெற்றுக் கொண்டு அதிதிக்குக் கொடுத்தார்.

''அதை வாங்கிச் சாப்பிட்டதும் அதிதியாக வந்த பிராமணர் சந்தோஷம் அடைந்தார். 'பரிசுத்தமானதும் சக்திக்குத் தக்கவாறு கொடுக்கப்பட்டதுமான உம்முடைய தானத்தால் மிகவும் திருப்தி அடைந்தேன். உங்களுடைய தானம் அற்புதமான தானம். தேவர்கள் பூமாரி பொழிகிறார்கள். அதோ! தேவரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் உம்மைத் தரிசிக்கப் பரிஜனங்களோடு விமானங்களில் வந்து நிற்கிறார்கள். நீரும் உம்முடைய மனைவியும் மகனும் மருமகளும் சுவர்க்க லோகம் போவீர்கள். நீர் செய்த தானத்தினால் உம்முடைய முன்னோர்களுக்காகவும் நீர் சுவர்க்கம் சம்பாதித்தவரானீர். சாதாரணமாகப் பசியானது அறிவை அழிக்கும். தரும சிந்தனையைக் கெடுக்கும். ஞானவான்கூடப் பசியினால் உறுதியை இழப்பான். மனைவி மக்களிடத்தில் உள்ள அன்பையும் பாராமல் தருமத்தையே பெரிதாக நீர் எண்ணினீர். அநேக ராஜசூயங்களும் அசுவமேதங்களும் உம்முடைய இந்த ஒரு தானத்துக்குச் சமமாகாது! காத்திருக்கும் திவ்விய விமானத்தில் ஏறுங்கள். சுவர்க்கம் செல்லுங்கள்!' என்று சொல்லி மறைந்தார்.''

இவ்வாறு உஞ்சவிருத்திப் பிராமணருடைய கதையைச் சொல்லிக் கீரி மீண்டும் சொன்னதாவது: ''அந்தப் பிராமணருடைய சோள மாவின் மணத்தால் கிட்ட இருந்த என்னுடைய தலை சுவர்ண மயமாகிவிட்டது. பிறகு மாவு பரிமாறின இடத்தில் போய் நான் புரண்டேன். சிந்திக் கிடந்த மாத் தூள்கள் பட்டு என் உடலில் ஒரு பாதி தங்கமாயிற்று. பாதி உடல் சுவர்ணமயமாயிற்றே என்று நான் மற்றொரு பகுதியும் அவ்வாறே ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பல தபோவனங்களுக்கும் யாகம் செய்யும் இடங்களுக்கும் போய்ப் பார்த்து வருகிறேன். புகழ்பெற்ற தரும புத்திரர் யாகம் செய்கிறார் என்று கேள்விப்பட்டு இங்கேயும் வந்தேன். ஆயினும் நான் சுவர்ணமயமாகச் செய்யப்படவில்லை. அதனால்தான் இந்த யாகம் ஒரு படி மாவுக்குச் சமமில்லை என்றேன்.''

இவ்வாறு சொல்லி விட்டுக் கீரி மறைந்தது.

(தொடரும்)

ரோமாபுரிச் சக்கரவர்த்தியான ஜூலியஸ் சீஸர்தான் முதல் செய்திப் பத்திரிகையின் ஸ்தாபகர். அக்காலத்தில் ரோம் நாட்டு மக்கள் நடப்புகள் அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களை ஏட்டில் வரைந்து அருகில் உள்ள ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். செய்திப் பத்திரிகை என்று பார்த்தால் அப்படி அனுப்பப்பட்ட அந்த ஏடுகள்தான் முதல் செய்திப் பத்திரிகை என்று குறிப்பிட வேண்டும். 16ஆம் நூற்றாண்டு வரை அச்சிட்ட செய்திப் பத்திரிகை எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

முதல் செய்திப் பத்திரிகை



தகவல்: பி. வி. கிரி

ஆதாரம்: 'தெரிந்து கொள் தம்பி'


Test it for washability
Try out its strength
Observe its finish
IT'S A STRETCHLON NYLON STRAP FROM BENTEX
Now Stretchlon adds a new dimension to Bentex Watch Straps. Making them doubly strong and lasting, and entirely washable! Bentex give your watch straps a lot more than others do. You expect this of Bentex, always.
Available in a new diamond-cut buckle
Bentex
STRAPS
BRACELETS
WATCHES

அந்தரங்கம் ஆழமானது!

கீழ்ச் சக்கரம் 'ரன்வே'யில் பதிந்தபோது ஆகாய விமானம் இலேசாகக் குலுங்கியது. சிறு தாவலுடன் மேலே எழும்பி மீண்டும் அதற்குரிய பாட்டையில் அதன் ஓட்டம் ஓர் அசுர கதியில் இயங்கிப் பின் நிதானப்பட்டு நின்றது.

புது தில்லியிலிருந்து சாரங்கன் சொந்த லீவில் சென்னை புறப்படும்போது ரயிலில் வருவதாகத்தான் அவன் ஏற்பாடு. அதை உணர்ந்த அவனது புதுதில்லி தலைமைக் காரியாலயம் அவனுடைய ரயில் பிரயாணத்தை ரத்து செய்து அவனைக் கௌரவிக்கும் பொருட்டு ஆகாய விமானத்தில் சென்னைக்குப் போக வசதியைச் செய்து தந்தது.

புறச் சூழ்நிலையில் விரையும் அன்றாட வாழ்க்கை அவசரத்தில் அவனது சில வாழ்க்கை அந்தரங்கங்கள் முடிவுபெறாத நிலையில் அவனைச் சோதித்துக் கொண்டிருந்தன. புற நிலையிலும், தில்லியில் அவன் வாழ்கிற ஆடம்பரமான சூழலிலும்கூட அவனது உள் மனம் என்பது ஆழமான சில முடிவுகளின் பேரில் நிலைபெற்று நின்று கொண்டிருந்தது.

தில்லி கரோல்பாக்கில் மாடிக் கட்டடம் ஒன்றில் அவன் தனி அறை. அருகில் ஹஜ்முல்கான் மார்க்கெட். இரண்டாவது மாடியில் நின்று கொண்டால் போதும், உலகத்தையே அங்கிருந்து பார்க்கலாம். சாரி சாரியாக வளர்ந்து செல்லும் ஜனப் பிரளயத்திலே கண்களை அலைய விட்டுக் கொண்டு நின்றால் யுகங்கள் போவதுகூடத் தெரியாது.

இந்தத் தனிமையும், இந்தத் தனிமையின் வெறுமையோடிய பார்வையும் சில நாட்களாக அவனை மிகப் பெரிய அளவில் பாதித்தன.

சென்னையை விட்டுத் தன் வேலையின் நிமித்தமாக அலுவலகச் சார்பில் புதுதில்லி வந்த போது இந்தத் தில்லி வாழ்க்கை அவ்வளவு நிரந்தரமானது அல்ல என்றுதான் எண்ணினான். ஏனென்றால், அவனது அலுவலக மேலிடம் அவனை அங்கே ஒரு முக்கிய அலுவலின்பேரில் தாற்காலிகமாக அழைத்திருந்தது. அந்தத் தாற்காலிக இடமாற்றத்தைக்கூட அவனால் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் சென்னையிலிருந்து புறப்பட்டு வந்தான். அந்த அளவுக்கு அவனது மனத்தை ராஜேசுவரி தடுமாற வைத்துக் கொண்டிருந்தாள்.

சில அபூர்வமான சாயல்களைக் கண்டு மனத்தைப் பறி கொடுப்பது போலவோ, சில மனோகரமான வார்த்தை ஜாலங்களுக்காக மனத்தைப் பறி கொடுப்பது போலவோ நிகழ்ந்த நிகழ்ச்சியல்ல அவர்கள் காதல் சம்பவம். அந்த ஈர்ப்பே ஒரு சோகப் பண்ணிலே ஜனித்தது. அந்தச் சாயையில் பிறந்தது.

"எல்லோரும் போகிறார்கள்; நீங்கள் மட்டும் போக வில்லையே, அந்த உல்லாசப் பயணத்துக்கு! ஏன்?" என்று அவன் அவளிடம் கேட்டான். அநேகமாக அவன் அந்தக் கம்பெனியில் வேலைக்கென்று அமர்ந்து ஆறு மாதங்களுக்குப் பின் பேசிக் கொள்கிற முதல் அந்தரங்க உரையாடல் இதுதான். தினசரி அலுவல் நேரத்தில் வருவதும் வேலையோடு வேலையாக ஒன்றி விடுவதும் ஆபீஸ் சம்பந்தப்பட்டவைகளைப் பற்றி மட்டும் பேசுவதும், அதோடு போய் விடுவதுமாக நாட்கள் ஓர் இயந்திர கதியில் ஓடிக்கொண்டிருந்தன. எதையும், யாரையும் அருகில் அந்தரங்கத்தில் நெருங்கிப் புரிந்து கொள்ள அவகாசமற்ற நாட்கள் அவை.

அழகுசாதனத் தயாரிப்புக் கம்பெனி அது. அதில் சாரங்கன் உதவி நிர்வாக அதிகாரி. அநேகமாக அலுவலக நிர்வாக இயந்திரத்தின் இரண்டாவது சக்கரம் அவன் என்று சொல்லலாம். அவனுக்கு இருக்கிற பல உதவியாளர்களில் ராஜேசுவரி அண்மையில் அமர்த்திக் கொள்ளப்பட்ட ஒருத்தி.

அழகு சாதன உற்பத்தி அண்டு விநியோகக் கம்பெனிக்கு என்று வந்து சேர்கிற பெண் ஒருத்தியிடம் இருக்க வேண்டிய, எதிர் பார்க்க வைக்கிற சில வெளிக் கூறுகள் அவளிடத்தில் இயற்கையாக அமைந்திருந்தன. அவளது உடனடித் தேர்வுக்கு அதுவும் ஒரு பிரதான காரணமாக அவனுக்கு உதவியது.

சாரங்கனின் பல வேலைகளை அவள் மேற்கொண்டு செய்து வருகிறாள். சில சமயங்களில் ஆபீஸ் 'ஸ்டெனோ' வராத நாட்களில் அந்த வேலையையும் அவள் மேற்கொள்ள வந்தபோது அவளுடைய திறமை ஓரளவு நல்ல முறையிலேயே அங்கே புரிந்து கொள்ளப்பட்டது.

சட்ட ரீதியாகப் பரீட்சையில் அவள் உட்கார்ந்து தேறவில்லையாயினும், அங்கு தரப்படுகிற வேலைகளுக்கு அவள் திறமை ஓரளவு சரி செய்து கொள்ளக் கூடிய அளவுக்கே அமைந்திருந்தது.

அவள் வேலைக்கென்று வந்து சேர்ந்த நாளாக அவளிடம் ஓர் அபூர்வமான அமைதித் தன்மையைக் கண்டு சாரங்கன் வியந்திருக்கிறான். கேள்விகளுக்கு உரிய பதில், தவறு நேரும்போது அவள் வருத்தத்துடன் தயங்கித் தயங்கிக் கோரிப் பெறுகிற மன்னிப்பு, அலுவலகம் விட்டதும் விறு விறென்று வீதியில் இறங்கிக் கூட்டத்துடன் கூட்டமாக மறைந்து விடுகிற பரபரப்பு — இவையெல்லாம் ஒரு பெரிய அழகு சாதன நிறுவனத்தில் வேலை பார்க்கிற எந்தச் சராசரிப் பெண்ணிடமும் பார்க்க முடியாத இயல்புதானே!

அலுவலகம் விட்டு எல்லோரும் போய் விட்டார்கள். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. மஹாபலிபுரம் உல்லாசப் பயணத்

திட்டம் உருவாகி நாளைக்குப் போகிறார்கள். அதை எப்படிச் செயல்படுத்துவது என்ற பேச்சில்கூட அவள் கலந்துகொள்ளவில்லை.

அன்று போக வேண்டிய அவசரக் கடிதமொன்றை 'டிக்டேட்' செய்து அவள் 'டைப்' அடித்து வந்து கொடுத்தபின் அதைச் சரிபார்த்துக் கொண்டே கேட்டான் சாரங்கன். அவன் கேட்ட கேள்விக்கு அவள் இன்னும் பதில் சொல்லவில்லை. மீண்டும் கேள்வி ரூபமாக அதைக் கேட்காமல் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு முன்னால் அவன் மேஜைக்கு அப்பால் அவள் நின்று கொண்டிருந்தாள்.

''உல்லாசப் பயணத்துக்கு மற்றவர்களுடன் சென்று உல்லாசமாக இருக்கக் கூடிய அளவுக்கு என் மனம் உல்லாசமாக இல்லை ஸார். அதனால்தான் நான் கலந்து கொள்ளவில்லை.''

'' ஏன் அப்படி ?''

''ஏன் அப்படி என்றால்....? அமைந்த விதமே அப்படி !... அவ்வளவுதான்....'' என்றவள் பிறகு தயக்கத்துடன், ''ஸொர்



அந்தரங்க ஆசாபாசத்தை மறைத்துக் கொண்டு மேல் பூச்சுக்காக மேற்கொள்கிற செயற்கைத் தன்மையான செய்கைகளிலே எனக்கு நம்பிக்கையில்லை, நாட்டமுமில்லை. வெளிப்படையாகச் சொன்னால், எனது குடும்ப நிலை இந்த மாதிரி உல்லாசச் சூழ்நிலையை அநுபவிக்கக்கூடிய அளவுக்கு இல்லை'' என்றாள் ஒளிவு மறைவின்றி.

ஓரளவு அவளுடைய அந்தரங்கம், அவனுடைய அந்தரங்கமாகவே பொருந்தியிருந்ததைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டான்.

''அலுவலகத்து உயர்வு தாழ்வை மறந்து விட்டுப் பேசினால் உங்கள் குடும்பப் பின்னணியினால் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற உணர்வுதான் என்னுடையதும். நானும் பரம ஏழையான ஒரு குடும்பத்தில் பிறந்தவன்தான். என்னைத் தவிர என் குடும்பத்தில் வேறு யாரும் வெளியில் சொல்லக்கூடிய அளவுக்கு உயர்ந்த நிலையில் இல்லை'' என்றான் சாரங்கன்.

''ஏழைமையான குடும்பச் சூழ்நிலையை விட என்னுடைய இரண்டு சகோதரிகளின் விவாகத்துக்காக எங்கள் குடும்பம் பட்டிருக்கிற கடன் ரொம்ப அதிகம் ஸார். அதிலிருந்து மீளவே முடியாமல் தவிக்கிறோம். தவிக்கிறோம் என்றால், அந்தத் தவிப்பில் ஏராளமான பேர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி விடாதீர்கள். என் தாய் தந்தையர் மட்டும்தான். இதில் பங்கு பெற எனக்கு வேறு யாருமில்லை.''

''சகோதரர்கள் ?''

''இல்லை.''

''அப்பா என்ன செய்கிறார் ?''

''அவர் தாசில்தாராக இருந்து ஓய்வு பெற்றவர்.''

இதற்கு மேல் அவர்களால் அதிகம் பேச முடியவில்லை. புது தில்லித் தலைமைக் காரியாலயத்திலிருந்து 'டிரங்கால்' வந்துவிடவே அவர்கள் அந்தரங்க சம்பாஷணை அதோடு நின்று விட்டது.

ஒரு நாள் மாலை! அவன் மேஜையின் முன்னால் விடைபெறக் காத்திருந்தாள் அவள்.

''இருங்கள், போகலாம்.... நானும் வருகிறேன்'' என்றான் சாரங்கன்.

அவள் ஏனோ தயங்கினாள். அதையும் அவன் உணர்ந்து கொண்டான். பத்து பதினைந்து நிமிஷங்களில் அவனும் புறப்பட்டு விட்டான். வாசலில் நின்ற அலுவலக வேனில் டிரைவர் ஆசனத்தில் அவன் ஏறி அமர்ந்து அவளையும் அமரும்படி கூறினான்.

அவளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட வேன் மவுண்ட்ரோட்டில் ஒரு பிரபலமான ஜவுளிக் கடை முன் போய் நின்றது.

''இறங்குங்கள் கீழே !'' — இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் குழைவைவிடக் கடுமைதான் பலன் தரும் என்பது அவனுக்குத் தெரியும்.

அவள் கீழே இறங்கி உள்ளே வந்தாள்.

''உங்களிடம் நான் ஏதோ உங்களைக் கேட்காமல் அதிகமாக உரிமை எடுத்துக் கொள்வதாக நினைக்க வேண்டாம். பயப்படவும் வேண்டாம்; ஓர் ஏழையிடம், மற்றோர் ஏழைக்கு ஏற்பட வேண்டிய, ஏற்படக்கூடிய சராசரிப் பரிவுதான் இது. இதற்கு வேறு அர்த்தங்கள் உண்டாக்கிக் கொள்வதும், வேறுவிதமான எண்ணங்களைச் சரியான முறையில் உண்டாக்கிக் கொள்ளவும் உங்களால் முடியுமென்றால், அந்த எண்ணம் ஒரு சரியான பாதையில் உருவாக வேண்டும் என்பதுதான் என் விருப்பம்'' என்று கூறிவிட்டு அதிக உயர்ந்த விலையிலுமின்றி, மிகக் குறைவானதுமாகப் போகாமல் மூன்று புடவைகளை அவளிடம் எடுத்துக் கொடுத்துப் பில்லைத் தான் பெற்றுக் கொண்டான்.

வேன் மீண்டும் புறப்பட்டது. அப்பொழுதும் அவன்தான் பேசினான். ''உங்களுக்கு இருக்கிற வாழ்க்கைப் பிரச்னையில் உங்களைக் கவனித்துக் கொள்ளப் போதுமான வசதியை நீங்கள் பெற்றிருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். இன்று வெளியில் வந்து தன் குடும்பத்துக்கென்று சம்பாதிக்கிற ஒவ்வோர் ஏழைப் பெண்ணின் நிலைமையும் இதுதான். இதை நான் நன்றாகவே உணர்கிறேன். நாலு பேருக்கு நடுவில் வேலை பார்க்க வரும்போது நாம் சில பொது விதிகளையும் அதிகபட்சமில்லாவிட்டாலும், குறைந்தபட்ச 'அவுட் லுக்'கையேனும் கொஞ்சம் ஜாக்கிரதையுடன் வைத்துக் கொள்ள வேண்டாமா ? சொல்லுங்கள், அதோ பாருங்கள், உங்கள் புடவை தோள் பட்டைக்கு அருகில் கிழிந்திருக்கிறது. இந்தப் புடவையையும், சிவப்பு ஒன்று கட்டிக் கொண்டு வருவீர்களே, அதையும்தானே மாற்றி மாற்றிக் கட்டிக் கொண்டு வருகிறீர்கள் ?''

ராஜேசுவரி வெட்கத்துடன் தோள் பட்டைக்குக் கீழே உள்ள சிறிய கிழிசலை மடிப்புடன் மடிப்பாகச் சரி செய்து மறைத்துக் கொண்டாள்.

''உங்களுக்கு எப்பொழுது சௌகரியமோ, அப்பொழுது பணம் கொடுங்கள். முழுத் தொகையையும் ஒரேயடியாகக் கொடுக்க வேண்டும் என்பதில்லை. சிறுகச் சிறுகக் கொடுங்கள். உங்கள் பயம் எனக்குப் புரிகிறது. வீட்டில் பெற்றோருக்குப் பதில் எப்படிச் சொல்வது என்று யோசிக்கிறீர்கள். அப்படித்தானே ? அலுவலகத்தில் எல்லாரும் வாங்கிக் கொண்டார்கள். நானும் வாங்கிக் கொண்டேன். தவணையில் பணம் தரலாம் என்று சொல்லி விடுங்கள்'' என்று அவன் சொன்ன போது அவனது பரந்த உள்ளத்தையும், அதற்குள் நிறைந்து வழிகிற பரிவின் பண்பையும் கண்டு மெய்சிலிர்த்த போது அந்தச் சிலிர்ப்பிலே உள்ளம் சிலிர்த்துக் கண்ணீர் வந்துவிட்டது.

''இந்த மாதிரி உங்களுடைய பரிவுக்கு என்னிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? என்னிடம் என்ன இருக்கிறது என்றே தெரியவில்லை '' என்றாள் தலையைக் கவிழ்த்துக் கண்ணீர் சிந்திக் கொண்டே.

''நீங்கள் தருகிற எதையும் நான் மகிழ்ச்சியோடு ஏற்பேன் '' என்று சொல்லி இலேசாகச் சிரித்தான்.

'வேன்' கடற்கரையோரமாகச் செல்லும் உல்லாசப் பயணிகள் பாதையான மகாபலிபுரம் ரஸ்தாவில் நின்று கொண்டிருந்தது.

ராஜேசுவரி உல்லாசமான வாழ்க்கையையும், உல்லாசமான மன நிலையையும் ஒரு

சாரசுக் கோணத்தில் இழந்தவளேயன்றி அவளுக்கு அந்தவிதமான அபிலாஷைகள் இல்லை என்று அர்த்தமில்லை. ஆனால் சாத்திய அசாத்திய வாதம் என்று வருகிறபோது அவளது வாழ்க்கைச் சிக்கல் அசாத்திய மானதோர் இடத்தில் சிக்கிக் கொண்டிருந்தது. அந்தச் சிக்கலைச் சாரங்கனிடம் எப்படிச் சொல்வது ?

அவளிடமிருந்து சாதகமானதொரு பதில் வராமல் அவளுடைய பெற்றோரைக் காணப் போவது அவ்வளவு தூரம் பயனுள்ளதாக இருக்காது என்பதால் வெறுமனே இருந்து விட்டான் சாரங்கன்.

மௌன வெளியில் நாட்கள் எந்தவித முடிவுகளையும் தோற்றுவிக்காமல் இயந்திர கதியில் சென்றன.


''நான் கேட்ட கேள்விக்குப் பதிலே கிடைக்கவில்லையே?'' — சாரங்கன் நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு நாள் கேட்டான்.

அவள் அழுது விட்டாள். ஏக்கம் தோய்ந்த ஒரு பார்வையை அவன் மேல் போர்த்தியவள் பிறகு மிகுந்த வேதனையுடன், ''நான் அவ்வளவுக்கெல்லாம் புண்ணியம் செய்யவில்லையே. மனக்கோட்டை கட்டக்கூட எனக்கு உரிமை இல்லை. அவ்வளவு பெரிய சிக்கலில் நான் மாட்டிக் கொண்டிருக்கிறேன், ஸார். அதை நான் உங்களிடம் எப்படிச் சொல்லுவது என்றே புரியாமல் தவிக்கிறேன். நீங்கள் மனம் வைத்தால் மிகப் பெரிய அந்தஸ்துள்ள பெண்ணையும் உங்களுக்குப் பிடித்த மானவளையும் மனப்பூர்வமாக மணக்கலாம். ஆனால் ஒரு பரம ஏழையை மணக்கக்கூட எனக்கு உரிமையில்லை. அந்த அளவுக்கு நான் என் எல்லா உரிமைகளையும் இழந்து விட்டு நிற்கிறேன். என்னைப் பற்றிய எந்த வித முடிவும் எடுக்க எனக்கு அதிகாரமில்லை. அப்படியொரு சிக்கலில் நாங்கள் மாட்டிக் கொண்டு தவிக்கிறோம்'' என்று அழுகையுடன் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

சிக்கல் என்று அவள் சொன்னதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை அவளிடம் கேட்க வேண்டும் என்று தனிமையை எதிர் நோக்கிக் காத்திருந்தான். அந்தத் தனிமை அவனுக்கு இலேசில் கிடைக்கவில்லை.

தொடர்ந்து வந்த சில எதிர்பாராத சம்பவங்களாலும், தலைமைக் காரியாலயத்தில் ஏற்பட்ட வேலைநிறுத்தம் காரணமாகவும், சென்னைக் காரியாலயத்தில் வேலை கெடுபிடி அதிகமாகி விட்டது. அதைத் தொடர்ந்து சாரங்கன் திடீரென்று புதுதில்லிக்குத் தாற்காலிகமாக மாற்றப்பட்டான்.

ஆரம்பத்தில் அது தாற்காலிகமானதாகத் தான் கருதப்பட்டது. இதற்குப்பின் சில எதிர்பாராத நிகழ்ச்சிகள்போல் தில்லி மாற்றம் நிரந்தரமாக்கப்பட்டு விட்டதோடு மட்டுமல்ல; அவனது பொறுப்புகளும் அதிகமாகி வாழ்க்கைப் போக்கே மாறிவிட்டது. அடிக்கடி தில்லிக்கும் சென்னைக்கும் பறப்பதும், அங்காங்கு வியாபார விஷயமாக இடம்விட்டு இடம் போவதும், பிறகு அப்படியே தில்லி திரும்புவதும் சென்னை வாழ்க்கை நிச்சயமற்றதாக்கி விட்டது. பாதி நாட்கள் ஆகாய விமானத்திலும், பாதி நாட்கள் நிலத்திலும் என்று





"மாமி! கொஞ்சம் சிரித்தமாதிரி முகத்தை வைக்கக்கோங்கோ!"

"பரவாயில்லே! கோபமாகவே இருக்கேன். என் நாட்டுப் பெண்ணுக்குத்தானே இந்தப் போட்டோவை அனுப்பப் போறேன்!"

இப்படி வாழ்க்கைப் போக்கு திசை திரும்பிய வேகத்தில் அந்தரங்க வாழ்க்கைப் பிரச்னைகள் கவனிக்க அவகாசமில்லாமல் ஸ்தம்பித்தன. என்றாலும், தொடரும் நினைவுகளும், ஏங்கும் ஏக்கங்களும், மனத்தில் வளரும் காதலும் நினைவைச் சென்னையிலேயே ஆழப் புதைத்துக் கொண்டு வளர்ந்தன.

ராஜேசுவரியின் அலுவலக விலாசத்துக்கு அவன் போடுகிற பல கடிதங்களுக்கு எப்பொழுதேனும் ஒன்றிரண்டு பதில்கள் அவளிடமிருந்து அவன் பெறுவான். சில பொது விஷயங்களும், சில அலுவலக விஷயங்களும் இருக்குமேயன்றி அவன் வரைகிற காதல் கடிதங்களுக்கு அவளுடைய பதில் கடிதம் ஒன்றுகூடக் காதலைப் பிரதிபலிப்பதாக இருக்காது. ஒருதலைப்பட்சமான இந்த நிலை அவனுக்குள் ஒரு பெரிய சர்ச்சையைக் கிளப்பி விட்டது. சிக்கல் என்று சொன்னாளே, அது என்ன சிக்கல்? ஒரு வேளை நாம்தான் அவள் மேல் அன்பு கொண்டிருக்கிறோமோ, அவளுடைய அன்பு வேறெங்கேனும் படர்ந்து கொண்டிருக்குமோ? அப்படி இருப்பதாகவும் தெரியவில்லையே. அவள் தன்னை வெறுப்பதுபோலவும் இல்லை. ஏதோ ஓர் இக்கட்டில் பின்னிருந்து ஆட்டுவிக்கும் யாரோ ஒருவருடைய ஆக்கினைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்தோடு இருப்பதாகத்தான் அவளைப் பற்றி அவன் எண்ணினான்.

ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குமுன் அவளிடம் அவள் போட்டோ ஒன்று கேட்டுப் போட்ட கடிதத்துக்குக்கூட அவளிடமிருந்து பதில் வரவில்லை. இதுவும் ஒருவகை ஏமாற்றம்தான். என்றாலும் அவளுடைய அமைதியான முகம் அவனை அவள்மேல் சினம் கொள்ளவே வைப்பதில்லை.

நிலப்பரப்பில்தான் தூரமே ஒழிய நிலைவைப் பொறுத்தவரையில் சாரங்கன் அவளுக்கு அருகில் இருப்பதுபோலவே மனத்தை வைத்துக் கொண்டிருந்தான். அவன் பின்னின்று ஆட்டுவிக்கப்படும் ஏதோ ஒரு சக்திக்குப் பயந்து பயந்து தனது இன்பங்களை ஒரு கட்டுப்பாட்டினுள் வெளிக்காட்ட முடியாமல் தவிக்கிறாளேயன்றி எந்த முடிவையும் தன்னிடம் மறைத்து விட்டு மேற்கொண்டு விடுவாள் என்ற முடிவுக்கு அவன் வரவில்லை.

ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன.

ராஜேசுவரியிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. நாட்கள் செல்லச் செல்லத் தன்னுடைய வாழ்க்கையே அவளிடம்தான் இருக்கிறது. அவள் இல்லையென்றால் தனக்கு வாழ்க்கையே இல்லை என்று நினைக்கத் தொடங்கினான். இந்த நினைவுகளும் எதிர்பார்ப்புகளும் அவனது அமைதியைப் பெருமளவில் பாதித்தன. இந்தத் திரை மறைவு நாடகத்துக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இரண்டில் ஒன்று தெரிந்தால்தான் வாழ்க்கையில் நிம்மதி பெற வாய்ப்புண்டு. அதிலெல்லாம் எத்தனை நாட்களுக்கு மாயக் கோட்டை கட்டுவது?

நீண்ட இடைவெளிக்குப் பின் அலுவலகத்துக்கு இரண்டு மாதங்கள் லீவு போட்டு விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டு விட்டான்.

விமான நிலையத்தில் அவனை வரவேற்க இரண்டு மூன்று முக்கியஸ்தர்கள் மட்டுமே வந்திருந்தார்கள்.

ராஜேசுவரியை அவன் எதிர்பார்க்கவில்லை. எனவே எதிர்பார்த்து ஏமாறும் நிலை அவனுக்கு இல்லை.

ராஜேசுவரியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை மட்டும் ரகசியமாக உள்ளுக்குள் வைத்துக்கொண்டு சாதாரண முறையில் அலுவலகத்துக்கு வருவது போல வந்தான். ஆனால் அங்கே ராஜேசுவரியைக் காணவில்லை. பிறகு விசாரித்ததில் அவள் ஒரு வாரம் லீவில் இருப்பது தெரிந்தது. கொஞ்சம் நிம்மதி பிறந்தது அவனுக்கு. அவளுடைய வீட்டுக்கு இதுவரையில் சென்றதில்லை. எனவே ஒரு வாரம் பொறுத்திருந்து அலுவலகத்திலேயே பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்து விட்டான்.

ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் அவளை டெலிபோனில் கூப்பிட்டு, சாந்தோம் பீச்சில் சந்திப்புக்கு அனுமதி கேட்டான். அவள் மறுப்பேதும் கூறாமல் அவன் அழைப்பை ஏற்றுக் கொண்டாள்.

"இந்தச் சந்திப்புக்காக நான் எவ்வளவு துடிப்புடன் வந்திருக்கிறேன், தெரியுமா? என்னிடம் இருப்பதில் ஆயிரத்தில் ஒன்றைக்கூட உன்னிடத்தில் காண முடியவில்லையே?" என்றான் சாரங்கன் கொஞ்சம் மனத்தாங்கலோடு.


அவள் உடல் குலுங்க அழுதாள்.

"எனது ஆசையை வெளியில் சொல்லக்கூட எனக்கு உரிமை இல்லை, சாரங்கன். உங்கள் மனத்தில் இருப்பதை நீங்கள் சொல்லி விட்டீர்கள். நான் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்" என்றாள்.

"அது என்ன என்பதைத் தைரியமாகச் சொல். அந்தச் சிக்கல் தீர்ந்தால் நீ சுதந்திரமாக இருக்கலாம் இல்லையா? கிட்டத்தட்ட இரண்டாண்டு காலமாக நான் உனக்காகக் காத்திருக்கிறேன். இந்த நீண்ட நாட்களுக்குப் பின் உன்னைப் பார்க்க வருகிறபோது என்னுடையவளைக் காண வருகிற துடிப்புடன்தான் வந்திருக்கிறேன். நான் உன்னை எதற்காகவும் குறை கூறவில்லை" என்று நெகிழ்வுடன் பேசினான் சாரங்கன்.

"என் வாழ்க்கை நாங்கள் பட்டிருக்கிற கடனுக்காகப் பணயம் வைக்கப்பட்டிருக்கிறது, சாரங்கன்" — என்றாள் அளவுக்கு மீறின துயரத்துடன்.

"என்ன சொல்லுகிறாய்?"


முன்னேற்றப் பாதையில் அடிவைக்கவே
பலவகையான நெசவுகளிலும் டிசைன்களிலும் கிடைக்கின்றன.
மபத்லால் க்ரூப் ஸூட்டிங்குகள்
'டெரீன்'/காட்டன் 'டெரீன்'/அக்ரிலிக் டெபிலேஸ்டு மற்றும் மாபினேஸ்டு ரகங்கள்
நியூ ஷோராக் (ஷோராக்) அகமதாபாத் . நியூ ஷோராக், நாடியாத் . ஸ்டாண்டர்ட், பம்பாய் . ஸ்டாண்டர்ட், (நியூ சைனா), பம்பாய் . ஸ்டாண்டர்ட், தேவாஸ் . மபத்லால் ஃபைன், நவ்ஸாரி—யூனிட் நம். 1 . மபத்லால் ஃபைன், பம்பாய்—யூனிட் நம். 2 . மபத்லால் ஃபைன், பம்பாய்—யூனிட் நம். 3 . மபத்லால் ஃபைன், பம்பாய்—யூனிட் நம். 4 . சூரத் காட்டன், சூரத் . மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத் .
MG-461 TM

''உண்மைதான். எனது இரண்டு சகோதரிகளின் திருமணத்துக்காகக் கடன் கொடுத்தவர் என்னை அதற்கு ஈடாகக் கேட்கிறார். நாற்பத்தைந்துக்கு மேல் வயதான அவர் ஒரு பெட்ரோல் பங்கின் சொந்தக்காரர். ஐந்தாண்டுகளுக்கு முன் மனைவியை இழந்தவர். ஒரு மூன்றாவது மனிதர் மூலம் இப்பொழுது அதிக நிர்ப்பந்தம் கொடுக்கிறார். கடனை உடனடியாகத் தீர்த்தால் அவருடைய பிடியிலிருந்து மீளலாம். இல்லையென்றால் அதற்கு உடன்பட்டாக வேண்டும். அவருடைய நிர்ப்பந்தம் நியாயமானதுதான் என்று என்னுடைய அப்பா அம்மாவிடம் பலர் சிபாரிசுக்கு வருகின்றனர். பட்டிருக்கிற கடனை அடைக்க முடியவில்லை என்றால் அந்த நிர்ப்பந்தத்துக்குப் பணியத்தானே வேண்டும்? அவரிடம் என் தந்தை கடன்பட்டதிலிருந்து இதுவரை ஒரு ரூபாய்கூடக் கொடுக்கப்படவில்லை. நான் சம்பாதிக்கத் தொடங்கியதிலிருந்து மாதம் இருபத்தைந்து ரூபாய் வீதம் அதற்காக ஒதுக்கிக் கொண்டு வருகிறேன். என்னுடைய சம்பாத்தியமின்றி அது அடைபட வேறு வழியே கிடையாது.''

இருளில் கடல் பரப்பு பளபளப்புடன் தெரிந்தது. தூரத்தில் பிரதான ரஸ்தாவில் கார்கள் ஓயாது ஓடிக் கொண்டே யிருந்தன.

கடன் தொகை, அதன் பின்னும் இருக்கிற நிர்ப்பந்தம், அந்த இரண்டுக்கும் நடுவே இருபுற நிலையில் ராஜேசுவரியின் மதுரமான வாழ்வு சிக்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தபோது அவள் மேல் அளவற்ற பச்சாத்தாபமே மேலிட்டுக் கொண்டிருந்தது.

அந்தச் சந்திப்புக்குப் பின் இரண்டு வாரங்கள் சென்றுவிட்டன. ராஜேசுவரியை அதன் பின் அவன் சந்திக்கவில்லை.

தான் பதில் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டதும், அதன் பின் இரண்டு மூன்று வாரங்கள் எவ்விதச் சந்திப்புமின்றிப் போய் விட்டதையும் எண்ணி அவள் எவ்வாறு நினைக்கிறாள். இந்த வகை திடீர் மௌனம் அவளிடத்தில் வேறு விதமான விபரீதங்களை உண்டாக்காமல் இருக்க வேண்டுமே என்று அவன் பயந்தான். ஏனென்றால் அவனும் சில சாத்தியமான வகையில் வேறு பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தான்.


''ராஜேசுவரி!''—அழைத்துக்கொண்டே அவன் வீட்டினுள் நுழைந்தான். அவளுடைய தாய் தந்தையர் வீட்டில் இல்லை.

அவள் தன்மேல் கோபமாக இருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும்.

அவன் அழைத்துக் கொண்டு கூடத்தில் வந்து நின்றபோது கூடத்தில் சோர்ந்து படுத்திருந்தவள் அவசரம் அவசரமாக எழுந்தாள். அவள் முகம் அழுது அழுது வீங்கினாற்போல் இருந்தது.

சாரங்கனைக் கண்டவுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதாள்.

''எனக்குத் தெரியும். நான் அன்பு செலுத்தவோ, செலுத்தப்படவோ அருகதையற்றவள் என்பது. தகுதிக்கு மீறிய விதத்தில் நான் எனது அபிலாஷைகளை வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் ஒன்று: உங்களைப் போல் நான் என் அந்தரங்கத்தை வெளியில்



''எங்கே இங்கே இருந்த மாமரத்தைக் காணோமே?''
''காணோமா...அடுத்த வீட்டுக்காரர் ரெண்டு மாவிலை பறிச்சுண்டு போறேன்னார்......ஆகட்டும்னேன்!......''

சொல்லி யிருந்தால் பெரிய ஏமாற்றத்தைத் தானே ஏற்க வேண்டி யிருக்கும்?''

அவன் கொஞ்சம் சினத்துடன் பேசின போதிலும் அவன் மேல் அவள் ஆத்திரம் கொள்ளவில்லை. அந்தரங்கத்தைத் தான் வெளியில் சொல்லவில்லை என்று தன் ஆத்திரத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அவள் அந்தரங்கத்தையும் காட்டியதில் அவன் மனம் திருப்தியடைந்தது.

''ராஜேசுவரி! 'நம்' அந்தரங்கம் என்பது நம்மைப் பொறுத்த விஷயம். மற்றவை பெரியவர்களின் சம்மதம் பெற்றுச் செய்தால் தானே மரியாதை? இந்த மூன்று வார மௌனம் காரணமற்றது என்று நினைக்கிறாய்? இதோ பார்! உன்னை உன் தந்தை பட்ட கடனிலிருந்து மீட்கப் பணம் கொண்டு வந்திருக்கிறேன். நமது நகைமைக் காரியாலயத்துக்கு எழுதிப் பாதித் தொகையும் நான் சேர்த்து வைத்திருந்தது கொஞ்சமும். ஆக உன்னை மீட்கப் போதுமான தொகை!''

ஆர்வத்துடன் அவள் சாரங்கனைப் பார்த்தாள்.

''நல்ல பொருள் என்று நாம் எதை மதிக்கிறோமோ, அது மிகப் பெரிய பிரச்னையினுள் அடங்கிப் போய்க் கிடக்கிறது. சிலர் சில ஆரம்ப காலத் தோல்விகளையும் சிக்கல்களையும் கண்டு பயந்து ஓடி விடுவார்கள். நான் அதை வென்று வாழப் பிரயத்தனப்பட்டேன். பலர் இவ்வழியில் சென்று முயன்றதில்லை. அப்படி முயலாதவர்கள் அந்தப் பிணைப்பை உடைத்து விட்டோ, ஒருவரையொருவர் ஏமாற்றி விட்டோ விலகிவிடுகிறார்கள். அவர்களின் ஆரம்பகால அதிருப்தி அவர்களைத் தூர விலக வைத்து விடுகிறது. நான் எனது அகர முயற்சியில் வெற்றி பெற்று விட்டேன். ராஜேசுவரி! இந்தப் பணத்தை உனக்காக நான் மட்டும் முடிவு செய்து தந்து விடவில்லை. என்னுடைய பெற்றோரையும் கலந்து பேசி அவர்கள் மனத்தையும் திருப்திப் படுத்திய பின்புதான் இதை நிறைவுடன் தருகிறேன். ஏன் தெரியுமா? உன்னைப் பற்றிய என் அந்தரங்கம் ஆழமானது'' என்றான்.

அத்தியாயம் இருபத்நாறு

கும்பாபிஷேகம்

கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி வெடித்துப் போட்ட ஓர் இருட்டறையில் இழுத்துத் தள்ளி ஒரு வார காலம் அடைத்து வைத்திருந்து இன்று காலைதான் திறந்து விடப்பட்டவன் போல் அத்துணை சோர்வும், களைப்புமாக, நிலைகுலைந்து, அழுது அழுது முகம் வீங்கி, கண்கள் சிவந்து, உடல் மெலிந்து கறுவடைந்து, உருவே மாறிக் காணப்பட்ட முத்துசிவன் ஆபீசுக்குப் போகக் கிளம்பி வெளியே வந்தான். கடந்த ஏழெட்டு தினங்களாக எங்கேயும் ஓட்டிச் செல்லப் படாமல் தூசும் தும்புமாய்ப் படிந்து கிடந்த ஸ்கூட்டரைத் தட்டித் துடைத்து விட்டு ஏறி அமர்ந்து கொண்ட அவன் வராந்தாப் பக்கம் மெல்லப் பார்வையை உயர்த்தினான்.

அங்கே, பிரம்பு நாற்காலியொன்றில் குத்துக்காலிட்டு உட்கார்ந்தபடி பெரிய வேதாந்தி போல் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான் வலம்புரியின் மூத்த மகன் ரவி.

''நான் ஆபீசுக்குப் போய் வரட்டுமா ரவி ?''

சட்டென்று கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவசரமாக நிமிர்ந்து பார்த்த சிறுவன் நாணப் புன்னகையுடன், ''ஊம்'' என்று தலையாட்டினான்.

'' இன்றைக்கு நீ பள்ளிக்கூடம் போவாய் அல்லவா ?''

''போலேன் பெரியப்பா !''

''உன் தங்கை சந்திரா ?''

''ஊஹூம்.''

''ஏன்டா ?''

'' வர மாட்டாளாம். அம்மா கூடவே இருக்கப் போறாளாம்.''

''சரி; இன்றைக்கு ஒரு நாள் அவள் இருக்கட்டும். நீ சமர்த்தாய்ப் போய் வரணும்.''

''ஊம்.''

''சாயந்திரம் நான் வரப்போ உனக்கு என்ன வாங்கி வரட்டும் ? பிஸ்கட்டா, காராபூந்தியா, மைசூர் பாகா ?....''

''எனக்கா பெரியப்பா ?'' என்று இராகம் போட்டு இழுத்துக் கேட்ட ரவி தன் பிஞ்சுக் கையை நீட்டி விரல்களைக் குவித்து, ''எனக்கு.... வந்து....'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன் தான் சொல்ல நினைத்த பண்டத்தின் ருசியை இப்போதே ருசித்து ஆனந்தப்படுபவன் போல் முகம் மலர்ந்து சிரித்தான். அப்படிச் சிரித்ததோடு தனக்குப் பிரியமான அந்தப் பண்டத்தின் பெயரையும் தெரிவித்து விட்டாற் போன்ற திருப்தியுடன் மௌனமானான். எல்லாம் அப்படியே வலம்புரியின் மறுபதிப்பு !

முத்துசிவனின் கண்கள் கலங்கின. துக்கம் தொண்டையை அடைக்க அவனையே சற்று நேரம் பார்த்துக்



கொண்டிருந்துவிட்டு வீட்டின் உட்பக்கம் பார்வையைத் திருப்பினான்.

திலகமற்ற நெற்றியும், தளர முடிந்த வெறுங் கூந்தலும், வெறிச்சிட்ட கழுத்துமாகப் பரிதாபக் கோலத்தில் புறக்கடைக் குழாயடியிலே உட்கார்ந்து பற்றுப் பாத்திரங்கள் தேய்த்துக் கொண்டிருந்தாள் சுந்தரி. அவளின் முன்றானையைப் பிடித்தவாறு நின்று சிணுங்கி அழுது கொண்டிருந்தாள் சிறுமி சந்திரா. பூஜையறைக் கதவு திறந்திருந்தது. காலை எட்டு மணிக்கு அவ்வறையினுள் போன அன்னபூரணியம்மாள் இன்னமும் எழுந்து வரவில்லை.

நீர்த் துளும்பலால் பார்வை மறையவே சட்டென்று கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்ட முத்துசிவன் நிதானமாக ஸ்கூட்டரைக் கிளப்பிச் சென்றான்.

நாட்கள் மெல்ல மெல்ல நடந்தன. தனக்கேற்பட்ட அதிர்ச்சித் தாக்குதல்களிலிருந்து ஒருவாறு விடுபட்டுச் சுதாரித்துக் கொண்டு வந்தான் முத்துசிவன். ஆனாலும் அவற்றின் சூட்டுக் கொப்புளங்கள் அவ்வப்போது வெடித்து அவனை வருத்தியும் உறுத்தியும் வேதனைப்படுத்திக் கொண்டே இருந்தன.

''என்ன சார்! கல்யாண ஏற்பாடெல்லாம் செய்தீர்களே, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?'' என்று அவனுடைய காரியாலய சகாக்கள் சிலர் கேட்டார்கள். வெளி நண்பர்களும், ''மிஸ்டர் சிவன்! ஏன் இன்னும் நாளைக் கடத்தறீங்க? உங்க திருமண அழைப்பிதழை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக்கிட்டு இருக்கிறோமே!'' என்றார்கள். மற்றும் குடும்பத்துக்கு வேண்டிய சில பெரிய மனிதர்கள், ''என்ன தம்பி! ஏதோ நல்ல சமாசாரம் கேள்விப்பட்டோம்; எங்களுக்கெல்லாம் எப்போ விருந்துச் சாப்பாடு போடப் போறீங்க? சீக்கிரமா அழைச்சுப் போடுங்க தம்பி!'' என்று சொன்னார்கள்.

இவர்களில் சிலருக்கு அவனது திருமணம் ஏன் தடைப்பட்டது என்பதற்கான காரணங்கள் நிஜமாகவே தெரியாதிருக்கலாம்; ஆனால் பலருக்கு அவை தெரியாமல் இருக்க முடியாது. முதல் காரணம் மட்டும் தெரிந்தவர்கள், ''பாவம், இந்தச் சமயம் பார்த்துச் சின்னத் தம்பி காலமானது பெரிய துரதிர்ஷ்டம்தான்! ஆனாலும் அதற்காகக் கல்யாணத்தை அதிக காலம் தள்ளிப் போட்டு விடாதீங்க, சார்! ஒரு மூணு மாசத்துக்கப்புறமாவது முடிச்சுடப் பாருங்க!'' என்று சொல்வதை அவனால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. வேறு சிலரோ அந்தத் துக்க சம்பவத்துடன் வந்தனா பற்றிய விஷயத்தையும் தெரிந்து கொண்டு அது தெரியாத மாதிரி, ''கல்யாண முஸ்தீபு ஏன் நின்று போச்சு?'' என்று குத்தலாகவும் குறும்பாகவும் விசாரித்தனர். இதற்கு என்ன பதில் சொல்லிச் சமாளிப்பான்? அவமானத்தால் இரத்தம் சிந்துவது போன்ற வேதனையே அவனுக்கு உண்டாகி விடும்.

இம்மாதிரியான இடக்குப் பேர்வழிகளிடமிருந்து தப்பிப்பதற்காகக் கொஞ்ச நாட்கள் வெளியே எங்கும் தலை காட்டாமல் — வீட்டை விட்டால் ஆபீஸ், ஆபீஸை விட்டால் வீடு என்று — 'அஞ்ஞாதவாசம்' பண்ணிப் பார்த்தான். அப்படி இருந்ததில் முன்னைக் காட்டிலும் அதிக வேதனையையும், அவமான உணர்ச்சியையும் அவன் அநுபவிக்க வேண்டியதாகி விட்டது. ஆமாம்; பிறருக்குப் பயந்து தனிமையில் அடைந்து முடங்கிய அவனை அவனுடைய மனமே பல வகையிலும் அவமானப்படுத்தித் துன்புறுத்தத் தொடங்கியது.


வந்தனாவிடம் தான் ஏமாந்து போனதையும், தன்னை அவள் ஏமாற்றி விட்டதையும் எண்ணிப் பார்க்க ஆபீசில் கிடைத்த 'தனிமை' அவனுக்கு அதிகச் சந்தர்ப்பங்களைக் கொடுத்துக் கட்டாயப்படுத்தியது. வீட்டில் உண்டு பண்ணிக் கொண்ட 'தனிமை'யோ, வலம்புரியின் மரணம் பற்றிச் சிந்திக்க நிறைய வாய்ப்பளித்து அவனைக் கெடுபிடி பண்ணியது.

வந்தனாவை நினைக்கும் போதெல்லாம் அவனுக்கு ஒரே ஆத்திரமும், அவமானமும், கோபமும், துயரமும் பொங்கிக் குமுறி எழும். 'அந்த நாடகக்காரி என்னை எவ்வளவு மோசமாக ஏமாற்றி விட்டாள்!'

பிறகு கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பார்ப்பான்: 'பாவம், அவளைக் குற்றம் சொல்ல ஒன்றுமில்லை. அவள் என்னவோ என்னை மனப்பூர்வமாக நேசிக்கவே செய்தாள். மணந்து கொள்ளவும் தீவிர வேட்கையுடன் இருந்தாள். அவளின் தந்தையும் அவ்வாறே உறுதி காட்டினார். ஆனால் அந்தக் குடும்பத்தின் சூத்திரதாரியான கோகிலாம்பாள் தான் அதை எப்படியோ தகர்த்துவிட்டிருக்கிறாள். வழக்கம்போல் அவள் தன் கணவரையும் மகளையும் பணிய வைத்து வெற்றி கண்டு விட்டிருக்கிறாள்.

உஷாராக இருங்கள்!

வெளிநாட்டு ஊடுருவிகள் நமது பொருளாதாரத்தை உறிஞ்ச விடாதீர்கள்!



வாங்குங்கள்

ஸிங்கர்*

தையல் மெஷின் ஊசிகள்...


• அவை நம்பகமானவை • அகில உலக ஸிங்கர் தரத்திற்கேற்ப இந்தியாவில் தயாரிக்கப் படுபவை.

வெளிநாட்டு ஊசிகள் கள்ளத்தனமாக இந்தியாவினுள் நுழைந்து நமது பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. இந்தியாவில் தயாராகும் ஊசிகளை வாங்குவதன் மூலம் நீங்கள் இப்பாதிப்பை முறியடிக்க உதவலாம். வாங்குங்கள் ஸிங்கர் தையல் மெஷின் ஊசிகள். மறவாதீர்கள், இது தேசிய அபிமானப் பிரச்சினை மட்டுமல்ல, உங்கள் சொந்த நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயமும் கூட!

ஸிங்கர் டிவிஷன் லிமிடெட்

புதியது!

தலைவலியைப் போக்க உபரி வலிமையுள்ள வலிநிவாரணி



பவரின் டாப்யூல்* வலியை முறியடிக்கிறது.

தலைவலி, தசை வலி, பல் வலி, ஜலதோஷம், ஃப்ளு முதலியவற்றால் ஏற்படும் அவதிகளைச் சக்தியுடன் அபாயமற்ற முறையில் எதிர்க்கிறது.

*விழுங்க எளிதான ஓர் காப்ஸ்யூல் வடிவ வில்லை.

ரிஜிஸ்டர்டு யூஸர்ஸ்: ஜெப்ரி மானெர்ஸ் & கம்பெனி லிட்.

EXTRA-STRENGTH
POWERIN
ANALGESIC Tabules

PW-5-152 TM

பார்க்கப் போனால் அதற்காக அவன் மீதும் குறை கூற முடியாதென்றே தோன்றுகிறது. ஏனென்றால், நான் கல்யாணப் பேச்சை எடுத்த போதே அவன் தன் சம்மதத்தை அளிக்க வில்லை; மௌனம் சாதித்தான். அதைப் புரிந்து கொண்டு ஒதுங்கிப் போகாமல் அசட்டுத்தனமான பிடி வாதத்துடனும் நம்பிக்கையுடனும் காரியங்களை மேற்கொண்டது என்னுடைய தவறுதானே? இந்தக் காலத்தில் பணம், பதவி, புகழ், அந்தஸ்து ஆகியவை யாருக்குத்தான் தள்ளுபடி? அதிலும் கோகிலாம்பாள் போன்ற ஒட்டுப்புல் ராசிக்காரர்கள் அவற்றை அவ்வளவு இலேசில் தள்ளி விடுவார்களா? என்னைவிட அந்தச் சேலத்துக்காரன் பசை உள்ளவனாயிருப்பான்; அவளுக்கு வேண்டியது அதுதானே? இல்லையானால் இவ்வளவு காலம் தன் மகளை இழுத்து வைத்துக் கொண்டு நாடக, சினிமா உலகில் இத்தனை கஜகர்ணம் போட்டிருப்பாளா? ஓடு மீனை ஓடவிட்டு உறுமீனுக்காகக் காத்திருந்தவள் எப்படியோ அதைப் பிடித்து விட்டாளே! ஒருகால் அவள் இந்த முயற்சியில் இதற்கு முன்பே இறங்கியிருந்திருக்கலாம். அதைத் தெரிந்து கொள்ளாமல் கபோதியாக நான் இருந்து விட்டு இப்போது அவளையோ அவளுடைய மகளையோ நிந்திப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா?'

காரியாலய அறையின் தனிமையில் இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்து நெஞ்சம் குமுறி நாளங்கள் கட்டு விட்டுத் தளர நேரத்தைப் போக்கி விட்டு ஒரு நோயாளிபோல் அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தானானால், அங்கே கண்ணீரும் கம்பலையுமாய்ப் பூஜையறையில் ஒடுங்கிக் கிடக்கும் தன் தாயாரையும், வைதவ்யக் கோலத்தில் சமையல் கட்டிலே நடமாடிக் கொண்டிருக்கும் சுந்தரியையும், தந்தையைப் பிரிந்த ஏக்கத்தில் மூலைக்கொன்றாய்ச் சுருண்டு படுத்துக் கிடக்கும் அவனுடைய பிள்ளைகளையும் கண்டதுமே ஒரு குற்றவாளியைப் போல் தன் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டு மீண்டும் தனிமையில் ஆழ்ந்து விடுவான். இப்போது அவனுடைய மனத்தில் வலம்புரியின் அகால மரணம் பற்றிப் புதிர் மயமான பல கேள்விகள் கிளர்ந்து அவனைக் கொத்திப் பிடுங்கத் தொடங்கிவிடும்.

'வெகு காலமாகவே வலம்புரி ஆரோக்கியக் குறையுள்ளவனாயிருந்தானென்றாலும் அந்தக் குறையானது அப்படியொன்றும் பெரிய நோயால் ஏற்பட்டதல்ல. பூஞ்சையான உடம்பானதால் அடிக்கடி ஜலதோஷம், அதனால் இலேசான காய்ச்சல், இருமல் — இவைதாம் வரும். இச்சிறு நோய்களா அவனுடைய உயிரை இவ்வளவு சீக்கிரம் பறித்து விட்டன? ஒருகால் வேறு ஏதேனும் நோய் உபாதை இருந்து அதை யாரிடமும் சொல்லாமல் மறைத்து வைத்திருந்திருப்பானோ? அவனுடைய மனைவி சுந்தரி சொன்னதிலிருந்து அப்படி ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. கடைசியாய் இங்கு என்னைப் பார்த்து விட்டுப் போன அன்று கடுமையான ஜுரத்துடன் படுத்தானாம். பிறகு எழுந்திருக்கவேயில்லையாம். அவ்வாறாயின் அவனுக்கு அத்தகைய ஜுரம் வர நான்தான் காரணமோ? அன்றைய தினம் அத்துணை கடுமையாகப் பேசி விரட்டியதால் ஏற்பட்ட அதிர்ச்சிதான் அவனை அந்நிலையில் கொண்டு போய்த் தள்ளி விட்டதோ? அன்று அவன் கேட்டபடி பணம் கொடுத்து விட்டிருந்தால் மருந்து வாங்கிச் சாப்பிட்டு உடல் தேறியிருப்பானோ....? அவ்வளவுக்கு மோசமாக அப்போது அவனது உடல் நிலை இல்லையே! நன்றாகத்தான் பேசினான், சிரித்தான். நானும் அவன் பணம் கேட்டதற்காகக் கோபித்துக் கொள்ளவில்லை; தர முடியாதென்று மறுத்துவிடவும் இல்லை. அவ்விஷயத்தை அப்படியே விட்டு விட்டு, வழக்கமாக அவன் அந்தப் பத்திரிகை விளம்பரப் படத்தை வெட்டி எடுத்து வந்த குறும்புக் காரியம் பற்றி விசாரித்தேன். அதை ஒரு சின்ன விஷயமாகத்தான் நினைத்தேன். ஆனால் அவனோ ஒரேயடியாக நடுங்கிப் போனான். பயங்கர இரகசியம் ஒன்று வெளிப்பட்டு விட்டாற் போல் திகிலடைந்து சித்தசுவாதீனம் இழந்தவன் மாதிரி ஏதேதோ உளறியபடி எழுந்து ஓடி விட்டான். எனவே, அவ்விளம்பரப் படம் சம்பந்தமாக நான் கேட்டதுதான் அவனை அவ்வாறு அதிர்ச்சியடையச் செய்து, ஜுரத்தையும் அதிகப்படுத்தி, பிறகு அதுவே அவன் உயிரையும் பறித்துப் போய் விட்டிருக்கிறது. என்ன இது விந்தை! அந்த விளம்பரப் படத்திலே அப்படி என்ன மர்மம் இருக்கக்கூடும்?'

முத்துசிவன் களைத்துச் சோர்ந்து அப்படியே கட்டிலில் படுத்து விடுவான். ஆனால் தூக்கம் வராது. கொஞ்ச நேரம் தூங்கினாலும் வலம்புரியைக் கனவில் கண்டு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து

விடுவான். அப்புறம் அன்றிரவு அவன் வரை பகலாகிவிடும்.

மற்ற தம்பி, தங்கைகளைக் காட்டிலும் வலம்புரியின் மீதுதான் அவனுக்கு அதிக அன்பும், பாசமும் இருந்தன. வலம்புரிக்கும் தன் அண்ணன்மேல் அளவுகடந்த பிரியம், பக்தி. சமீப காலத்தில் ஏற்பட்ட மனவிகார மாறுதலால் இவன் அவனைச் சில சமயம் கடிந்து பேசியிருக்கிறானே தவிர அதெல்லாம் அவன் மீது வைத்திருந்த அன்பையும் பாசத்தையும் சிறிதும் சிதைத்துக் கரைத்ததில்லை. அதனால்தான் அவனுடைய திடீர் மறைவு இவனை இவ்வளவுக்குப் பாதித்து நிலைகுலையச் செய்துவிட்டது.



இன்னொரு விஷயத்திலும் அவன் பெரிதும் துயரமடைந்திருந்தான். அதாவது, வலம்புரி காலமான செய்தியைத் தன் தங்கைகளுக்கும், பெரிய தம்பிக்கும் தந்தி மூலம் தெரிவித்தான். மைதிலி மட்டும் கணவனோடு வந்து ஒரு நாள் இருந்து காரியம் முடிந்ததும் புறப்பட்டுப் போய் விட்டாள். ஞானமும், தில்லைநாதனும் வராததோடு மட்டுமல்ல, அதற்கான காரணம் கூறிப் பதில் கடிதமும் போடவில்லை. தங்கள் அண்ணன் மேல் அவர்களுக்கு அவ்வளவு கோபம், வெறுப்பு! அதனால் தம்பியின் சாவையே அவர்கள் பொருட்படுத்தாமல் இருந்து விட்டார்கள்.

வலம்புரியின் ஈமச் சடங்கு முடிந்தும் அவனுடைய மனைவி சுந்தரியையும், இரண்டு பிள்ளைகளையும் தன் வீட்டுக்கே அழைத்து வந்து விட்டான் முத்துசிவன். வேறென்ன செய்வது? சுந்தரிக்கு வேறு போக்கிடம் இல்லையே!

ஒரு நாள் முத்துசிவன் சுந்தரியின் முகத்தைப் பார்க்காமலே, "ஆமாம், உன் கணவன் எப்போதும் துண்டுக் கடுதாசிகளில் என்னமோ எழுதிக் கொண்டிருப்பானே, அதெல்லாம் என்ன? ஏதாவது கடன் கணக்குகளா? அல்லது எங்காவது இரகசியத்தில் பணம் சேர்த்து வைத்திருந்து வட்டிக்கு விட்டு வந்தானா?" என்று கேட்டான்.

சுந்தரி பதிலேதும் சொல்லாமல் மௌனமாகப் போய் வலம்புரி கடைசியாக அணிந்திருந்த பழைய சில்க் ஜிப்பா ஒன்றைப் பெட்டியிலிருந்து எடுத்து வந்து, "இதோ, இதிலேதான் அவர் எழுதினதெல்லாம் இருக்குது பாருங்க" என்றவாறு கொடுத்தாள்.

அந்த ஜிப்பா ஜேபியில் கையை விட்டுக் கொத்தாகக் காகிதத் துண்டுகளை வாரி வெளியே போட்டு அவற்றில் சிலவற்றைப் பிரித்துப் பார்த்தான் முத்துசிவன். அவனுக்கு ஒரே வியப்பு!



'அழகும் அமைதியும் கொலு வீற்ற கோபுரமாய் விளங்கிய என் குடும்பத்தில் இத்தனை பெரிய சரிவுகள் ஏன் ஏற்பட்டன? இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன?'

உலகத்திலிருக்கும் அத்தனை கோடி மக்களும், கரங்களை ஒரு சேர நீட்டி, "நீயே அதற்கெல்லாம் காரணம்! நீதான் அவ்வளவுக்கும் காரண கர்த்தன்!" என்று பெருங் குரல் எடுத்துக் கூவினர்.

ஆமாம்; அந்தத் துண்டுக் காகிதங்களில் சிறுசிறு கவிதை வரிகள் கிறுக்கப்பட்டிருந்தன. ஆனால் ஒரு கவிதை கூட முழுசாக இல்லை. எல்லாம் அரைகுறையான கவிதைகள். வாழ்வின் நிலையாமையைக் குறிக்கும் வாக்கியங்களே அவற்றில் அதிகம் தென்பட்டன!

வலம்புரி கவிஞனா? அல்லது தத்துவ ஞானியா?

பிரமை பிடித்த நிலையில் அப்படியே நாற்காலியில் சாய்ந்தான் முத்துசிவன். அவனுடைய கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள் அந்தத் துண்டுக் காகிதங்களின் மேல் சிதறி எழுத்துக்களைக் கலக்கிக் கரைத்தன.

ஒரு மாதம் உருண்டு புதைந்து **முத்துசிவனின் மன நிலையில் கொஞ்**

சம் மாறுதலும் ஏற்பட்டது. நடந்தவற்றையெல்லாம் அவன் மட்டுமின்றிப் பிறரும் மறக்க ஆரம்பித்ததால் பழைய தெம்புடன் சற்றே தலை நிமிரலானான்.

அவன் விஷயத்தில் ஒரு விசித்திரம் என்னவென்றால், தனக்கேற்பட்ட இழப்பையும் ஏமாற்றத்தையும் அவமானத்தையும் எண்ணித்தான் இத்தனை நாளும் துயரத்தில் ஆழ்ந்திருந்தானே தவிர, அந்த இழப்பு ஏமாற்றம் அவமானம் எல்லாம் ஏற்பட அடிப்படைக் காரணம் என்ன என்பது குறித்துக் கடுகளவும் நினைத்துப் பார்க்காததே! அவ்வழியில் அவனுடைய சிந்தனை திரும்பவே இல்லை. அதனால் மீண்டும் பழைய தறிகெட்ட போக்கிலேயே போக ஆரம்பித்தான்.

அப்படி ஒரு நாள் எங்கோ 'போகக் கூடாத' ஓர் இடத்துக்குப் போகத் திட்டமிட்டுக் கொண்டு புறப்பட்ட முத்துசிவனிடம், தந்திச் சேவகன் வந்து ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுப் போனான்.

அந்தத் தந்தி குண்டக்கல்லிலிருந்து வந்திருந்தது. கஷ்டப் பிரசவத்தால் குழந்தை இறந்து பிறந்ததோடு ஜானகியும் இறந்து விட்டாள் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது!

மூன்றாவது இடி! இந்தப் பேரிடியை முத்துசிவனால் தாங்க முடியாமற் போகவே ஒரு வாரம் ஜுரமாகப் படுக்கையில் விழுந்து விட்டான்.

'ஐயோ, என் அருமைத் தங்கையைப் பறி கொடுத்து விட்டேனே! ஐந்தாறு மாதங்களுக்குமுன் அவள் கடிதம் எழுதியதற்குப் பதில் கடிதம் கூடப் போடாமல் அலட்சியமாகவும் இரக்கமற்ற சுயநலத்தோடும் இருந்து விட்டேனே! என் அம்மா சொன்னது போல் அவளை இங்கே அழைத்து வைத்துக் கவனித்துப் பார்த்திருந்தால் பிரசவமும் நல்லவிதமாக நடந்திருக்குமோ? இளம் வயதில் அந்த வெகுளிப் பெண் அகால மரணமடைந்ததற்கு நான்தான் காரணமோ?'

இப்படியெல்லாம் உறக்கத்தில் வாய் விட்டும், விழிப்பில் மனத்துக்குள்ளாகவும் அரற்றிப் பிரலாபித்தான் முத்துசிவன். இந்தப் பேரதிர்ச்சியிலிருந்தும், பெருந் துயரிலிருந்தும் அவன் மீண்டெழ இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டன.

எதுவொன்றையும் நிரந்தரமாக இழக்கும் போதுதானே அதன் அருமை பெருமைகளைப் பூரணமாக உணர முடிகிறது!

அந்த வீட்டின் களையே மங்கிவிட்டது. எங்கு பார்க்கினும் ஒருவிதப் பாழ்த்த தோற்றம். சோகம் கவிந்த வெறிப்பு. அழுகை ஒலியையும் பொருமல் ஓசையையும் இடைவிடாமல் ஒலிபரப்பும் ஒரு வானொலிப் பெட்டி போல் விளங்கியது அன்னபூரணியம்மாளின் பூஜையறை. கொஞ்ச காலமாக அவள் யாரிடமும் வாய் திறந்து பேசுவதே இல்லை.

இந்த நிலவரத்துக்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு நிலவரமும் அவ்வீட்டிலே காணப்பட்டது. அது சுந்தரியால் தோன்றிய நிலவரம்.

ஆம்: அவள் கணவனை இழந்தபின் இவ்வீட்டில் தன் பிள்ளைகளுடன் வந்து குடியேறி ஒரு யுக காலம் வரையில் ஒழுங்காகவே நடந்து கொண்டாள். துக்கம் காத்த நிலையில் அவளைப் பார்த்தவர்கள் அனைவரும் கண் கலங்கிப் போனார்கள். அவளுடைய பரிதாபக் கோலத்தைக் கண்டு முத்துசிவனே பல முறை கண்ணீர் வடித்து விட்டிருக்கிறான்.

இப்படி இருந்தவளின் போக்கில் மெல்ல மெல்லச் சில மாறுதல்கள் ஏற்படலாயின. நல்ல துணிகள் உடுத்தத் தலைப்பட்டாள். மகிழ்ச்சிக் கலகலப்புடன் இருக்கவும் ஆரம்பித்தாள். இதையெல்லாம் ஒரு பெரிய விஷயமாக அப்போது யாரும் நினைக்கவில்லை. இந்தக் காலத்தில் கணவனை இழந்த ஓர் இளம் விதவைப் பெண் ஒரேயடியாக மணிமேகலை வேடம் பூண்டுவிட முடியுமா? ஆகவே, அன்னபூரணியம்மாளும் முத்துசிவனும்கூட அவளின் அந்த மாற்றத்தைக் கண்டும் காணாதவர்கள் போல் இருந்து விட்டார்கள்.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அவளுடைய நடை உடை பாவனைகள் எல்லாமே அளவைக் கடந்து கொண்டிருந்தன. மூன்று மாதங்களுக்குப் பின் அவள் முற்றிலும் பழைய கோலத்துக்குத் திரும்பி விட்டாள். இப்போது அவளைப் பார்க்கும் யாரும் ஒரு விதவை என்றே எண்ண முடியாது. சினிமாவில் நடிக்க ஆசைப்படும் கல்லூரி மாணவி போல் காட்சியளித்தாள். அதோடு நின்றாலும் பரவாயில்லை. அடிக்கடி வெளியே போய் வரவும் தொடங்கினாள். முன்போல் வீட்டுக் காரியங்களைப் பொறுப்பாகச் செய்வதில்லை. தன் பிள்ளைகளைக்கூடச் சரியாகக் கவனிப்பதில்லை.

இதை யெல்லாம் அன்னபூரணியம்மாள் 'எத்தனை நாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருப்பாள்? இலேசாக முணு

இப்பொழுது!

12 நாட்களில் வெண்மை பளிச்சிடும் பற்கள்!

சக்தி வாய்ந்த புதிய
செய்முறை.
பனிரெண்டே நாட்களில்
பற்களுக்கு அதி
வெண்மையையும்
ஆரோக்கியத்தையும்
அளிக்கிறது



[illegible]

புதிய செய்முறை	புதிய சுவை	புதிய பேக்

[illegible]

முணுக்க ஆரம்பித்தாள். அப்புறம் கொஞ்சம் பலமாகவே பேச்சு அடிபட்டது. அதன்பின் மாமியாருக்கும் மருமகளுக்கும் நேரிடைப் பூசல், போர்! ஆனால் சுந்தரியின் போக்கில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. நாளுக்கு நாள் அவள் கன்னிப் பெண்ணாகிக் கொண்டிருந்தாள்.

முத்துசிவனுக்குப் பல தொல்லைகள், கவலைகள். அதிலும் கடன் தொல்லைகளே அதிகமாகி விட்டன.

அவனுடைய இலட்சிய வெற்றிக்குப் பின், அதுவரையில் அநுபவிக்காத சுகங்களையெல்லாம் ஒரேயடியாக அநுபவித்துவிட வேண்டும் என்ற வெறியார்வத்துடன் — கண்மண் தெரியாமல், பணத்தைப் பணமென்று பாராமல் — செலவு செய்ததெல்லாம் சேர்ந்து இப்போது அவனைப் பெருங் கடனாளியாக்கி விட்டிருந்தன. உத்தியோக உயர்விலும் முட்டுக்கட்டை விழுந்து பழைய வருமானமே வந்ததால் இந்தப் புதிய சங்கடங்களைச் சமாளிக்க முடியாமல் தத்தளிக்கலானான். இந்நிலையில், வீட்டிலே தன் மைத்துனியின் போக்கைக் கவனிக்கவோ, கண்டித்துக் கட்டுப்படுத்தவோ அவனால் இயலவில்லை.

சமீப நாட்களாக அன்னபூரணியம்மாள் தன் சுபாவத்துக்கு மாறான காரியங்கள் சிலவற்றைச் செய்யத் தொடங்கியிருந்தாள். சமைக்காமல் இருந்து விடுவது, பாத்திரங்களை உருட்டி வீசியெறிவது, தான் மட்டும் சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகப் படுத்து விடுவது! இவ்வளவும் தன் மருமகளுக்கு எதிராக நடத்தும் கிளர்ச்சி என்பது முத்துசிவனுக்குத் தெரியும். ஆனாலும் அதையெல்லாம் அவன் கண்டு கொள்ளாமலும் காதில் போட்டுக் கொள்ளாமலும் இருந்து வந்தான்.

ஒரு நாள். சாதாரண ஆசாமி ஒருவரிடம் முத்துசிவன் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி விட்டிருந்தான். அந்த ஆசாமி உடனடியாகப் பணத்தைத் திருப்பித் தர வேண்டும் என்று ரொம்பவும் கெடுபிடி பண்ணினார். இதைப் பொறுக்க மாட்டாமல் தன் ஸ்கூட்டரை விற்று அந்தக் கடனைத் தீர்த்துவிடத் தீர்மானித்து ஓர் இடத்தில் விலையும் பேசி முடித்து விட்டு இரவு ஏழு மணிவாக்கில் வீடு வந்து சேர்ந்தான்.

அப்போது வீட்டில் சுந்தரி இல்லை. எங்கோ வெளியே போயிருந்தாள். அன்னபூரணியம்மாள் தன் பேரப் பிள்ளைகளுக்குச் சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

காப்பி பருகிவிட்டுக் கூடத்து அறைக்கு வந்த முத்துசிவன், சன்னலோரம் விழுந்து கிடந்த அன்றைய தினப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு சோபாவில் உட்கார்ந்து படிக்கப் பக்கங்களைப் புரட்டினான். எதேச்சையாக அவன் பார்வை ஒரு விளம்பரத்தில் போய்ப் பதிந்தது. அன்றொரு நாள் சுகுணாவிடம் காட்டிய அதே விளம்பரம்தான். ஆனால் அதிலிருந்த பெண்ணின் போட்டோ படம் வேறு விதமாய் இருந்தது. அதாவது, அவளது முகம் நேர்ப் 'போஸில்' தெளிவாகத் தெரிந்தது. மற்றபடி உடலின் ஆபாசக் கோலத்தில் மாறுதல் ஏதும் இல்லை. 'இடைச் சுருக்கப் பட்டி விளம்பரம்' ஆயிற்றே! அதற்கு இது அவசியம் அல்லவா?

ஒரு கணம் அந்தப் படத்தையே வெறித்துப் பார்த்த முத்துசிவன், மறுகணம் ஏதோ தீப்பொறி கண்ணில் பட்டாற் போல் துடிப்படைந்து மீண்டும் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான்.

சந்தேகம் இல்லை; அது அவனுடைய மைத்துனி சுந்தரியேதான்! அவள்தான் அந்த விளம்பரத்துக்கு அப்படிப் 'போஸ்' கொடுத்திருந்தாள்.

''அம்மா!'' என்று இரைந்து கூப்பிட்டான் முத்துசிவன். அன்னபூரணியம்மாள் எழுந்து வந்தாள்.

''இதைப் பார்த்திங்களாம்மா?... என்ன இது அக்கிரமம்?'' என்று சீற்றத்துடன் கேட்டுக் கொண்டே தன் கையிலிருந்த பத்திரிகையைப் பிரித்து அவ்விளம்பரத்தைச் சுட்டிக் காட்டினான் முத்துசிவன்.

அன்னபூரணியம்மாளும் தூர இருந்தே அதை எட்டிப் பார்த்தாள். பிறகு தன் மைந்தனை ஒரு கணம் கூர்ந்து நோக்கி விட்டு, ''இந்த அக்கிரமத்தை நீ இப்போதான் பார்க்கிறயா தம்பி? இதுதான் ஊரெல்லாம் அறிந்த விஷயமாகி விட்டிருக்குதே! எனக்குத் தெரிந்தே ரெண்டு மாசத்துக்கு மேலாகுது. ஆனால் இது இப்ப ஆரம்பமானதில்லை; உன் தம்பி உயிருடன் இருந்தபோதே நடந்ததாம். கேள்விப்பட்டேன். தினமும் யாராவது ஒருத்தர் வந்து இந்த அநியாயத்தை, அசிங்கத்தைக் காட்டி என் மானத்தைக் கப்பலேற்றி விட்டுப் போறாங்க!'' என்று ஆத்திரம் குமுறிய குரலில் சொல்லிக் கொண்டே விருட்டென்று திரும்பி உள்ளே போய் விட்டாள்.

உடம்பின்மீது சகதிச் சேற்றை வாரி இறைத்தாற் போல் அருவருப்புடனும் வேதனையுடனும் நெளிந்து முகத்

தைச் சுளித்த முத்துசிவனுக்கு இது காறும் மர்மமாயிருந்த ஒரு விஷயம் இப்போது பளிச்சென்று புலப்பட்டது.

'ஓ..... என் அன்புத் தம்பி வலம்புரி அகால மரணமடைந்ததற்கு இது தான் காரணம். இதற்காகத்தான் தன் மனைவியிடம் அவன் அடிக்கடி சண்டை போட்டிருக்கிறான். அவளை அடக்கித் திருத்த முயன்றிருக்கிறான். அத்துடன் இவ்விஷயம் எனக்குத் தெரியாமல் இருக்கப் பெரும் பாடுபட்டிருக்கிறான். அதனாலேயே அவன் இங்கு வரும்போதெல்லாம் இப்பத்திரிகையில் உள்ள இந்த விளம்பரப் படங்கள் என் கண்ணில் படாமலிருக்க அவற்றைக் கத்தரித்து எடுத்திருக்கிறான். இவளும் அவன் உயிரோடு இருந்தவரையில் இம்மாதிரி விளம்பரங்களுக்குத் தன் முகத்தைக் காட்டாமல் உடம்பை மட்டும் காட்டிப் 'போஸ்' கொடுத்திருக்கிறாள். இப்போது குளிர் விட்டு விட்டது. முழு முகத்தைக் காட்டத் துணிந்து விட்டாள். இதைத்தான் அன்று சுகுணா அப்படி மறைமுகமாகச் சொன்னாள் போலும்! அவளுக்கு இவ்விஷயம் அப்போதே தெரிந்து விட்டிருக்கிறது. என்னுடைய குடும்பத்துக்கு எவ்வளவு பெரிய அவமானம் இது! ஐயோ, இனி நான் எப்படி வெளியில் தலை காட்டுவேன்?'

முத்துசிவனுக்குத் தலை வெடிப்பது போல் ஆகிவிட்டது. வெகு நேரம் அப்படியே சாய்ந்து கிடந்த அவன், ஸ்கூட்டர் விற்பனை விஷயமாய் வெளியில் போக வேண்டியிருந்ததால், அதைத் தவிர்க்க முடியாமல் எழுந்து புறப்பட்டான்.

திரும்பிவர இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆயிற்று. வீடு அமைதியில் ஆழ்ந்திருந்தது. சுந்தரி வந்து படுத்துவிட்டிருந்தாள். அன்னபூரணி யம்மாள் 'உம்'மென்று உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முக பாவனையிலிருந்தே மாமியாருக்கும் மருமகளுக்கும் ஒரு பெரிய போர் நிகழ்ந்து முடிந்திருக்கிறதென்பது தெளிவாயிற்று. இந்த இரவு நேரத்தில் தானும் அந்த விஷயத்தைக் கிளறி வீட்டை அமர்க்களமாக்க வேண்டாம், விடிந்ததும் விசாரித்துக் கொள்ளலாம் என்று நிர்மாணித்தவனாய்த் தன் படுக்கை அறைக்குப் போய்விட்டான்.

மறு நாள் பொழுது விடிந்து அவன் எழுந்தபோது வீட்டில் சுந்தரியைக் காணோம்! அவளுடைய பிள்ளைகளும் கண்ணில் தென்படவில்லை.

திகில் அடைந்த முத்துசிவன் தன் அம்மாவிடம் விசாரித்தான். ''எனக்குத் தெரியாது'' என்று இரண்டே வார்த்தைகளில் பதில் சொல்லிவிட்டு மௌனமானாள் அவள்.

இது நாலாவது இடி! அரண்டு மிரண்டு விட்டான் முத்துசிவன்!

'சுந்தரி எங்கே போயிருப்பாள்? தன் பிள்ளைகளுடன் வீட்டை விட்டு ஓடிப் போன அவள் என்ன ஆகியிருப்பாள்? குளம் குட்டையிலோ, ரயில் தண்டவாளத்திலோ விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டிருப்பாளோ?'

அவனுக்கு எதைக் கண்டாலும் வெட வெடத்தது; யாரைப் பார்த்தாலும் குலை நடுக்கம் ஏற்பட்டது; என்ன நினைத்தாலும் குழப்பம் உண்டாயிற்று. தனக்குப் பின்னால் ஏதோ ஒரு துர்த் தேவதை இருந்து கொண்டு தன்னை ஓட ஓட விரட்டியடிப்பது போன்ற பயப் பிராந்தியுடன் ஒவ்வொரு விநாடியையும் அவன் சித்திரவதைப்பட்டுக் கழிக்கலானான்.

ஒரு வாரம் ஓடி மறைந்தது. அன்று மாலை காரியாலயத்திலிருந்து வீடு திரும்புவதற்காக பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தான். ஒரு கெடுபிடியான கடனை அடைக்க ஸ்கூட்டர்தான் விற்கப்பட்டுவிட்டதே!

''ஹலோ சார், குட்ஈவினிங்!''

முத்துசிவன் திரும்பிப் பார்த்தான். சாட்சாத் ரட்சகனே எதிரில் வந்து நின்றான். என்ன ஆச்சரியம்! அவனுடைய தலை வாரல், முக ஒப்பனை, ஆடை அலங்காரம் எல்லாம் பழைய கோலத்துக்குத் திரும்பி விட்டிருந்தன. அவற்றுக்கேற்றபடி கையில் ஒரு பையிலும் வைத்திருந்தான்.

''என்னப்பா சௌக்கியமா?'' என்று உயிரற்ற புன்னகையுடன் கேட்டான் முத்துசிவன்.

''இருக்கிறேன் சார்! உங்களைப் பார்க்கத்தான் புறப்பட்டேன்; அதிர்ஷ்டவசமா வழியிலேயே அகப்பட்டுக் கொண்டீங்க!'' என்று சொல்லி அமர்த்தலாகச் சிரித்தான் ரட்சகன். இப்போது அவன் முன் போல் 'சார்' பட்டம் கொடுத்துப் பேசினான்.

''உன் மருந்துக்கடை பிசினஸ் எப்படி இருக்குது? லாபகரமாய் இருக்குதுல்லே?''

''மருந்துக்கடையா? அதை ஊத்தி மூடி ஒரு மாசத்துக்கு மேல் ஆகிப் போச்சு சார்!''

''அடட, பாவி! ஏன் மூடிவிட்டே? இப்ப என்ன பண்ணிக்கிட்டு இருக்கிறே?''



''என் மகன் நன்றாக ஹாக்கி ஆடுவான்.''
''என் மகன் நன்றாகக் கிரிக்கெட் ஆடுவான்.''
''என் மகன் நன்றாக வாதாடுவான்.''

''கடை எப்படியோ நல்லாத்தான் நடந்தது, சார்! ஆனால் என் மனம் அதிலே லயிக்கவில்லே. நடிக்கப் பிறந்தவன் நான். நாடகக் கலைக்காகவே வாழப் பிறந்தவன். ஆடும் மயில் கூடையில் அடைந்து கிடக்குமா? ஓடும் மேகம் உப்பரிகையில் சாய்ந்து உறங்குமா? மருந்துக் கடையில் உட்கார்ந்தே ஒரு மகோன்னதமான நாடகத்தைத் தீட்டி முடிச்சேன். மறுநாள் கடையை இழுத்து மூடிவிட்டு என் பழைய நாகரத்தினம் நாடக மன்றத்தைத் திறந்து கொண்டேன். அடுத்த வாரம் அந்தப் புதிய நாடகத்தை அரங்கேற்றி இந்த மெட்ராஸையே ஒரு கலக்குக் கலக்கப் போறேன். நீங்க அவசியம் வரணும். வந்து என்னைப் பெருமைப்படுத்தணும்'' என்று சொல்லிக் கொண்டே தன் ஜேபியிலிருந்து டிக்கட் புத்தகத்தை வெளியே எடுத்தான் ரட்சகன்.

உடனே முத்துசிவன் தன் இரண்டு கைகளையும் குவித்தபடி, ''வேண்டாம் அப்பனே! தயவுசெய்து என்னை விட்டு விடு!'' என்றான் கெஞ்சும் குரலில்.

''பரவாயில்லே சார்! டோண்ட் வொரி!'' என்று ஒரு கோணல் சிரிப்புடன் சொன்ன ரட்சகன், ''அதற்காக நாடகத்துக்கு வராமல் இருந்து விடாதீங்க சார்! டிக்கட் இல்லாமல் கூட நீங்க வரலாம். அவசியம் வாங்க. நான் இப்ப அவசரமா ஒரு புது ஹீரோயினை புக் பண்ணப் போகிறேன். இன்னொரு நாளைக்குச் சாவகாசமா வந்து சந்திக்கிறேன்'' என்றவாறு அங்கிருந்து வேகமாகக் கிளம்பிப் போய் விட்டான்.

வியப்பும் திகைப்புமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், தான் நின்று கொண்டிருந்த 'க்யூ' வரிசை முன்னால் நகரவே அத்துடன் அவசரமாக நகர்ந்து செல்லத் திரும்பியவன், ஏதோ மின்சாரக் கம்பியை மிதித்து விட்டவன் போல் ஒரு துள்ளுத் துள்ளிப் பின்னால் சாய்ந்து அதே வேகத்தில் நிமிர்ந்து பரபரப்புடன் பார்வையை உயர்த்தினான்.

அங்கே, அந்தப் பஸ் நிலையத்தின் ஓரத்தில் ஒரு சிறுவனும் சிறுமியும் நின்று கொண்டிருந்தார்கள். சிறுவனின் கையில் சதுரமான காகித அட்டை ஒன்று இருந்தது. அதிலே கரித் துண்டால் ஏதோ எழுதப்பட்டிருந்தது. பஸ்ஸுக்காக நின்ற ஒவ்வொருவரிடமும் அந்த அட்டையைக் காட்டினான் சிறுவன். அதைப் படித்துப் பார்த்த சிலர் ஐந்து பைசா, மூன்று பைசா என்று தர்மம் செய்தனர். சிறுவனின் பின்னால் அவனுடைய சட்டையைப் பிடித்துக் கொண்டு நின்ற சிறுமி பைசாக்களை வாங்கிக் கொண்டாள்.

ஆமாம்; அவர்கள் வலம்புரியின் பிள்ளைகளான ரவியும், சந்திராவும் தான்! பசித்த முகமும், பரட்டைத் தலையும், அழுக்கேறிய சட்டையுமாகப் பார்க்கவே பரிதாபமாயிருந்தார்கள்.

வெலவெலத்து நின்ற முத்துசிவனின் எதிரே அச்சிறுவன் வந்து தலை நிமிராமலே தன் கையில் இருந்த அட்டையைத் தூக்கிக் காட்டினான். சிறுமியும் பின்னால் வந்து தலைகுனிந்து நின்றாள்.

'எங்க தாத்தா ஒரு பெரிய தேச பக்தர். எங்க பெரியப்பா ஒரு கம்பெனியிலே மானேஜர். எங்க அப்பா ஏழை. அவர் செத்துப் போயிட்டார். எங்களுக்கு உதவி பண்ணுங்க' என்று அதில் தப்பும் தவறுமாக எழுதப்பட்டிருந்தது!

ஒரு பஸ் வரவே 'க்யூ' வரிசை உடைந்து கலைந்தது. ஜனங்கள் கும்பலாக ஓடி பஸ்ஸுக்குள் பாய ஆரம்பித்தார்கள்.

''ரவி....! சந்திரா!...'' என்று உள்ளடங்கிய கதறலுடன் அவ்விருவரையும் வாரி அணைத்துத் தூக்கிக் கொண்டு அப்பால் விரைந்தான் முத்துசிவன்.

வீட்டுக்கு வந்தபின் சாவதானமாக விசாரித்த போது சிறுவன் ரவி சொன்னான் :

''கேளுங்க, பெரியப்பா! எங்க அம்மா எங்களை இங்கிருந்து அழைச்சுக்கிட்டு ரயிலேறிப் போனாங்க. அது பெரிய ஊர். அங்கே ஒரு ஹோட்டல்லே தங்கினாங்க. எங்ககூட ஒரு மாமாவும் வந்தார். அவர்கிட்ட போட்டோ எடுக்கிற பெட்டி இருந்தது. நாங்க ரெண்டு நாள் அம்மா கூடவே இருந்தோம். அப்புறம் அந்த மாமா எங்களை மறுபடியும் ரயில் வண்டியில் ஏத்தி இங்கே அழைச்சுக்கிட்டு வந்தார். அம்மாதான் அவரோடு அனுப்பிச்சாள். உங்ககிட்ட எங்களைக் கொண்டு வந்து விடப் போறதாக அந்த மாமா சொன்னார். ஆனால் ரயிலிலிருந்து இறங்கினதும் வெளியே கூட்டிக்கிட்டு வந்து விட்டுட்டு அவர் போயிட்டார். எங்களுக்கு இந்த வீட்டுக்கு வர வழி தெரியலை. பசி எடுத்துட்டது. சந்திரா அழுதாள். நானும் அழுதேன். அப்புறம் இந்த அட்டையிலே இம்மாதிரி எழுதி ஜனங்ககிட்ட காட்டிக் காசு கேட்டோம். இட்டிலி வாங்கிச் சாப்பிட்டோம். அப்புறமும் பசிச்சுது. மறுபடியும் காசு கேட்டோம். இப்படி மூணு நாளா அந்த பஸ் ஸ்டாண்டிலேயே இருந்தோம்...''

முத்துசிவனுக்கு இப்போது எல்லாம் புரிந்து விட்டது: 'ரெயின்போ பப்ளிசிடி' கம்பெனியின் போட்டோகிராபரோடு சுந்தரி எங்கோ ஓர் ஊருக்குப் போய் விட்டாள். அவர்களின் புது வாழ்வுக்கு இந்தப் பிள்ளைகள் தடங்கலாயிருப்பார்கள் என்று கருதி இவர்களை இங்கே கொண்டு வந்து சேர்த்து விடும்படி அவள் அந்தப் புகைப்படக்காரனுடன் அனுப்பியிருக்கிறாள். அவன் இந்த வீட்டுக்கு வரப் பயந்து கொண்டு ரயிலடியிலேயே பிள்ளைகளை விட்டு விட்டுத் திரும்பிப் போய்விட்டிருக்கிறான்.'

மறு நாள் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே அவனுக்கு உடம்பு நன்றாயில்லை; மனமும் சரியாயில்லை. ஒரே உளைச்சல், களைப்பு, சோர்வு. ஆனாலும் ஆபீசுக்குப் புறப்பட்டான்.

புறப்படுமுன், யாரோ ஒருவரிடம் வாங்கிய கடன் கணக்கில் அசலும் வட்டியும் சேர்ந்து எவ்வளவு பாக்கி நிற்கிறது என்பதைப் பார்ப்பதற்காகப் பழைய நாட்குறிப்புப் புத்தகம் ஒன்றைத் தேடி எடுத்துப் பார்த்தான். அதன் ஒரு பக்கத்தில் மைதிலிக்குத் திருமணமான தேதி குறித்து வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தேதியிலிருந்து இன்றையத் தேதியைச் சேர்த்துக் கணக்கிட்டான். இன்றோடு சரியாக இரண்டாண்டுகள் ஆகியிருந்தன. இதே தேதி, இதே நாளில் தான் மைதிலிக்குத் திருமணம் நடந்திருக்கிறது!....

வாசலில் ஒரு டாக்சி வந்து நின்றது. கையிலிருந்த டயரியை மேசைமேல் போட்டுவிட்டு அவசரமாக வராந்தாவுக்கு வந்தான்.

டாக்சியிலிருந்து ஒரு பெரியவரும், ஒரு பெரியம்மாளும் இறங்கினர். டிரைவர் ஒரே ஒரு டிரங்க் பெட்டியை மட்டும் இறக்கிக் கீழே வைத்தான்.

மூன்றாவதாக அந்த வாடகைக் காரிலிருந்து ஓர் இளம் பெண்ணும் மெல்ல இறங்கித் தலை குனிந்து நின்றாள். யார் அந்தப் பெண்? வெள்ளைச் சேலை; பொட்டு இல்லாத பாழ்த்த நெற்றி; பூச்சூடாமல் வாரிச் செருகிய கூந்தல்; வெறிச்சோடிய கழுத்து; மெட்டி அணியாத கால் விரல்கள்! யார் அந்தப் பெண்?

''மைதிலி!'' — பிரக்ஞை இழந்தவனாய் வராந்தாச் சுவரில் அப்படியே சாய்ந்து சரிந்தான் முத்துசிவன். வெகு நேரம் கழித்து அவன் பிரக்ஞை பெற்று எழுந்தபோது, 'மைதிலியின் கணவன் விமானத் தொழிற்சாலையில் ஏற்பட்ட ஒரு விபத்தில் சிக்கி உயிரிழந்து விட்டான்' என்ற விவரம் மின்னற்கொடியெனச் செவிகளில் வந்து புகுந்தது!

இரண்டு மாதங்களுக்குப்பின் ஒரு நாள். கடந்த இரண்டாண்டு காலமாக முத்துசிவனின் புத்தியைத் தீண்டாமலே இருந்த அந்த ஒரு கேள்வி திடீரென்று பாறை வெடிப்பிலிருந்து வெளிப்படும் தீப்புகை போல் கிளம்பி அவனைச் சுற்றிச் சூழ்ந்தது.

'அழகும் அமைதியும் கொலுவீற்ற கோயில் கோபுரமாய் விளங்கிய என் குடும்பத்தில் இத்தனை பெரிய சரிவுகள் ஏன் ஏற்பட்டன? இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன?'

உலகத்திலிருக்கும் அத்தனை கோடி மக்களும் கரங்களை ஒரு சேர நீட்டி, 'நீயே அதற்கெல்லாம் காரணம்! நீதான் அவ்வளவுக்கும் காரணகர்த்தன்!'' என்று பெருங்குரல் எடுத்துக் கூவி அவனைச் சுட்டிக் காட்டுவது போன்ற பிரமை தோன்றவே கட்டிலில் அப்படியே சுருண்டு படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சிறு பையன் போல் தேம்பித் தேம்பி அழுதான் முத்துசிவன்.


'ஆமாம்; நான்தான் காரணம்! நானேதான் மூல காரணம்! பதினாறு வருடங்களுக்குமுன்னால் இடிந்து சரிந்து

பாழ்த்துக் கிடந்த என் குடும்பம் என்னும் கோயிலை நான் ஒருவனே முன்னின்று, என் ஒருவனின் கையாலேயே ஒவ்வொரு கல்லாக எடுத்து அடுக்கி, வண்ணக் கலவை பூசி எழில்மிகு வடிவிலே ஜீரணோத்தாரணம் பண்ணி நிமிர்த்தி உயர்த்தினேன். அடுத்துச் செய்திருக்க வேண்டிய காரியம் கும்பாபிஷேகம். அந்தச் சத்தியமான, தர்மமான குடமுழுக்காட்டலைச் செய்து தேவ தேவியைக் குடியமர வைக்காமல் — நான் புனருத்தாரணம் பண்ணி எழுப்பிய கோயில் கோபுரத்தை அண்ணாந்து பார்த்து அதன் பேரழகில் மயங்கி, அந்த வெற்றிக் களிப்பிலே இறங்கி — தறி கெட்டுக் கூத்தாட ஆரம்பித்தேன். அப்படி ஆடிக் கொண்டே அக்கோயிலின் அஸ்திவாரத்தில் புதைத்திருந்த ஆதாரக் கல் ஒன்றை நானே அசைத்துப் பிடுங்கி விட்டேன். அதனால் இதோ, என் கண்ணெதிரிலேயே அந்தக் கோயில் கோபுரம் சடசடவெனச் சரிந்து விழ்ந்துவிட்டது. விளையாட்டுச் சிறுவன் கடற்கரையில் கிளிஞ்சல்களைப் பொறுக்கி எடுத்து மணற் பரப்பிலே ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கோபுரமாய் நிறுத்திய மறுகணம், அலை நீரும் கடற்காற்றும் பாய்ந்து சுழன்று வந்து கண் மூடிக் கண் திறக்கும் நொடிக்குள் அந்தக் கிளிஞ்சல் கோபுரத்தைச் சாய்த்துக் கலைத்து மணலில் புதைத்து விட்டுப் போனாற்போல், நான் கட்டி முடித்த என் குடும்பம் எனும் கோயில் கோபுரத்தை, என்னையே வடிவாகக் கொண்ட விதி என் கரங்களைக் கொண்டே கலைத்துச் சாய்த்து விட்டது!'

அறைக் கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டு அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான் முத்துசிவன்.

''என்ன பண்ணுகிறீங்க ? இந்த நேரத்திலா தூக்கம்?'' என்று கலகலவெனச் சிரித்துக் கேட்டுக் கொண்டே ஒயிலும் ஒய்யாரமுமாக உள்ளே வந்த சுகுணா, சற்றும் கூச்சமோ தயக்கமோ காட்டாமல் அவன் அமர்ந்திருந்த கட்டிலின் மேலேயே அமர்ந்தாள்.

வீட்டில் அவனுடைய அம்மாவும், தங்கை மைதிலியும் அப்போது இல்லை. கடைத் தெருவுக்குப் போயிருந்தார்கள். அங்கே அவர்களைப் பார்த்துவிட்டுத்தான் இவள் இங்கே வந்திருக்கிறாளோ? வராந்தாவில் ரவியும் சந்திராவும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்கள் பள்ளிக்குப்புறப்படவேண்டும்.



டாக்டர்: ஆகார விஷயத்திலே நீங்க ஜாக்கிரதையாக இருக்கணும். உங்க வீட்டில் மூன்று வயதுக் குழந்தை யிருக்கே அது என்ன சாப்பிடுகிறதோ அதைத்தான் நீங்க சாப்பிடணும்.

வந்தவர்: ஐயையோ! சாக்கட்டி, பலப்பம், ரப்பர், மண்ணாங்கட்டி இதெல்லாம் எப்படி சாப்பிடறது ? பழக்கமில்லையே !

வியப்பும் திகிலுமாக அவளை விழித்துப் பார்த்தான் முத்துசிவன்.

''என்ன, இப்படிப் பார்க்கிறீர்கள்? நான் ஏன் இங்கே வந்தேன்னு நினைக்கிறீங்களா ?''

பதில் ஏதும் சொல்லத் தோன்றாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

சுகுணாவின் பேச்சும், சிரிப்பும், பார்வையும், நடத்தையும் மட்டுமல்ல; அவளது ஆடை அணிமணி அலங்காரமும் வழக்கத்துக்கு மாறான விதத்தில் இன்று புதுமையாக இருந்தது.

அவள் அவனருகில் நெருங்கிச் சாய்ந்து போதைக் கிறக்கத்துடன் புன்முறுவல் பூத்தாள்.

''அன்னொரு நாள் என்கிட்ட ஏதோ இரகசியம் சொல்லப் போறதாகச் சொல்லி இந்த அறைக்கு அழைச்சு வந்தீங்க இல்லையா? அன்றைக்கு முட்டாள்தனமாக அது என்னன்னு கேட்டுத் தெரிஞ்சுக்காமலே ஓடிப் போயிட்டேன். அதனால் உங்களுக்கு என்மேல் ரொம்பக் கோபம், அப்படித்தானே ? என்னை மன்னிச்சுடுங்க ! என்னா இன்று அந்த இரகசியத்தை நான் தெரிஞ்சுக்கறதுக்காக மட்டுமல்ல, உணர்ந்து கொள்கிறதற்காகவும் வந்திருக்கிறேன்!''

மிரட்சியடைந்து போன முத்துசிவன் அவளையே வெறித்து நோக்கினான்.

சுகுணா சற்றே பின்னால் நகர்ந்து தலை குனிந்து கொண்டாள். இது காறும் மகிழ்ச்சியொளி வீசிய அவள் முகம் இப்போது திடுமென வெளிறிச் சிறுத்தது. கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது.

''ஏன் பேசாமல் இருக்கிறீங்க ? நான் சொல்றது புரியலையா ? புரியும்

பழயபாச் சொல்றேன்: உங்களுக்கு நான் சொந்தம் — உங்களுக்கே உரிய சொத்து நான் — என்கிறது எப்போதோ முடிவாகிப் போன விஷயம். அதை நீங்க மறுத்தாலும் என்னால் மறுக்க முடியாது. ஏன்னா உங்களின் சொத்தாகப் போகிறவள் நான் என்கிறதை உலகம் நல்லா தெரிஞ்சுக்கிட்டது. அது தெரிஞ்சப்புறம் நீங்க அந்தச் சொத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளாமல் விட்டுட்டா அது வேறு எங்கும் விலையாகாது. அப்படி விலையானாலும் அதற்கு மதிப்பு இருக்காது. மண்ணுக்குச் சமானமாகி மடிய வேண்டியதுதான். இதை யெல்லாம் நினைச்சுப் பார்த்தே இப்ப உங்களை நான் தேடி வந்திருக்கிறேன். என்னை நீங்க சொந்தமாக்கிக் கொள்ளணும். சொந்தப்படுத்தற சடங்கைப் பின்னால் தள்ளி வைச்சு, முன்னால் வெறும் சொந்தம் பாராட்டிக் கொள்ள மட்டும் நீங்க விரும்பறதாகத் தெரியறது. அப்படியானால் அதற்கும் நான் தயார். அதற்குப் பிறகாவது அந்தச் சொந்தப் படுத்திக் கொள்கிற சடங்கைச் செய்து முடிப்பீங்க இல்லையா? இந்த ஒரு தைரியத்திலும் நம்பிக்கையிலும்தான் அந்த முடிவோடு இங்கு வந்திருக்கிறேன்......!''

இவ்வளவையும் அமைதியாகக் கேட்டு விட்டு மெல்லச் சிரித்தான் முத்துசிவன். சிரிப்பா அது? அழுகையின் ஒரு புதிய தோற்றம்!

சிரித்துக் கொண்டே எழுந்த அவன் மௌனமாக வெளியே நடந்தான். திகிலும் குழப்பமுமாக அவனைப் பின் தொடர்ந்தாள் சுகுணா.

வாசலில் விளையாடிக் கொண்டிருந்த ரவியையும், சந்திராவையும் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், மெல்லச் சுகுணாவின் பக்கம் திரும்பினான். அவன் கண்கள் பனித்தன.

''என்னை மன்னிச்சுடு, சுகுணா! உன் வேண்டுகோளை ஏற்க முடியாத நிலையில் இருக்கிறேன். ஏன்னு கேட்கிறாயா? இதோ, இங்கே விளையாடிக் கொண்டிருக்கிற இந்த ரெண்டு பிள்ளைகளும் என் தம்பி பிள்ளைகள். இதுகளுக்குத் தாயும் இல்லை, தகப்பனும் இல்லை. நான்தான் எல்லாம். என்னை நம்பித்தான் இவர்கள் வளரணும், படிக்கணும்; ஆளாகணும்; பிறகு குடியும் குடித்தனமுமாக வாழணும். அத்தனை காரியங்களையும் நானே செய்தாகணும். ஒரு குறையும் வைக்காமல் செய்து முடிக்கணும். அது என் தலையில் சுமந்த கடமையாகிப் போச்சு. இதை இனி நான் தட்டிக் கழிக்க முடியாது. அதனால், பதினாறு வருஷங்களுக்குமுன் என் தம்பிகள் தங்கைகளுக்காகச் செய்த அதே சபதம் மாதிரி இந்தப் பிள்ளைகளுக்காகவும் நேற்றிரவு என் நெஞ்சுக்குள் ஒரு சபதத்தை ஏற்று அதை ஓர் இலட்சியமாக்கி நிறுத்திக் கொண்டேன். இதைச் சாதித்து முடிக்கிற வரையில் எனக்கு வேறு சிந்தனை கிடையாது, விருப்பம் கிடையாது. வாழ்வும் கிடையாது. இந்த இலட்சிய சபதத்துக்குத் திருமணம் ஒரு தடங்கலாக இருக்கும் என்று முன் போலவே நினைக்கிறேன். அவ்வாறு நினைப்பது என் பலவீனமா யிருக்கலாம். நான் படுமோசமான பலவீனன் என்பது எனக்கே நன்றாகத் தெரியும். இவ்வளவு காலம் உன் வாழ்வைத் தரிசாக்கிப் போட்டதற்காக என்னை மன்னித்துவிடு! இனி மற்றதை உன் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்......''

வானுலக தேவதை வழி தப்பி வந்து நிற்பது போல் சோகமே வடிவமாய்க் கண்ணீர் சோர நின்றிருந்த சுகுணா, நீண்ட நேர மௌனத்துக்குப் பின் தலை நிமிர்ந்து அவனை நோக்கி எழில் வழிய இளநகை புரிந்தவாறு, ''எனது அந்த முடிவு என்ன என்று கேட்கிறீர்களா? உங்களின் இந்த இரண்டாவது இலட்சிய சபதம் நிறைவேறும் வரையில் உங்களுக்காக நான் காத்திருப்பேன்!'' என்று தழுதழுத்த குரலில் — ஆனால் உறுதியோடு — சொன்னாள்.

பள்ளிக்கு நேரமாகி விட்டதை உணர்ந்த ரவியும் சந்திராவும் வீட்டுக்குள் ஓடிச் சீருடை அணிந்து கொண்டு புத்தகப் பெட்டிகளுடன் வெளியே வந்தனர்.

சுகுணாவைப் பார்த்து அழகாகப் புன்முறுவல் பூத்த முத்துசிவன் மெல்லப் போய் ரவியை வலது கையிலும், சந்திராவை இடது கையிலுமாகப் பிடித்து அழைத்துக் கொண்டு அவர்கள் பாடசாலையை நோக்கி நடந்தான்.



Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon